# அன்பு அலறுகிறது

விந்தன்

புத்தகப் பூங்கா

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# அன்பு அலறுகிறது

## விந்தன்

புத்தகப் பூங்கா

7, அருணாசலம் தெரு, சென்னை-600 030

வரிசை எண் : 9

நவம்பர் : 1986

உரிமை பதிவு

விலை ரூ. 14-50

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்,
இராயப்பேட்டை,
சென்னை-14.

# பதிப்புரை

மறுமலர்ச்சி எழுத்தாசிரியர் திரு. **விந்தன்** அவர்கள் எழுதிய **'அன்பு அலறுகிறது'** நாவல் தமிழகத்து இலக்கியப் பத்திரிகையான **''அமுத சுரபி''** மாத இதழில் தொடர்ந்து வெளிவந்த போது பல்லாயிரக் கணக்கான தமிழர்களின் இலக்கிய ஆர்வத்திற்கு விருந்தாக அமைந்தது மட்டுமல்ல, இலக்கியச் சிந்தனையாளர்களின் சிந்தனையைத் தூண்டி விட்டு மாறுபட்ட கருத்துக்களை எல்லாம் எழுப்பிவிட்டது எனலாம்.

அப்படிப்பட்ட ஒரு சிறப்புமிக்க நாவலை புத்தக உருவில் வெளியிட உரிமை அளித்த ஆசிரியர் அவர்களுக்கு எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**—பிரசுரத்தார்.**

# விந்தனின் எமது நூல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | விந்தன் கதைகள் (சிறுகதைத் தொகுப்பு) | ... | 15 | 00 |
| 2. | குட்டிக் கதைகள் | ... | 5 | 50 |
| 3. | பசிகோவிந்தம் (விமர்சனம்) | ... | 4 | 50 |
| 4. | கண் திறக்குமா? (நாவல்) | ... | 11 | 50 |
| 5. | எம். கே. டி. பாகவதர் கதை (வாழ்க்கை வரலாறு) | ... | 12 | 00 |
| 6. | ஒரே உரிமை | ... | 14 | 00 |
| 7. | ஓ மனிதா! | ... | 12 | 00 |
| 8. | இதோ ஒரு மக்கள் பிரதிநிதி | ... | 12 | 00 |

# அன்பு அலறுகிறது

## கனவில் மலர்ந்த கதை

இரவில் சாப்பிட்ட பிறகு, ஏதாவது ஒரு நாவலை எடுத்து நான் தூக்கம் வரும் வரை படித்துக்கொண்டிருப்பது வழக்கம். அந்த வழக்கத்தையொட்டி அன்றும் ஒரு நாவலை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்தேன். ஒரே புழுக்கமாயிருந்தது; தோட்டத்துக்கு வந்தேன். வேனிற்காலத்து வெண்ணிலவு தண்ணொளிக் கரங்களை நீட்டி என்னை வரவேற்றது; 'இதோ வந்துவிட்டேன்!' என்று மடக்கும் கட்டிலைத் தூக்கிப் பிரித்துப் போட்டு அங்கேயே படுத்தேன். தென்றல் தாலாட்ட, பூங்கொடிகள் மலர்க் கொத்தால் வெண்சாமரம் வீச, சம்பளம் இல்லாத சேவையைத் தன்னலம் மிக்க ஒரு முதலாளி எவ்வளவு சந்தோஷத்துடன் அனுபவிப்பானோ, அவ்வளவு சந்தோஷத்துடன் அவற்றின் சேவையை

அனுபவித்தபடி காவலைப் பிரித்தேன்; கண்ணுங் கருத்தும் அதன் பக்கங்களை ஒவ்வொன்றாகப் புரட்டுவதிலே கலந்தன.

அதற்குப் பின் எப்பொழுது தூங்கினேனே, அது எனக்குத் தெரியாது.

ஒரு கனவு; அந்தக் கனவிலே கட்டழகி ஒருத்தி கனிவே உருவாய் வந்து நின்றாள்.

"யார் அம்மா, நீங்கள்?"

விரக்தியுடன் அவள் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?"

"உண்மையாகவே என்னை நீங்கள் உங்களுடைய அம்மாவாக நினைக்கிறீர்களா?"

"ஆமாம். இந்த உலகத்தில் பிறந்திருக்கும் ஒவ்வொரு பெண்ணையும் நான் என்னுடைய அம்மாவாகத்தான் நினைக்கிறேன்; அதுதான் எங்கள் தமிழ்நாட்டின் பண்புங்கூட!"

"நினைப்பது சரி; அதன்படி நடக்கிறீர்களா?"

"நடக்கிறேன் அம்மா, நடக்கிறேன்!"

"உங்களுக்குத் தெரிந்த பெண் ஒருத்தி, உங்களுக்குச் சரிசமானமான வயதுடையவளாக இருந்தால்?"

"அதனாலென்ன, வழிவழியாக வந்துகொண்டிருக்கும் பெண்குலமே தாய்மைக் குலந்தான், எங்களுக்கு!"

"அப்படியானால் ஆண் குலத்தைத் தந்தைக்குலம் என்று ஏன் வைத்துக்கொள்ளக்கூடாது?"

"வைத்துக்கொள்ளலாம், தற்கால நாகரிகத்தைக் கை விட்டுக் கற்காலக் காட்டுமிராண்டித்தனத்தைக் கைக் கொண்டால்!"

அவள் மறுபடியும் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று நான் மறுபடியும் கேட்டேன்.

"ஒத்த வயதுடையவர்கள் தமிழ்நாட்டில் நெருங்கிப் பழக வேண்டுமானால்—ஒன்று, அவர்கள் உடன் பிறந்தவர்களாக இருக்க வேண்டும்; அல்லது கணவன் மனைவியாக இருக்க வேண்டுமாமே?"

"ஆமாம்; தமிழ்நாட்டின் தனிச் சிறப்பு அது. வாழ்க்கை இன்பத்தைத் தமிழர்கள் ஆண்-பெண் உடலில் மட்டும் தேடுவதில்லை அம்மா, உள்ளத்திலும் தேடுகிறார்கள். அத்துடன், உடலும் உடலும் கலந்து காணும் இன்பத்தைவிட உள்ளமும் உள்ளமும் கலந்து காணும் இன்பமே உயர்ந்த தென்றும் உறுதியான தென்றும் அவர்கள் கருதுகிறார்கள்; அதற்காகவே உடன் பிறக்காத ஆண்-பெண் உறவுகளை அவர்கள் வயதுக்குத் தக்கபடி வரையறுத்தும் இருக்கிறார்கள்!"

"அதற்காகச் சிநேகிதனுக்கு ஒரு சிநேகிதன் இருப்பது போல, சிநேகிதிக்கு ஒரு சிநேகிதி இருப்பது போல—சிநேகிதனுக்கு ஒரு சிநேகிதியும், சிநேகிதிக்கு ஒரு சிநேகிதனும் இருக்கக்கூடாதா, என்ன?"

"இயற்கை அதற்கு இடங்கொடுக்காதபோது 'இருக்கக்கூடாதா, என்ன?' என்று கேட்பதில் என்ன அர்த்தமம்மா, இருக்கிறது?"

"தாயும் சேயும் போல இருப்பதற்கு மட்டும் இயற்கை இடங்கொடுக்குமோ?"

"கொடுக்கும், அத்தகைய நினைப்பில் அன்புக்கு மட்டுமே இடம் இருப்பதால்!"

அவள் ஒரு கணம் மௌனமாயிருந்தாள். மறு கணம் "அன்பிற்கு உருவில்லை, நிறமில்லை, அழிவில்லை என்கிறீர்களே, அது உண்மைதானா?" என்றாள்.

"அத்துடன் மரத்துக்கு மரம் மாறி மாறித் தாவும் குரங்கைப் போல, ஆளுக்கு ஆள் அது மாறி மாறித் தாவுவதும் இல்லை என்று சேர்த்துக் கொள்ளுங்கள்!" என்றேன் நான்.

அவள் முகம் மலர்ந்தது; அந்த முகத்திலே அவளுடைய அகமும் மலர்வதை நான் என்னுடைய அகக்கண்ணால் கண்டேன்.

அதற்குப் பின் அவள் என்ன நினைத்தாளோ என்னமோ, "நானும் தமிழச்சிதான்!" என்றாள் பெருமையுடன்.

"ரொம்ப சந்தோஷம்; அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நானும் நினைத்தேன்!" என்றேன் நான்.

"அது எப்படி நினைத்தீர்கள்?"

"இல்லாவிட்டால் ஆளுக்கு ஆள் மாறி மாறித் தாவாமலிருப்பதுதான் அன்பு என்று நான் சொன்னதும் உங்களுடைய முகம் மலர்ந்திருக்காதே!"

அவ்வளவுதான்; "ஆஹா! இதைக் கேட்கும் போது நான் அனுபவிக்கும் இன்பமல்லவா. உண்மையான இன்பம்!" என்று ஒரு கணம் கண்ணை மூடி அந்த இன்பத்தை அவள் அனுபவித்தாள். மறு கணம், "உலகம் வாழத் தெரியாதவர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்குமாமே, அது உண்மையா?" என்றாள்.

"பொய்; வாழத் தெரியாதவர்கள் யாராவது இருந்தால்தானே அம்மா, உலகம் அவர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கப் போகிறது? இந்த உலகத்தில் பிறக்கும் ஒவ்வொருவரும்—ஏன், ஒவ்வொரு ஜீவனும் வாழத்தெரிந்ததே; வாழத் தெரியாத எவரும், எந்த ஜீவனும் உலகில் பிறப்பதில்லை!"

"ஆச்சரியமாயிருக்கிறதே! அப்படி யாருமே எதுவுமே இல்லையென்றா நீங்கள் சொல்லுகிறீர்கள்?"

"ஆமாம்; வாழ முடியாதவர்களை வாழத் தெரியாதவர்கள் என்று எப்படிச் சொல்வது?"

"சொல்ல முடியாதுதான்!" என்று நான் சொன்னதை ஆமோதித்துவிட்டு, "வாழத் துடிப்பவர்களுக்குக் குறுக்கே உலகம் நிற்கிறதாமே, அது உண்மைதானா?" என்றாள் அவள்.

"நிற்கும்; நிற்கத்தான் வேண்டும்!" என்றேன் நான்.

"ஏனாம்?"

"நிற்காவிட்டால் உலகம் மனிதர்களின் உலகமாயிருக்காது மிருகங்களின் உலகமாயிருக்கும்!"

"அது எப்படி?"

"கொலைகாரன் வாழத் துடிக்கிறான்; அவனுக்குக் குறுக்கே உலகம் நிற்காமல் இருக்க முடியுமா? திருடன் வாழத் துடிக்கிறான்; அவனுக்குக் குறுக்கே உலகம் நிற்காமல் இருக்க முடியுமா? விட புருஷன் வாழத் துடிக்கிறான்; அவனுக்குக் குறுக்கே உலகம் நிற்காமல் இருக்க முடியுமா? விபசாரி வாழத் துடிக்கிறாள்; அவளுக்குக் குறுக்கே உலகம் நிற்காமல் இருக்க முடியுமா?"

"இருக்க முடியாதுதான்!" என்றாள் அவள். பிறகு "இருந்தால் உலகம் மனிதர்களின் உலகமாயிருக்க முடியாதுதான்!" என்றாள் அவள்.

"அது சரி. நீங்கள் யாரென்று எனக்குச் சொல்லவேயில்லையே?" என்றேன் நான்.

"சொல்கிறேன்; சொல்லத்தானே வந்திருக்கிறேன்!" என்றாள் அவள்.

"சொல்லுங்கள்?"

"நான் தான் சிநேகிதி!"

"சிநேகிதியா?"

"ஆமாம்; தூங்குவதற்கு முன்னால் நீங்கள் படித்துக்கொண்டிருந்தீர்களே, அந்த நாவலில் வரும் சிநேகிதி நான் தான்!"

தூக்கிவாரிப் போட்டது போலிருந்தது எனக்கு. மார்பின்மேல் கிடந்த புத்தகத்தை எடுத்து பரபரப்புடன் பார்த்தேன்; 'சிநேகிதி' என்று அதன்

தலைப்பில் போட்டிருந்தது; வியப்பின் மிகுதியால் விழித்தேன்.

"சிநேகிதி என்றால் சிநேகிதிக்குச் சிநேகிதி அல்ல நான்; சிநேகிதனுக்குச் சிநேகிதி!" என்றாள் அவள்.

"ஓஹோ, யார் அந்தச் சிநேகிதன்?" என்று நான் கேட்டேன்.

"உங்களைப் போன்ற ஓர் எழுத்தாளர்!"

"என்னைப் போன்ற எழுத்தாளர் என்று தயவு செய்து சொல்லவேண்டாம்; நான் எப்பொழுதும் நானாகவே இருப்பதுதான் வழக்கம்!"

"அவரும் அப்படித்தான் சொன்னார்!"

"இருக்கலாம்; அதற்காக என்னை அவருடன் சேர்த்து விடாதீர்கள்!"

அவள் சிரித்தாள். சிரித்துவிட்டு, "உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, அதுவரை நீங்கள் அவருடைய நாவலைப் படித்தீர்களோ படிக்கவில்லையோ, அவர் என்னைக் காதலித்தார்!"

"காதல் கதாசிரியரோ?"

"ஆமாம்."

"சரிதான்; பெரும்பாலும் காதல் சொப்பனாவஸ்தையிலேயே தவித்துக்கொண்டிருக்கும் அவரைப் போன்றவர்கள், எதை வேண்டுமானாலும் யாரை வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் காதலிப்பார்கள்; எதை வேண்டுமானாலும் யாரை

வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் கைவிடுவார்கள்!''

''இதில் வேடிக்கை என்னவென்றால் அவர் என்னைக் கைவிடவில்லை, நான்தான் அவரைக் கைவிட்டேன்!''

''சரி, முந்திக்கொண்டுவிட்டீர்கள் போலிருக்கிறது!''

''இத்தனைக்கும் நான் யார், தெரியுமா? இன்னொருவருடைய மனைவி!''

''அடி சக்கை, காதலில் புதுமையும் புரட்சியும் வேண்டுமானால் இன்னொருவருடைய மனைவியைத் தான் காதலிக்க வேண்டும் என்று அந்த எழுத்தாளர் தீர்மானித்துவிட்டார் போலிருக்கிறது!''

''அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறீர்கள்? கார் விபத்தில் என் கணவர் தம்முடைய ஆண்மையை இழந்தாலும் இழந்தார், என்னுடைய பெண்மையைத் தன்னுடைய ஆண்மைக்குப் பலி கொள்ளத் துணிந்து விட்டார் அந்த எழுத்தாளர்!''

''அதைவிடப் புதுமை இது; அதைவிடப் புரட்சி இது!''

''அது மட்டுமல்ல; 'பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறனன்றோ ஆன்ற ஒழுக்கு!' என்று நம் வள்ளுவர்பெருமான் சொன்னாரல்லவா, அந்தப் பேராண்மை, 'பிறன்மனை நோக்குதலே!' என்று அவர் எண்ணிவிட்டார்!''

''அட கடவுளே, எண்ணத்தில் ஏற்பட்ட புரட்சியும் புதுமையும் எழுத்திலும் ஏற்பட்டுவிட்டதாக்கும்!''

“எழுத்தோடு நின்றிருந்தால் தேவலையே, வாழ்க்கையிலும் புகுந்துவிட்டது! நான் என்ன செய்வேன்? என் கணவரோ தம்முடைய ஆண்மையை இழந்தாலும் என்மேல் கொண்ட அன்பை இழக்கவில்லை!”

“எப்படி இழக்க முடியும்? இழக்க முடியாததை, இழந்தால் மீண்டும் பெறமுடியாத, அழிக்க முடியாத, அழிக்க முயல்பவர்களால் அபகரிக்க முடியாத அருஞ் செல்வமாயிற்றே, அது!”

“நானும் அவர்மேல் கொண்ட அன்பை இழக்க வில்லை!”

“ஏதோ, தமிழ்நாட்டின் தவப் பயன்; தமிழர்கள் அன்புக்கு இட்ட அஸ்திவாரத்தின் பலன்!”

“நீங்களே சொல்லுங்கள்; ஆண் கழுதை ஆண்மை இழந்தால் பெண் கழுதை இன்னொரு ஆண் கழுதையைத் தேடலாம்; ஆண் நாய் ஆண்மை இழந் தால் பெண் நாய் இன்னொரு ஆண் நாயைத் தேட லாம்; ஆண் பன்றி ஆண்மை இழந்தால் பெண் பன்றி இன்னொரு ஆண் பன்றியைத் தேடலாம்; ஆண்மகன் ஆண்மை இழந்தால் பெண்மகள்— அதிலும், தமிழ்நாட்டுப் பெண்மகள்—இன்னொரு ஆண் மகனைத் தேடலாமா?”

“தேடினால் வித்தியாசம் இல்லாமற் போய்விடுமே அம்மா!”

“அதனால்தான் கடைசியாக அவரை ஏரோப்ளே னில் ஏற்றிப் பர்மாவுக்கு அனுப்பிவிட்டு, அந்த எழுத்தாளர் நீலிக் கண்ணீர் வடித்தவண்ணம்

என்னுடைய ரத்தக்கண்ணீரைத் துடைக்க வந்த போது......"

"அவர் எதற்காக நீலிக்கண்ணீர் வடித்தார், நீங்கள் எதற்காக ரத்தக்கண்ணீர் வடித்தீர்கள்?"

"அதுதான் என் கதை; விசித்திரமும் வேதனையும் மிக்க கதை!" என்றாள் அவள், கண்களில் துளித்த நீருடன்.

"சொல்லுங்கள், விவரமாகச் சொல்லுங்கள். எனக்காகச் சொல்லாவிட்டாலும் உங்கள் சகோதரிகளான தமிழ்நாட்டுப் பெண்களுக்காகச் சொல்லுங்கள்!" என்றேன் நான்.

அவள் சொன்னாள்:

# 1. அந்த நாள்

என்னுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத நாள், அந்த நாள்—என்னுடைய வாழ்க்கையில் மட்டுமென்ன, நம் எல்லோருடைய வாழ்க்கையிலுமே அந்த நாள், மறக்க முடியாத நாள்தான்!

அன்று காலைதான் அவருக்கு நான் இரண்டாந் தாரமாக வாழ்க்கைப்பட்டேன். அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, அக்கினியை வலம் வந்தேன். பஞ்ச பூதங்களின் சாட்சியாக, பந்துமித்திரர்களின் சாட்சியாக அவர் என்னுடைய கழுத்தில் தாலியைக் கட்டினார். அந்தத் தாலியைச் சில சீர்திருத்தவாதிகள் சொல்வதுபோல நான் தூக்குக் கயிறாகவோ, அடிமையின் சின்னமாகவோ மதிக்கவில்லை; காமுகரிடமிருந்து என்னைக் காக்கும் சாட்டையாகவும், ஆணும் பெண்ணும் கலந்த அன்பின் சின்னமாகவுமே மதித்தேன். அன்றிருந்து சட்ட பூர்வமாகவும் சாஸ்திர பூர்வமாகவும் அவர் எனக்கு முதல் கணவரானார்; நான் அவருக்கு இரண்டாவது மனைவியானேன்!

நல்ல வேளையாக முதல் மனைவி இருக்கும்போதே அவர் என்னை இரண்டாந்தாரமாகக் கொள்ளவில்லை; இல்லாத போதுதான்—அதாவது, இறந்து மறைந்த பிறகுதான் கொண்டார்.

அவள் இறந்தபோது அவர்மேல் அவள் கொண்டிருந்த அன்பும் இறந்திருக்கலாம்; அவர் இறக்காத போது அவள் மேல் அவர் கொண்டிருந்த அன்பு எப்படி இறந்தது. அவளிடம் செலுத்திவந்த அன்பை அவரால் எப்படி என்னிடம் செலுத்த முடிந்தது என்று எனக்குப் புரியவில்லை! புரியாவிட்டால் என்ன, அதற்காக ஆண் குலத்தைப் போலவே பெண் குலமும் அன்பை — அதன் மூலம் தன் ஆன்மாவைக் கொன்றுவிட வேண்டுமா என்ன?

என்னைப் பொறுத்தவரை என் மனப்பூர்வமாகவே நான் அவருடைய கையைப் பற்றினேன்; அதே மாதிரி அவரும் தம்முடைய மனப் பூர்வமாகத்தான் என்னுடைய கையைப் பற்றியிருப்பார் என்று நான் அன்றும் நம்பினேன்; இன்றும் நம்புகிறேன்!

பார்க்கப்போனால் எங்களுக்குள்ளே இருந்த வித்தியாசமெல்லாம் வயது வித்தியாசந்தான். மற்றபடி, வேறு வித்தியாசம் எதுவும் எங்களுக்கிடையே இல்லை.

இதற்காக உற்றாரும் உலகத்தாரும் என்மேல் ஏன் அனுதாபம் கொள்ள வேண்டும்? எனக்கு நானேதான் ஏன் அனுதாபம் தெரிவித்துக்கொள்ள வேண்டும்?

இந்த ஒரே காரணத்துக்காக நான் அவருடைய மகளாகிவிட முடியுமா? அவர்தான் என்னுடைய தந்தையாகிவிட முடியுமா?

அதிலும், யாராவது ஒரு வயோதிகரை இரண்டாந் தாரமாகவோ, மூன்றாந் தாரமாகவோ கல்யாணம் செய்து கொள்ளும் பெண்ணிடம் நான் எப்பொழுதுமே

அனுதாபம் கொள்வது கிடையாது—ஏன் கொள்ள வேண்டும்? — வயோதிகரை வெறுத்து வாலிபரைக் கல்யாணம் செய்து கொள்ளும் பெண் மட்டும் தீர்க்க சுமங்கலியாக இருந்து விடுகிறாளா, என்ன?

எது எப்படியிருந்தபோதிலும் எந்த வித்தியாசமும் பார்க்காத மரணம் ஒரு புதிர்; எந்த நாட்டு விஞ்ஞானியாலும் இன்றுவரை விண்டுரைக்க முடியாமல் இருக்கும் விந்தை மிக்க புதிர். அந்தப் புதிருக்கு முன்னால் மனிதன் தன்னைப் பகுத்தறிவுள்ளவன் என்று சொல்லிக்கொள்வதற்காகப் பரிதாபப்படாமல் பிறருக்காகப் பரிதாபப்படுவது விந்தையிலும் விந்தை யல்லவா?

தேக தத்துவ ரீதியாகப் பார்த்தாலும் சரி, மனோதத்துவ ரீதியாகப் பார்த்தாலும் சரி — இரண்டிலுமே வாலிபரைவிட வயோதிகர் மேல் என்பேன் நான். இதை அனுபவ பூர்வமாகச் சொல்ல வில்லை; என்னைச் சுற்றி வாழ்ந்தவர்களையும் வாழ்பவர்களையும் ஊடுருவிப் பார்த்தே சொல்லுகிறேன்.

இந்த நிலையில், மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால் அவனுக்கு அன்பை விட்டால் வேறு கதியுண்டா?

இல்லை; இல்லவே இல்லை.

அத்தகைய அன்பு—தெய்வீகமான அன்பு— கேவலம், உடலை ஒட்டி வளர்வதிலும் உடலை ஒட்டித் தேய்வதிலும் ஏதாவது அர்த்தமுண்டா?

இல்லை; இல்லவே இல்லை.

அதனால்தான் என்னைப் பொறுத்தவரை அவர் மேல் கொண்ட அன்பு உயிரையும் உள்ளத்தையும் ஒட்டித்தொட்டு வளரவேண்டுமென்றும், உயிரையும் உள்ளத்தையும் ஒட்டித் தொட்டு தேய்ந்து மாய்ந்து போக வேண்டுமென்றும் நான் விரும்பினேன். அந்த விருப்பத்தால் ஏற்பட்ட உள்ள நிறைவோடு தோழிகள் புடைசூழக் கையில் பாலுடன் அன்றிரவு நான் அவருடைய அறையை நோக்கிச் சென்றேன்—ஆம், அதுதான் எனக்கு முதல் இரவு; அவருக்கு அது எத்தனையாவது இரவோ?

இம்மாதிரியான எண்ண அலைகளின்மேல் நான் மெள்ள மெள்ள மிதந்து சென்று கொண்டிருந்தபோது, ''சீக்கிரம் போடி, தாத்தா தூங்கிவிடப் போகிறார்!'' என்றாள் என் தோழிகளில் ஒருத்தி, என்னுடைய காதோடு காதாக.

''தூங்கினால் என்னடி, பாலை இவளே குடித்து விட்டுப் படுத்துக் கொள்கிறாள்!'' என்றாள் இன்னொருத்தி.

''விடிந்ததும் விடியாததுமாக இருக்கும்போதே ஒருவருக்கும் தெரியாமல் நரைத்த மயிரைப் பிடுங்கி விடவேண்டாமா? சீக்கிரம் படுத்தால்தானே சீக்கிரம் எழுந்திருக்க முடியும்?'' என்றாள் அவள்.

''அதுவும் சரிதான்!'' என்றாள் இவள்.

''மாப்பிள்ளைக்கு இருந்த மொத்தம் முப்பத்திரண்டு பற்களில் மூன்றைக் காணோமாமே?'' என்றாள் மற்றொருத்தி.

“அதற்காகப் போலீஸாரை அழைக்கவேண்டாம். இந்தத் திருடிதான் அந்தப் பற்களைத் திருடி வைத்துக் கொண்டிருக்கிருளாம்’’ என்ருள் மற்றும் ஒருத்தி.

“அதனுலென்ன, அத்தனை பற்களும் காணுமற் போனுலும் இனிமேல் அவருக்குக் கவலையில்லை; எதை வேண்டுமானுலும் இடித்துக் கொடுக்கத்தான் இவள் இருக்கிருளே!’ என்ருள் அவள்.

“இடித்து மட்டுமா கொடுப்பாள்! மென்றும் கொடுப்பாள்!’’ என்ருள் இவள்.

இந்தச் சமயத்தில் என் கல்லூரித் தோழியான காந்தா ஓடோடிவந்து, “உங்களுக்குத் தெரியுமோ, இவளுடைய கையைப் பிடித்ததும் தாத்தா தம்முடைய கையிலிருந்த தடியைத் தூக்கித் தூர எறிந்து விட்டராம்!’’ என்ருள், கலகலவென நகைத்துக் கொண்டே.

“அவருக்கென்னடி? லலிதாவைக் கல்யாணம் செய்து கொண்டாலும் செய்துகொண்டார்—தடிக்குத் தடியுமச்சு, அமாவாசை விரதம் இருக்க ஆளுமாச்சு!’’ என்ருள், காந்தாவின் தோழி சாந்தா!

இந்த ‘அவலக் குர’லைக் கேட்டதும் தாய் தந்தையற்ற எனக்குத் தாயாயிருந்து வந்த என் அத்தையின் கண்களிலே நீர் சுரந்தது; மாமாவோ கலங்கிய கண்களை மேல் துண்டால் மறைத்துக் கொண்டே அப்பால் போய்விட்டார்.

தர்மசங்கடமாக இருந்தது எனக்கு; போகிற போக்கில் அத்தையின் கண்களைத் துடைத்துவிட்டுச் சிரிக்க முடியாமல் சிரித்தேன்!

அப்போது ஆறே வயது நிறைந்த என் அத்தை மகள் லக்ஷ்மி, "மாமி, மாமி! நீ ஏன் மாமி என்கிட்ட படுத்துக்காம தாத்தாகிட்டப் படுத்துக்கப் போறே?", என்றாள், தன் சின்னஞ்சிறு கரத்தால் என் தோளைப் பற்றிக்கொண்டே.

அவ்வளவுதான், எல்லோரும் 'கொல்' லென்று சிரித்து விட்டார்கள். அதுதான் சமயமென்று, நானும் சட்டென்று உள்ளே நுழைந்துவிட்டேன்—ஆம், பிறர் பிடித்துத் தள்ள வேண்டிய அவசியத்துக்கு என்னை நான் அன்றே உள்ளாக்கிக் கொள்ளவில்லை!

"உள்ளேதான் நீயே நுழைந்துவிட்டாய்; கதவைத் தாளிடும் வேலையையாவது தாத்தாவிடம் விட்டுவிடு!" என்றாள் காந்தா, வெளியே இருந்தபடி.

"அதைத்தான் அவர் செய்வானேன்?" என்று நானே கதவைத் தாளிட்டுவிட்டு, அவருடைய காலடியில் விழுந்து வணங்கினேன். "இனி நான் உங்களுடையவள்; என்னுடைய வாழ்வும் தாழ்வும் இனி உங்கள் கையில்தான் இருக்கிறது!" என்றேன்.

"இல்லை லலிதா; கடவுளின் கையில் இருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டே, அவர் என்னைத் தூக்கி நிறுத்தினார்.

"என்னைப் பொறுத்தவரை அவரும் நீங்களே!" என்று நான் அவருடைய மார்பில் முகத்தைப் புதைத்தேன்.

என்ன காரணத்தாலோ என் இதயம் நீராகக் கரைந்தது; கரைந்த நீர் கண்களின் வழியாக வழிந்தது.

"ஏன் இந்தக் கண்ணீர்?" என்ருர் அவர்.

"நீங்கள் துடைப்பதற்காக! இன்று மட்டுமல்ல; என்றும் துடைப்பதற்காக!" என்றேன் நான்.

"துடைப்பேன் லலிதா, துடைப்பேன்!" இன்றும் துடைப்பேன்; என்றும் துடைப்பேன்!" என்று சொல்லிக் கொண்டே, அவர் என் கண்ணீரைத் துடைத்தார்.

அவருடைய கையைப் பற்றி நான் என்னுடைய கண்களில் ஒத்திக்கொண்டேன்; என்னுடைய கையைப் பற்றி அவர் என்னைத் தமக்கருகே உட்கார வைத்துக் கொண்டார்.

ஒரு கணம் இருவரும் மௌனமாக இருந்தோம். மறு கணம் எதிர்த்தாற்போலிருந்த திராட்சைக் கொத்தை நோக்கி அவருடைய கை நீண்டது. "இல்லை; இனி அது உங்களுடைய வேலையில்லை!" என்று சொல்லிக்கொண்டே, அதில் ஒன்றைத் திருகி எடுத்து நான் அவரிடம் கொடுத்தேன்.

"வாழ்க்கை 'ஒன் வே டிராபிக்'காக இருக்கக் கூடாது. லலிதா!" என்று சிரித்துக்கொண்டே, அவரும் ஒன்றைத் திருகி எடுத்து என்னிடம் கொடுத்தார்.

பரஸ்பரம் சாப்பிட்டு முடித்தபின் பாலை எடுத்து அவரிடம் நீட்டினேன்.

பருகினுர்!

ஆனுல், "பால் பருகப் பிறந்தவர்கள் ஆண்கள் மட்டுந்தான்!" என்று அவர் எல்லாப் பாலையும் பருகி-

விடவில்லை; பாதியைப் பருகிவிட்டுப் பாதியை என்னிடம் நீட்டினார்.

நானும் பருகினேன்!

எச்சில் கலந்தது; இதயமும் கலந்தது.

இந்தச் சமயத்தில், "ஜன்னலை மூட மறந்துவிட்டாயேடி!" என்றொரு குரல் வெளியேயிருந்து கேட்டது.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன்; திறந்திருந்த ஜன்னலுக்கு வெளியே காந்தா நின்றுகொண்டிருந்தாள்!

"சரிதான், போடி!" என்று சிரித்துக்கொண்டே சென்று அதைச் சாத்திவிட்டு வந்தேன்.

"நம்முடைய கல்யாணத்தில் உன்னுடைய மாமா ராமையாவுக்கு மட்டுந்தான் விருப்பம் இருக்குமென்று நினைத்தேன்!" என்றார் அவர்.

"இல்லை; எனக்கும் விருப்பந்தான்!" என்றேன் நான்.

"அத்தை நாகம்மாளுக்கு?"

"விருப்பமே!"

"சரி, உன் தோழிகளுக்கு?"

"விருப்பமில்லை!"

"ஏன்?"

"உங்களை நான் கல்யாணம் செய்துகொள்ளவில்லையாம்; உங்களுடைய பணத்தைத்தான் கல்யாணம் செய்து கொண்டேனாம்!"

"உண்மைதான்!" என்றார் அவர்.

நான் திடுக்கிட்டேன்; "எது உண்மை? உங்களைக் கல்யாணம் செய்துகொள்ளாமல் உங்களுடைய பணத்தை நான் கல்யாணம் செய்துகொண்டதா உண்மை?" என்று திருப்பிக் கேட்டேன்.

"ஆம்!" என்றார் அவர், அழுத்தந் திருத்தமாக.

"அப்படியானால் என்னுடைய அன்பில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா?"

"கிடையாது; கிடையவே கிடையாது!"

அவ்வளவுதான்; ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்து விட்டது எனக்கு. "அட, பாவி!" என்று கத்திய வண்ணம் அவருடைய கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டேன்!

அடிபட்ட இடத்தைத் தடவிக் கொடுத்தபடி அவர் சிரித்தார்; விழுந்து விழுந்து சிரித்தார். "இப்போது தான் உன்னிடம் எனக்கு நம்பிக்கை பிறந்தது; இப்போதுதான் உன்னிடம் எனக்கு நம்பிக்கை பிறந்தது!" என்று சொல்லிச் சொல்லி, விழுந்து விழுந்து சிரித்தார்!

எனக்கு ஒன்றும் புரியவில்லை. பரக்கப் பரக்கப் பார்த்தேன்; பயந்து பயந்து விழித்தேன்.

"அணைத்துக்கொள், லலிதா! அடித்த கையால் என்னை அன்புடன் அணைத்துக்கொள், லலிதா!' என்றார் அவர், நாத் தழுதழுக்க,

"நீங்கள்......நீங்கள்......"

அதற்கு மேல் என்னால் ஒன்றும் பேச முடியவில்லை, தடுமாறினேன்.

"அணைத்துக்கொள், லலிதா! அடித்த கையால் என்னை அன்புடன் அணைத்துக்கொள், லலிதா! நீ மட்டுமல்ல—இனி நானும் உன்னுடையவன்தான்; என்னுடைய வாழ்வும் தாழ்வும் இனி உன்னுடைய கையில்தான் இருக்கிறது. அணைத்துக்கொள், லலிதா! அடித்த கையால் என்னை அன்புடன் அணைத்துக்கொள், லலிதா!" என்று 'கெஞ்சு, கெஞ்சு' எனக் கெஞ்சிக்கொண்டே அவர் என்னை நெருங்கினார்.

நடுக்கத்துடன் நான் அவரைப் பார்த்தேன்; சிறிது நேரத்துக்கு முன்னால் சிரித்த கண்கள் இப்போது அழுது கொண்டிருந்தன—ஆம், துன்பத்தின்போது மட்டுமல்ல; இன்பத்தின்போதும் மனிதன் அழத்தானே அழுகிறான்?

அவ்வளவுதான்; "பாவி நீங்களல்ல; நான்தான் பாவி?" என்று நான் அவரை ஒரே தாவாகத் தாவி அணைத்துக்கொண்டு அழுதேன் அழுதேன், அழுது கொண்டே இருந்தேன்.

"உன்னுடைய கண்ணீரை நான் துடைத்தேனே என்னுடைய கண்ணீரை நீ துடைக்கமாட்டாயா லலிதா?" என்றார் அவர்.

துடைத்தேன்!

"இன்று மட்டுமா துடைப்பாய்?" என்று அவர் கேட்டார்.

"என்றும் துடைப்பேன்!" என்றேன் நான்.

என்னுடைய கையை எடுத்துத் தம்முடைய கண்களில் ஒத்திக்கொண்டு, "ரொம்பப் பொல்லாதவள் நீ!" என்றார் அவர், சிரித்துக்கொண்டே.

"நீங்கள் மட்டும் நல்லவராக்கும்!" என்றேன், நானும் சிரித்துக்கொண்டே.

"இல்லாவிட்டால் அன்பின் ஆழத்தை அளந்தா பார்க்க முடியும்?" என்ருர் அவர்.

இந்தச் சமயத்தில், யாரோ ஒரு புண்ணியவான் "ஐயோ, என் லலிதாவைக் காணேமே?" என்று உரிமையுடன் அலறவே, இருவரும் திடுக்கிட்டு எழுந்து வந்து கதவைத் திறந்தோம்.

# 2. அசட்டு அத்தான்

சொல்ல மறந்துவிட்டேனே, எனக்கு அத்தான் ஒருவர் இருந்தார். அவரை மனிதன் என்றால் அசல் மனிதன் என்று சொல்ல வேண்டும். இப்படிச் சொல்லும்போது இலக்கியம் அஹிம்சா பூர்வமாகவும் சட்டம் ஹிம்சா பூர்வமாகவும் ஏதோ ஒரு மனிதனை உருவாக்க யுகயுகாந்திரமாக முயன்று கொண்டிருக்கிறதே, அந்த மனிதனை நான் சொல்லவில்லை; பிறக்கும்போதே எண்ணற்ற பலவீனத்தோடு பிறக்கிறானே, அந்த மனிதனைச் சொல்கிறேன்!

ஆம், நாகரிகம் மனிதர்களில் பலரை 'இரட்டை மனிதர்க'ளாக்கிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்திலே, என் அத்தான் மட்டும் 'ஒற்றை மனித'ராகவே இருந்து வந்தார். அதாவது, அவருடைய உதட்டில் அமிர்தமும் கிடையாது; உள்ளத்தில் விஷமும் கிடையாது. இதனால் வாழ்க்கையில் அவர் வெற்றியடையவில்லை; தோல்விக்கு மேல் தோல்வியாக அடைந்து கொண்டிருந்தார். ஆனால் ஒன்றை மட்டும் இங்கே சொல்லிவிட வேண்டும்—பலவீனத்தைப் போலிப் பண்பாட்டால் மறைத்துக் கொள்ளத் தெரியாத அவரால், சமூகம் தாக்கப்பட்டாலும் ஏமாற்றப்படவில்லை!

தன்னையும் ஒரு 'சீர்திருத்தச் செம்மல்' என்று சொல்லிக்கொண்ட அவர், வயது முப்பதுக்கு மேல் ஆகியும் 'அரை மனித'ராகவே இருந்து வந்தார். அந்த அரை மனிதர் 'முழு மனித'ராக ஒரு பெண்— ஆம், ஒரே ஒரு பெண்தான் வேண்டியிருந்தது. எதையும் எதிர்காலத்தோடு இணைத்துப்பார்க்கும் சமூகம் அவருடைய அசட்டுத்தனத்தை நம்பி, அர்த்த மற்ற ஆண்மையை நம்பி, அந்த ஒரே ஒரு பெண்ணை அவருக்காகத் தத்தம் செய்ய முன்வரவில்லை. அத்துடன் என்னைப் போலவே தாய் தந்தையற்ற அவர், சாட்சாத் தரித்திரத்தை வேறு தன்னுடைய தாயாகவும் தந்தையாகவும், அண்ணனாகவும் தம்பி யாகவும், அக்காவாகவும் தங்கையாகவும், மாமா வாகவும் மைத்துனனாகவும் கொண்டு, அதனுடைய மடியிலே தவழ்ந்து, விளையாடி, வளர்ந்து, வாழ்ந்து வந்தார்—இல்லை, பிழைத்து வந்தார்!

இவ்வளவு பெரிய உலகத்தில் வறுமை ஒன்றைத் தவிர வேறெதுவும் தன்னிடம் அன்பு செலுத்தாத போது, தான் மட்டும் ஏன் பிறரிடம் அன்பு செலுத்த வேண்டும்? அத்தகைய அன்பைப் பிறர் மதிக்காத போது, மதித்து வரவேற்காதபோது, தான் மட்டும் அதை ஏன் மதிக்கவேண்டும்; மதித்து வரவேற்க வேண்டும்?

இந்த விபரீத தத்துவத்தால் வெறுப்படைந்த அவர் உள்ளம், ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைப் பணத்தின் துணையாலும் பக்கபலத்தின் துணையாலும் சட்டத்தின் கண்ணையும் சமூகத்தின் கண்ணையும் மூடிவிட்டு, 'மனைமாட்சி' மிக்க மனைவிமாராகவும், 'மனமாட்சி' மிக்க துணைவிமாராகவும் கொண்டு

வாழ்க்கை நடத்தும் 'பண்பாள'ரைக் கண்டு வெகுண்டது. அதன் காரணமாசப் 'பச்சைப் பத்திரிகை' யொன்றில் தொடர்பு கொண்டிருந்த அவர், எழுத்தில் மட்டுமல்ல; வாழ்க்கையிலும் 'பச்சை' யாகவே இருந்து வந்தார்!

பொருளாதார ஏற்றத்தாழ்விஞல் மேற்படி கொடுமைக்கு உள்ளான அவரைப் 'பண்பில்லாதவர்' என்று சமூகம் தன்ஊ மறந்து பரிகசித்தது; பகிஷ் கரித்தது— அதுவும் எப்படி?—ஒரு பக்கம் அவருடைய 'பத்திரிகை'யை ரகசியமாக ஆதரிப்பதன் மூலம் அவரையும் ரகசியமாக ஆதரித்துக் கொண்டும், இன்னொரு பக்கம் அவருடைய 'எழுத்'தைப் பகிரங்க மாக வெறுப்பதன் மூலம் அவரையும் பகிரங்கமாக வெறுத்துக்கொண்டுந்தான்!

இத்தகைய விசித்திரமான சமூகத்தில் விசித்திர மான மனிதராக விளங்கிய அவர், காதலுக்கும் விசித் திரமான பொருள் கொண்டு எந்தப் பெண்களைக் கண்டாலும் காதலித்து வந்தார். அவ்வாறு காதலிக்கப் பட்டவர்களிலே அடியாளும் ஒருத்தி!

ம், அவரைப் போய்ச் சொல்கிறேனே, ஆணுய்ப் பிறந்த எவன்தான் என்னைக் காதலிக்கவில்லை?

நல்ல வேளையாக யாரோ ஒரு புண்ணியாத்மா அம்மாவென்றும் அக்காவென்றும், மாமியென்றும் மைத்துனியென்றும், தாரமென்றும் தங்கையென்றும், மகளென்றும் மருமகளென்றும் உறவு முறை கொண்டாடிப் பெண்களில் சிலரை ஆண்களின் கழுகுப் பார்வையிலிருந்து காப்பாற்றி வைத்தான். இல்லா விட்டால் எந்தப் பெண்ணைத்தான் காதலிக்காமல் விடுவார்கள் இந்த ஆண்கள்!

காதல் என்றால் 'ஒருவன் ஒருத்தியிடமும், ஒருத்தி ஒருவனிடமும் எந்த நிலையிலும் மாறாமல் கொள்ளும் ஆத்மார்த்திகமான அன்பு' என்று இலக்கியம் சொல்லலாம்; இலக்கணம் சொல்லலாம். வாழ்க்கையும் வையகமும் அப்படியா சொல்கின்றன?— இல்லை; பொறுப்புள்ள காதல் எவ்வளவுக்கெவ்வளவு பஞ்சமாயிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பொறுப்பற்ற காதல் வாழ்க்கையிலும வையகத்திலும் மலிந்து கிடக்கிறது. கவைக்குதவாத இந்தக் காதலை, க்ஷணப் பித்தத்தை, இனக் கவர்ச்சியை, தணியாத தாகத்தை இன்றல்ல; அன்றே நான் வெறுத்தேன். அதாவது, என் கலாசாலை நாட்களிலேயே வெறுத்தேன்.

''ஆஹா! இந்த மாணவர்கள், இவர்களுடைய கண்கள்— எங்குதான் செல்லட்டுமே, எதைத்தான் பார்க்கட்டுமே, மோனத்தை நாடும் முத்தர் மனத்தைப் போல ஏதாவது 'கலர்' இருக்கிறதா என்றுதானே முதலில் தேடுகின்றன?

'கலர்' என்றால் இவர்களுடைய 'பண்'பாட்டில் என்னவாம் தெரியுமா, பெண்களாம்! இந்தப் பெண்களுக்கு 'மார்க்' கொடுப்பதில்தான் இவர்கள் கைகாரர்களாயிருக்கிறார்களே தவிர, பரீட்சையில் 'மார்க்' வாங்குவதில் கைகாரர்களாயில்லை. இந்த லட்சணத்தில் தலைக்குத் தலை யாராவது ஒருத்தியைப் பார்த்து 'இவளுக்கு இருபத்தைந்து மார்க்குகள் கொடுக்கலாம்; இவளுக்கு ஐம்பது மார்க்குகள் கொடுக்கலாம்; இவளுக்கு நூறு மார்க்குகள் கொடுக்கலாம்' என்று அவளவளுடைய அழகை மதிப்பிடும் போது எனக்கு எப்படித்தான் இருக்கும், தெரியுமா?— இவர்களுடைய மூளையை மதிப்பிடத் தோன்றும்;

இவர்களுடைய படிப்பையும் பண்பாட்டையும் மதிப்பிடத் தோன்றும்!

இந்த விஷயத்தில் தங்கள் வீட்டுப் பெண்களை அறவே மறந்துவிடும் இவர்கள், பிறர் வீட்டுப் பெண்களுக்காக எத்தனை பஸ்களை வேண்டுமானாலும் தவற விடுவார்கள்; எத்தனை வகுப்புகள் வேண்டுமானாலும் தவற விடுவார்கள்.

இப்படிப்பட்ட விட புருடர்களையும் விரும்பிச் சில பெண்கள் விரட்டிக்கொண்டு திரிகிறார்களே? கடைசியாகக் கையில் குழந்தையுடனே, வயிற்றில் குழந்தையுடனே கண் கலங்கிக் கதியற்று நிற்கிறார்களே? 'பொறுப்பற்ற காதல்' தரும் இந்தப் பரிசுக்குப் 'பொறுப்புமிக்க சமூகம்' என்ன பரிசு தருகிறது, 'போடி, புத்தி கெட்டவளே!' என்று அலட்சியப் படுத்துவதைத் தவிர?

காதலை விடக் கடமையையே பெரிதாகக் கருதும் இத்தகைய சமூகத்தை நினைத்துப் பார்க்கத் தெரியாத சமூகம் என்று சொல்லும் நாம் மட்டும் நினைத்துப் பார்க்கத் தெரிந்தவர்களா? சிந்தித்துப் பார்க்கத் தெரிந்த சமூகம் என்று சொல்லும் நாம் மட்டும் சிந்தித்துப் பார்க்கத் தெரிந்தவர்களா? படிப்பும் பண்பும் இல்லாத சமூகம் என்று சொல்லும் நாம் மட்டும் படிப்பும் பண்பும் உள்ளவர்களா? அன்பும் அறிவும் இல்லாத சமூகம் என்று சொல்லும் நாம் மட்டும் அன்பும் அறிவும் உள்ளவர்களா?— 'இல்லை' என்றுதான் அன்றும் நான் நினைத்தேன்; இன்றும் நான் நினைக்கிறேன். இதன் காரணமாகவே அத்தான் என்னைக் காதலித்தாலும் அவரை நான் காதலிக்க

வில்லை; கல்யாணம் செய்து கொள்ளவில்லை. காதலுக்கு நான் கொண்ட பொருள் வேருயிருந்ததால்!

ஆம், காலத்தால் உடல் பாதிக்கப்பட்டாலும் உள்ளம் பாதிக்கப்படாத காதலையே நான் விரும்பினேன். அந்த விருப்பம் என்னைப் பொறுத்தவரை அன்று நிறைவேறி விட்டதென்றே நான் நினைத்தேன்.

ஆனல் குறும்பு மிக்க என் தோழிகளின் ஆசை விழிகளுக்குத் தோற்றமளித்ததுபோல் அவர் என்னுடைய அன்பு விழிகளுக்குத் தோற்றமளிக்கவில்லை. அவர்கள் சொன்னது போல் அவருடைய கையில் தடியும் இல்லை; முப்பத்திரண்டு பற்களில் மூன்று பற்கள் காணுமற் போய்விடவும் இல்லை!

எது எப்படியிருந்தால்தான் என்ன? என்னுடைய லட்சியத்தை இப்போது நான் அடைந்துவிட்டேன். அந்த லட்சியத்திற்காகச் சிலர் சொல்லுவதுபோல என் உடல் வாடினலும் உள்ளம் வாடாதன்ருே?

பார்க்கப்போனல் பிறக்கும்போதே நிர்வாணமாகப் பிறக்கும் மனிதனுக்கு ஆடை எது, லட்சியந்தானே? உள்ளத்துக்கு அவசியமாயிருக்கும் அதை உடலுக்கு அவசியமில்லை என்று அவிழ்த்தா எறிந்துவிடுவது?

அதற்கு நான் தயாராயில்லையென்ருலும் எதற்கும் தயாராயிருந்த என் அத்தான் என்னை விரும்பினுர். கல்யாணத்துக்கு முன்னல் மட்டும் விரும்பவில்லை; பின்னலும் விரும்பினுர். நனவில் மட்டும் விரும்பவில்லை; கனவிலும் விரும்பினுர்.

அந்த இழவெடுத்த கனவைக் கல்யாணத்தன்ருவது அவர் காணமல் இருந்திருக்கக்கூடாதா?— கண்டார்;

கண்டதுமின்றி, 'ஐயோ, என் லலிதாவைக் காணேமே! ஐயோ, என் லலிதாவைக் காணேமே!' என்று வேறு கதறித் தொலைத்தார்!

இதைக் கேட்டதும் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்து நான் கதவைத் திறப்பதற்குள் காந்தா என் அத்தானை இழுத்துக்கொண்டுபோய் வெளியே விட்டு விட்டு வந்து, "ஐயோ, பாவம்! என்ன லலிதா, மாப்பிள்ளைக்கு? உன்னைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே 'என் லலிதாவைக் காணேமே, என் லலிதாவைக் காணேமே!' என்று கதறுகிறுரே!" என்று ஒரு போடு போட்டுவிட்டுச் சிரித்தாள்.

வெட்கமாய்ப் போய்விட்டது அவருக்கு; விழுந்தடித்துக் கொண்டுபோய்க் கதவைச் சாத்திக் கொண்டுவிட்டார்!

'நல்ல வேளை, பிழைத்தேன்!' என்று நான் பெருமூச்சு விட்டேன்.

கலாசாலைப் பெண்கள் என்றுலே, 'ஸெக்கெண்ட் ஹாண்டாயிருக்குமோ!' என்று மாப்பிள்ளைமார் சந்தேகப்படும் இந்தக் காலத்தில் இப்படி ஒரு பிரகிருதி என் மானத்தை வாங்கித் தொலைத்தால் அவர் என்ன நினைப்பார்? இதனுல் எடுக்கும்போதே அவருடைய உள்ளத்தில் விஷவித்து ஊன்றப்பட்டுவிட்டால், எதிர் காலத்தில் அதை நான் களைந்தெறிவது எப்படி?

'கடவுளே, அந்த மட்டும் காந்தாவின் உருவில் வந்து என்னைக் காப்பாற்றினீரே!' என்ற நன்றி யுணர்ச்சியுடன் நான் திரும்பினேன். "என்ன இருந் தாலும் காந்தா ரொம்ப ரொம்பப் பொல்லாதவள்!" என்றுர் என் கணவர்.

அதற்குள் என்னைச் சமாளித்துக்கொண்டு, "நல்லவர்கள் பொல்லாதவர்களாயிருப்பதுதானே இயற்கை?" என்றேன் நான்.

"உண்மை லலிதா, உண்மை. இல்லாவிட்டால் எடுத்த எடுப்பிலேயே என் கன்னத்தில் நீ அறைந்திருப்பாயா?" என்றார் அவர்.

இது எனக்கு என்னவோபோல் இருந்தது. "ஆமாம் போங்கள்!" என்று முகத்தைச் சுளித்தேன்.

அவர் சிரித்துக்கொண்டே ஒரு கணம் என்னை உற்றுப் பார்த்தார். மறுகணம், "நமது சிற்பிகளும் சித்திரக்காரர்களும் இருக்கிறார்களே, அவர்கள் எத்தனையோ விதமான பெண்களைப் படைக்கிறார்கள். ஆனால் முகத்தை மட்டும் எல்லாப் பெண்களுக்கும் ஏறக்குறைய ஒரே மாதிரியாக அமைத்துவிடுகிறார்கள். பிரம்மன் அப்படி அமைப்பதில்லை. எத்தனையோ பெண்களை அவனும் படைக்கிறான். ஆனால் ஒரு பெண்ணின் முகத்தைப்போல் இன்னொரு பெண்ணின் முகத்தை நாம் பார்க்கமுடிவதில்லை!" என்றார், கண்களில் சிந்தனை தேங்க.

"அதனால் என்னவாம்?" என்றேன் நான்.

"ஒன்றுமில்லை; மனிதனின் தலையைத் தருமம் காப்பதற்குப் பதிலாகத் தருமத்தின் தலையை மனிதன் காக்க வேண்டியிருக்கிறது!"

"அதற்குத்தான் 'மனம்' என்று ஒன்றைக் கடவுள் மனிதனுக்குக் கொடுத்திருக்கிறாரே?"

"அதுவும் போதாதென்று 'மானம்' என்று ஒன்றை வேறு மனிதன் கண்டுபிடித்தான். கடைசி

யில் இரண்டும் போதாமல் உன்னைப் போன்ற பெண்களுக்கு நடுவே அகப்பட்டுக் கொண்டு, தன்னையும் காக்கமுடியாமல் தருமத்தையும் காக்க முடியாமல் அவன் தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கிறான்!''

''இப்போது நீங்கள் அப்படியாத் தவிக்கிறீர்கள்?''

''ஆமாம் லலிதா! இரண்டாவது மனைவியான உன்னுடன் என் வாய் பேசிக் கொண்டிருக்கும்போது, என்னுடைய முதல் மனைவியின் குரல் என் காதில் ஒலித்துக்கொண்டே யிருக்கிறது!''

''சரிதான், அன்பு அழுகிறதாக்கும்?''

''ஆமாம். அவளை நினைத்தால் அன்பு அழுகிறது; உன்னை நினைத்தால் அன்பு சிரிக்கிறது!''

''என்னமோ, கடைசியில் அது புரட்சியில் வேறு இறங்கித் தொலைக்காமலிருந்தால் சரி!''

''அதென்ன புரட்சி?''

''அன்புப் புரட்சிதான்!''

''அப்படி யென்றால்?''

''செய்யும் அயோக்கியத்தனங்களை யெல்லாம் அக்கம் பக்கம் தெரியாமல் செய்துவிடுவது!''

அவர் சிரித்தார்; நானும் சிரித்தேன்.

# 3. ஐயோ ஆபத்து!

பொழுது விடிந்தது; என்றும் இல்லாத திருநாளாகப் பூபாளத்தை மீட்டும் வீணாகானம் எங்கிருந்தோ வந்து எங்கள் காதில் விழுந்தது.

ஒன்றும் புரியாமல் ஏதோ செய்யாத குற்றத்தைச் செய்து விட்டவள் போல் எழுந்து, சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே கதவைத் திறந்தேன். தோழிகள் புடைசூழக் காந்தா வீணையும் கையுமாகக் கதவருகே உட்கார்ந்திருந்தாள்; "ஆஹா! அற்புதம், அபாரம்!" என்று அவள் தோழிகள் அவளைப் பாராட்டிக் கொண்டிருந்தார்கள்.

"ஓஹோ, உங்கள் வேலைதானா?" என்றேன் நான்.

"இல்லாவிட்டால் உன்னை எழுப்ப அவரும், அவரை எழுப்ப நீயுமா பூபாளம் பாடிக்கொள்வீர்கள்!" என்றாள் காந்தா.

"அதற்காக உனக்கு ஏனடி இவ்வளவு சிரமம்? வேண்டாண்டி, என் கண்ணு வேண்டாண்டி!" என்று கொஞ்சிய வண்ணம் அவள் கையிலிருந்த வீணையை வாங்கி ஒரு பக்கமாக வைத்துவிட்டு, நான் மேலே நடந்தேன்.

அதற்குள், கொஞ்சம் பொறுடி! சரிந்து விழுந்த மேலாக்கைக்கூட இன்னும் நீ சரியாக எடுத்துப் போட்டுக் கொள்ளாமல் இருக்கிறாயே?'' என்று காந்தா ஓடோடியும் வந்து, என் மேலாக்கை எடுத்துப் போட முயன்றாள்.

''தாங்க்ஸ்!'' என்று அவளுக்கு முன்னால் நானே அதை எடுத்துப் போட்டுக்கொண்டு மேலே நடந்தேன். அவள் விடவில்லை; ஐயோ, இதென்னடி?'' என்று எனக்குக் குறுக்கே வந்து நின்றாள். என் கன்னத்தைத் திருப்பிப் பார்த்தாள். பிறகு, ''அநியாயம், அநியாயம்! என்னதான் ஆசையிருந்தாலும் இப்படியா கிள்ளுவார்கள்?'' என்று வாயைப் பிளந்தாள்.

''நீ ஒண்ணு! கிள்ளவில்லையடி; கடித்திருக்கிறார்!'' என்றாள் சாந்தா, அதை மறுத்து.

நான் சளைக்கவில்லை; ''ஏனடி, பல்லில்லாத கிழவரால் எங்கேயாவது கடிக்க முடியுமா?'' என்று கேட்டுவிட்டு மேலே நடந்தேன்.

அடுத்தாற்போல் ஒருத்தி ஓடோடியும் வந்து, ''இங்கே வாடி, ஒரு ரகசியம்!'' என்றாள், என் காதோடு காதாக.

''என்ன ரகசியம்?'' என்றேன் நான் திரும்பி.

''கதவை முதலில் தாளிட்டது யாரடி, நீயா அவரா?''

''அதுவா, அது எனக்கு ஞாபகமில்லை!''

''பேச்சை முதலில் ஆரம்பித்தது யாரடி, நீயா அவரா?''

"அதுவும் எனக்கு ஞாபகமில்லை!"

"கையை முதலில் பிடித்தது யாரடி, நீயா அவரா?"

"அதுவும் எனக்கு ஞாபகமில்லை; அப்புறம்?"

"சரிதான்! மல்லிகை தந்த மணத்திலே, மாப்பிள்ளை தந்த சுகத்திலே உன்னை நீயே மறந்து விட்டாயாக்கும்?"

"ஆமாம். என்னை நானே மறந்துவிட்டேன்; அவரை அவரே மறந்துவிட்டார். அப்புறம் என்ன தெரியவேண்டும் உங்களுக்கு?"

"ஒன்றுமில்லை; அவருடைய கன்னத்தையாவது நீ சும்மா விட்டாயா என்று தெரிந்தால் போதும்!"

"அதை நான் சொல்வானேன், நீங்களே பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்!" என்று சொல்லிவிட்டு, நான் குளிக்கும் அறைக்குள் நுழைந்தேன்.

அதற்கேற்றாற் போல் என்னைத் தொடர்ந்து அவர் எழுந்துவரவே, எல்லோரும் அவரை நோக்கித் திரும்பினார்கள்.

அவ்வளவுதான், 'கலகல'வென்ற சிரிப்பொலி அவர்களிடையே எழுந்தது.

ஒன்றும் புரியவில்லை அவருக்கு; திரு திருவென்று விழித்தது விழித்தபடி நின்றார்.

"அநியாயம் என்றாள்!" ஒருத்தி.

"அநியாயத்திலும் அநியாயம்!" என்றாள் மற்றொருத்தி.

"ஆமாம், ஆமாம். அநியாயத்திலும் அநியாயம்!" என்றாள் மற்றும் ஒருத்தி.

"என்ன இருந்தாலும் இப்படிச் செய்திருக்க வேண்டாம் என்றாள் ஒருத்தி.

"தெரிந்தா செய்தார், தெரியாமல் தானே செய்திருக்கிறார்?" என்றாள் இன்னொருத்தி.

"என்னதான் தெரியாமல் செய்தாலும் இப்படியா?" என்றாள் மற்றொருத்தி.

"அது அப்படித்தான்!" என்றாள் மற்றும் ஒருத்தி.

இந்த 'விமர்சன'த்தைக் கேட்கக்கேட்க அவருக்கு எப்படித்தான் இருந்ததோ, "என்ன சங்கதி, சொல்லுங்களேன்!" என்றார் பொறுமை இழந்து.

"வரவே வந்தீர்கள்; கண்ணாடியில் கொஞ்சம் முகத்தைப் பார்த்துவிட்டு வந்திருக்கக் கூடாதா?" என்றாள் காந்தா.

"அவர் பார்க்காவிட்டாலும் லலிதாவாவது பார்க்கச் சொல்லியிருக்கலாம்!', என்றாள் சாந்தா.

"அவள்தான் அவளை மறந்துவிட்டாளாமே?" என்றாள் ஒருத்தி.

"ஏன், இவர்கூடத்தான் இவரை மறந்துவிட்டாராம்!" என்றாள் இன்னொருத்தி.

"உண்மையாகவா?" என்றாள் மற்றொருத்தி.

"இல்லாவிட்டால் அவள் நெற்றியிலிருந்த குங்குமமெல்லாம் இவருடைய முகத்திலா இருக்கும்?" என்றாள் மற்றும் ஒருத்தி.

அவ்வளவுதான்; முகத்தை மறைத்துக்கொண்டு சென்று அவர் கண்ணாடியின் முன் நின்றார்.

"இந்தப்பக்கம் பாருங்கள்!" என்றாள் காந்தா.

"அந்தப்பக்கம் பாருங்கள்!" என்றாள் சாந்தா.

"இல்லை இல்லை; இந்தப் பக்கம்தான்!" என்றாள் அவள் மீண்டும்.

"இல்லை இல்லை; அந்தப் பக்கம்தான்!" என்றாள் இவள் மீண்டும்.

அவர்கள் சொன்னது சொன்னபடி அவரும் தம் முகத்தை இப்படியும் அப்படியுமாகத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். எப்படிப் பார்த்தாலும் எந்தப் பக்கம் பார்த்தாலும் அவருடைய முகத்தில் குங்குமமும் இல்லை. மஞ்சளும் இல்லை.

ஏமாற்றத்துடன் திரும்பினார்; மறுபடியும் 'கலகல' வென்ற சிரிப்பொலி அவர்களிடையே எழுந்தது!

அதற்குள் வெந்நீர் போட்டுவிட்ட நான் வெளியே வந்து, "அவர்களுக்கு என்ன வேலை, நீங்கள் போய்க் குளித்துவிட்டு வாருங்கள்!" என்றேன்; அவர் சென்றார்.

"தேவலையே, அதற்குள் மனைவி கிழித்த கோட்டை மாப்பிள்ளை தாண்ட மாட்டேன் என்கிறாரே?" என்றாள் காந்தா.

"எப்படித் தாண்ட முடியும்? நேற்று வரை தா[illegible] அவர் இந்த வீட்டுக்கு எஜமானர். இன்று [illegible] இவள் எஜமானியாகிவிட்டாளே!" என்றாள் கா[illegible]

"வீட்டுக்கு இல்லையடி; இதயத்துக்கு என்று சொல்!" என்றேன் நான், பெருமையுடன்.

அன்று மாலை திருமணத்துக்கு வந்திருந்த விருந்தினர்களையெல்லாம் வழி அனுப்பிவிட்டு—என் தோழிகளையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்—"நாமும் எங்கேயாவது போய்விட்டு வருவோமா?" என்றார் என் கணவர்.

"போவோமே!" என்றேன் நான். அதற்குப்பின் அன்றைய தினசரியை எடுத்துப் புரட்டிப் பார்த்து விட்டு, "இன்றுள்ள காட்சிகளைப் பார்த்தால் சர்க்கஸ் தான் தேவலை என்று தோன்றுகிறது; நீ என்ன சொல்கிறாய்?" என்றார் அவர்.

"நீங்கள் சொல்வதைத்தான் நான் சொல்வேன்!" என்றேன் நான்.

"எனக்காக நீ மனித ஜன்மத்தை விட்டுவிட்டு ஆட்டு ஜன்மம் எடுத்துவிடக்கூடாது, லலிதா!" என்றார் அவர்.

"அப்படியென்றால்?" என்றேன் நான், ஒன்றும் புரியாதவள் போல.

"மந்தையோடு மந்தையாகச் செல்லும் மந்த புத்தி ஆட்டு ஜன்மத்துக்கு இருக்கலாம், மனித ஜன்மத்துக்கு இருக்கக்கூடாது என்றேன்!"

"சரிசொந்த புத்தியோடு சொல்கிறேன், வாருங்கள் போவோம்!" என்று நான் எழுந்தேன்; அவரும் எழுந்தார். இருவரும் காரை எடுத்துக்கொண்டு கிளம்பினோம்.

ஆஹா, இந்தப் பாதசாரிகள்! இன்னுமா இவர்கள் நடக்கவேண்டும்? நாடு விடுதலை அடைந்த பிறகுமா இவர்கள் நடக்கவேண்டும்?

குறைந்த பட்சம் தனக்கென்று ஒரு வீடு, தனக்கென்று ஒரு தோட்டம், தனக்கென்று ஒரு கார், தனக்கென்று ஒரு ரேடியோ, தனக்கென்று ஒரு நூல் நிலையம் ஆகியவற்றை இவர்கள் எப்போதுதான் அடையப் போகிறார்கள்?

"உழைப்பே செல்வம், உழையுங்கள்! உழைப்பே செல்வம், உழையுங்கள்!" என்று என்றோ ஒரு நாள் மயானத்தில் கிடைக்கப்போகும் பொதுவுடைமை மண்ணை ஆறடிமண்ணைத் தவிர வேறொரு மண்ணும் இல்லாத இந்த மக்களைப் பார்த்து ஓயாமல் ஒழியாமல் அடித்துக்கொள்கிறார்களே, மேற்கூறிய வசதிகள் அத்தனையையும் வழி வழியாகப் பெற்று வரும் மேன் மக்கள், இந்தக் கீழ்மக்களை விடவா உழைத்துக் கிழித்து விடுகிறார்கள்?

அன்றுதான் நாட்டின் செல்வத்தை யெல்லாம் வெள்ளைக்காரன் கொள்ளைகொண்டு போனான்; இன்று யார் கொள்ளை கொண்டு போகிறார்கள்? அப்படியே கொள்ளை கொண்டு போனாலும் அன்றுதான் தடுத்து நிறுத்த முடியவில்லை; இன்று கூடவா தடுத்து நிறுத்தமுடியவில்லை?

மூளைக்கு மூளை வித்தியாசம் இருந்தால் என்ன? அதற்காக மூளையுள்ளவர்கள் மூளையில்லாதவர்களை ஏய்த்தா பிழைக்கவேண்டும்?

அப்படியே இருந்தாலும் வீட்டுக்கு வீடாவது வித்தியாசம் இல்லாமல் இருக்கலாமே!

மூளைதான் மாற்றமுடியாத இயற்கை; வீடு வாசல் கூடவா மற்றமுடியாத இயற்கை?

ஐயோ! 'பாம்' என்று ஹாரன் ஒலித்ததும் பதறி யோடும் இந்தப் பாதசாரிகள்!— பார்க்கப் பார்க்கப் பரிதாபத்திற்குரிய ஜீவன்களாகவல்லவா தோன்று கிறார்கள்!

பேராசை மென்ற மனம் பொன் செய்யும் மருந்தாக எங்களைப் போன்றவர்களுக்கே இல்லாதபோது, இவர் களுக்கு மட்டும் எப்படி இருக்குமாம்?

இந்த நிலையில் இவர்களை விட்டுவிட்டு, "சகோதரர் களே! எங்களைப் பார்த்துப் பொறுமைப் படாதீர்கள்!" என்று 'தர்மோபதேசம்' செய்கிறார்களே, சில புண்ணியாத்மாக்கள் அவர்களைக் கொண்டு வந்து இவர்களுடன் நடக்க வைத்தால், எங்களைக் கண்டு அவர்கள் பொறுமைப்படாமல் பெருமையா படுவார்கள்?

ம், நன்றாய் வேண்டும் இவர்களுக்கு— "நாம் ஏன் இப்படி இருக்கிறோம், அவர்கள் ஏன் அப்படி இருக் கிறார்கள்?" என்று நினைத்துப் பார்த்துச் செயலாற்றத் துணியாத இவர்களுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்?

இப்படியெல்லாம் எண்ணமிட்டுக்கொண்டு சென்ற எனக்குத் திடீரென்று கார் நின்றதில்—ஆனால் சாலை யோரமாக நிற்காமல் சாலைக்கு நடுவிலேயே நின்றதும், 'என்ன நடந்தது?' என்று ஒன்றும் புரியவில்லை; விழித்தேன்.

“என்ன லலிதா, போலீஸாரின் ஊதல் சத்தம் உன்னுடைய காதில் விழவேயில்லையா?” என்றார் அவர்.

“இல்லையே!” என்றேன் நான்.

அதற்குள் எங்களை நோக்கி வந்த போலீஸ்காரர் ஒருவர் “உள்ளேதான் இன்னும் இரண்டு பேருக்கு இடமிருக்கிறதே, அவரை ஏன் ஸார் வெளியே உட்கார வைத்திருக்கிறீர்கள்?” என்றார்.

“எவரை?” என்று திடுக்கிட்டு கேட்ட என் கணவர் “நான் யாரையும் உட்கார வைக்கவில்லையே!” என்று கையை விரித்தபடிக் கீழே இறங்கினார்; அவரைத் தொடர்ந்து நானும் இறங்கிச் சுற்றுமுற்றும் பார்த்தேன்.

அடாடா! என்ன காட்சி, என்ன காட்சி. காட்சியென்றால் காட்சி! கண் கொள்ளாக் காட்சி!

காருக்குப் பின்னால் ‘ஸ்டெப்னி’ இருக்க வேண்டிய இடத்தில் என் அருமை அத்தான்—அதாவது, எங்கள் வீட்டுச் ‘சீர்திருத்தச் செம்மல்’ இருந்தது!

இருந்ததா! ஆமாம், இருந்ததுதான்!

“ஹெல்லோ, நீங்கள்தானா?” என்றேன் நான் அதை நெருங்கி.

“ஆமாம், நானேதான்!” என்றது அது.

என் கணவர் ஒன்றும் புரியாமல், “யார் இவர்?” என்ற கேள்விக்குறியைத் தம் முகத்தில் போட்டுக் கொண்டு என்னை மேலும் கீழும் பார்த்தார்.

"இதுவா, இது என் ஆசை அத்தான்!" என்றேன் நான்.

"ஓஹோ, அப்படியானால் இவரும் நம்முடன் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கலாமே?" என்றார் அவர்.

"அதெப்படி உட்கார முடியும்? உரியவர்கள் சொல்லாமல் என்னிடம் அப்படியெல்லாம் உட்காரும் வழக்கம் கிடையாது!" என்றது என் அத்தான், தனக்கே உரித்தான அசட்டுக் களையுடனும் அழுத்தந் திருத்தத்துடனும்.

"ஆமாம்; இது உரியவர்களிடம் சொல்லிக் கொள்ளாமல் உட்கார்ந்தாலும் உட்காருமே தவிர, சொல்லிக்கொண்டு உட்காரவே உட்காராது!" என்றேன் நான்.

இதைக் கேட்டதும் ஏனோ தெரியவில்லை; என் அத்தானுக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. "ஹிஹிஹி, ஹிஹிஹி" என்று இளித்தது இளித்தபடி எழுந்து நின்றது.

நானும், 'ஹி ஹி ஹி, ஹி ஹி ஹி" என்று இளித்தது இளித்தபடி எதிர்த்தாற்போல் நின்றேன்.

இப்படியாகத்தானே 'ஹி ஹி ஹி' என்று அது இளிக்க நான் இளிக்க, இருவரும் மாறிமாறி இளித்துக் கொண்டே நின்றோம்.

போலீஸ்காரருக்கு ஒன்றும் புரியவில்லை; நிலைத்த கண் நிலைத்தபடி எங்களைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே அவர் மெல்ல நழுவினார்.

அதைக் கவனித்த என் அத்தான் அவனை நோக்கித் திரும்பியதுதான் தாமதம், போலீஸ்காரர் பிடித்தார் ஓட்டம்!

என் கணவர் 'கலகல'வென்று நகைத்தபடி, "நல்ல வேடிக்கைதான்; காரில ஏறிக்கொள்ளுங்கள்!" என்றார், என் அத்தானை நோக்கி.

அவ்வளவுதான்; விழுந்தடித்துக் கொண்டு சென்று அவசரம் அவசரமாக அது காரின் கதவைத் திறக்க முயன்றது. நான் குறுக்கிட்டு, "என் அத்தானைப் பற்றி உங்களுக்குத் தெரியாது; ரொம்ப ரொமபத் தன்மானம் மிக்கது அது. உங்களுக்குத் தெரியாமல அது காருக்கு வெளியே உட்கார்ந்தாலும் உட்காருமே தவிர, உங்களுக்குத் தெரிந்து உள்ளே உட்காரவே உட்காராது!" என்று ஒரு போடு போட்டேன்.

இதைக் கேட்டதும் கதவைத் திறக்க முயன்ற அத்தான அதைக்கைவிட்டு விட்டு, "ஆமாம், ஆமாம். ரொம்ப ரொம்பத் தன்மானம் மிக்கவன் நான்; ரொம்ப ரொம்பத் தன்மானம் மிக்கவன் நான்!" என்று மார் தட்டியவண்ணம் சட்டென்று விறைத்துக் கொண்டு நின்றது!

என் கணவர் என்ன செய்வார், பாவம்! "விஷயம் எதுவாயிருந்தாலும் அது இவருககு ஞாபகம் வர வேண்டுமானல், இன்னொருவர் அதை ஞாபகப் படுத்தித்தான தீரவேண்டும் போலிருக்கிறது!" என்றார்.

"ஆமாம், ஆமாம். அதிலும் லலிதா ஞாபகப் படுத்தினால் எனக்கு உடனே ஞாபகம் வந்துவிடும்!" என்றது அத்தான்.

"அதுதான் தெரிகிறதே, நாங்கள் வரட்டுமா?" என்று அதனிடம் விடை பெற்றுக் கொண்டு என் கணவர் காரில் ஏறினர்; நானும் அதற்கு 'டா டா!' சொல்லிவிட்டுக் காரில் ஏறிக் கொண்டேன்.

வழியில் எங்கள் பேச்சு முழுவதும் என் அத்தானைப் பற்றியதாகவே இருந்தது!

சர்க்கஸ், —கடவுளுக்கு மனிதர்கள் படும் பாடு சர்க்கஸாக இருக்கிறது; மனிதர்களுக்கோ மிருகங்கள் படும் பாடு சர்க்கஸாக இருக்கிறது!

அதோ, திரை மறைவிலிருக்கும் முதலாளிக்காக, தினசரித் தொல்லையான வயிற்றுத் தொல்லைக்காக, யாரோ ஒருவன் வாத்திய கோஷத்தால் சிங்கத்தின் உணர்ச்சியை ஊமையாக்கி விட்டு அதன் வாய்க்குள் தலையை விடுகிறனே, அவனைப் பார்த்து 'ஐயோ, மகனே!' என்று கதருமல் மக்களைப் பெற்ற தாய்மார் களால் எப்படி இருக்க முடிகிறது?

அதோ, யானையின் முன்னங்கால்களை மார்பில் தாங்கிய வண்ணம் யாரோ ஒருவன் மூச்சு விட முடியாமல் முனகிக் கொண்டிருக்கிறனே, அவனைப் பார்த்து 'ஐயோ வேண்டாம்!' என்று தடுக்காமல் தமக்கென வாழாத் தந்தைமார்களால் எப்படி இருக்க முடிகிறது?— அட, கடவுளே! பதறிப் பதறித் துடிக்க வேண்டிய அவர்கள் பார்த்துப் பார்த்துப் பரவசமடை கிறர்களே? அவர்களுக்கு இரக்கம் இல்லையா, இதயந் தான் இல்லையா?

இதோ, கூண்டுக்குள் புலியை அடைத்துவிட்டு உள்ளத்தில் பயத்துடனும், உதட்டில் புன்னகை

யுடனும் 'பளார், பளார்' என்று சவுக்கைச் சுண்டிக் கொண்டிருக்கிருனே ஒரு வீர புருஷன், இந்த வீர புருஷனைப் பார்த்துச் சூரப்புலி என்ன நினைக்கும்? 'நான் மட்டுமா மக்களின் அனுதாபத்துக்குரிய ஜீவன்? நீயும் மக்களின் அனுதாபத்துக்குரிய ஜீவனே!' என்று நினைக்காதா?

இதோ பற்றி எரியும் தீ வளையத்துக்குள் பாய்ந்து பாய்ந்து செல்கிருனே ஒரு தீர புருஷன், இந்த தீர புருஷனைப் பார்த்துத் தீய்ந்து தீய்ந்து விழும் தீப்பந்தம் என்ன நினைக்கும்? 'என்னிடம் காட்டும் இந்தத் தீரத்தை இவன் தன்னை, தன் வாழ்க்கையைச் சுட்டுப் சுட்டுப் பொசுக்குவதையே தங்கள் பொழுது போக்காகக் கொண்டிருக்கும் சுயநலக்காரர்களிடம் காட்டினுல் எவ்வளவு நன்ருயிருக்கும்!' என்று நினைக்காதா?

ஐயோ, இதென்ன? ஏறக்குறைய பிறந்த மேனியாக நின்று ஆண்களும் பெண்களும் ஆடுகிருர்களே! புண்ணிய பூமியில் பிறந்த இவர்கள் பாவத்தை வைத்துப் பகிரங்கமாக 'வியாபாரம்' செய்கிருர்களா, என்ன?

அருவருக்கத்தக்க இந்தக் காட்சியையும் ஒழுக்கத்தைப் பற்றி ஓயாமல் பேசும் ஒரு சிலர் 'ஒண்ணுங் கிளா'ஸில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக் கிருர்களே! இவர்களும் அவர்களைப் போலவே ஒழுக்கத்தை வைத்துப் பகிரங்கமாக 'வியாபாரம்' செய்கிருர்களா, என்ன?

எல்லாம் இந்த உலகத்தில் லாபத்துக்காகத்தானு? பொய்மைக்காகத்தானு? உண்மைக்காக, ஒழுக்கத்துக் காக ஒன்றுமே இல்லையா?

அட, கடவுளே! அன்புப் பிரச்சாரம் செய்யும் மெய்யன்பர்கள் அந்தப் பாழும் அன்பு இங்கெல்லாம்—இங்குள்ள மக்களின் இதயங்களிலெல்லாம், சுடர் விட வேண்டும் என்று பிரச்சாரம் செய்யாமல், வேறு எங்கெல்லாமோ—இதயத்தை விட்டு வேறு எங்கெல்லாமோ, சுடர் விட வேண்டும் என்று பிரச்சாரம் செய்கிறார்களே?

சீசீ, என்னதான் பொழுதைப் போக்க வேண்டுமென்றாலும் அதற்காகப் புத்தியையா போக்கிக் கொள்வது?— வேண்டாம்; வேண்டவே வேண்டாம்?

இந்தத் தீர்மானத்துக்கு வந்ததும் என் கணவர் பக்கம் திரும்பி, "எனக்குத் தலையை வலிப்பது போலிருக்கிறது; வீட்டுக்குப் போவோமா?" என்றேன் நான்.

"ஏன், சர்க்கஸ் பிடிக்கவில்லையா?" என்றார் அவர்.

நான் தயங்கவில்லை; "இல்லை!" என்று திட்ட வட்டமாகச் சொல்லி வைத்தேன்.

"அந்த மட்டும் உங்களுக்குப் பிடித்தால் எனக்கும் பிடிக்கும்" என்று சொல்லாமலிருந்தாயே, ரொம்ப சந்தோஷம்!" என்று அவர் கிளம்பினார்.

இருவரும் வெளியே வந்து காரை எடுத்துக் கொண்டு திரும்பினோம்.

இரு புறமும் சரிந்து நின்ற சாலையொன்றில் எங்கள் கார் வந்து கொண்டிருந்தபோது, எங்களுக்கெதிரே ஒரு லாரி ஜொலிக்கும் தன் செயற்கைக் கண்களால் ஜொலிக்காத எங்கள் இயற்கைக் கண்களைக் குருடாக்கியவண்ணம் வந்து கொண்டிருந்தது!

அதை எச்சரிப்பதற்காக எங்கள் காரின் கண்கள் மூடி மூடித் திறந்தன. ஆனால் லாரியின் கண்கள் மூடவும் இல்லை, திறக்கவும் இல்லை—திறந்தது திறந்தபடியே இருந்தன.

திடீரென்று ஒரு வெடிச் சத்தம் இடிச் சத்தம் போல ஒலித்தது; அதைத் தொடர்ந்து லாரியின் பிடிப்பிலிருந்து விடுபட்ட 'டயர்' ஒன்று 'ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்ட சந்தோஷத்தில் ஆடிப் பாடிக்கொண்டே உருண்டது!

அவ்வளவுதான்; நிலைகுலைந்த லாரியைப் போலவே என் கணவரும் நிலை குலைந்தார்!

ஒன்றிலிருந்து ஒன்று தப்ப முயன்ற இரண்டு வண்டிகளும் ஒன்றிலிருந்து ஒன்று தப்ப முடியாமல் மோதிச் சாலையின் சரிவிலே உருண்டு புரண்டன!

"ஐயோ, ஆபத்து!"— இதைத் தவிர என்னால் அப்போது வேறொன்றும் சொல்ல முடியவில்லை.

# 4. செவிக்கு எட்டாத சிரிப்பொலி

என்னத்தைச் சொல்வேன், போங்கள்—கடவுள் பொல்லாதவர்; ரொம்ப ரொம்பப் பொல்லாதவர்.

வயிற்றுப் பசிக்காக ஒருவனை ஒருவன் ஏமாற்றுவதையாவது அவர் மன்னிப்பார்; சதைப் பசிக்காக ஒருவனை ஒருத்தியும், ஒருத்தியை ஒருவனும் ஏமாற்றுவதை அவர் மன்னிக்கவே மாட்டார்.

அதற்காக எவன் எந்த வேடம் தாங்கி நடித்தாலும் சரி, அந்த வேடத்தை அவர் உடனே கலைத்தெறிந்து விடுகிறார். அது மட்டுமல்ல; அதன் காரணமாகத் தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டு அவளோ, அவனோ தவிக்கும்போது அவர் சிரிக்கிறார்; கைகொட்டிச் சிரிக்கிறார்.

ஆனால் மனிதன் என்ன நினைக்கிறான்? என்ன பேசுகிறான்? தன்னலத்துக்காக அன்பைக் கொல்லும் போதெல்லாம், தான் அதை வளர்ப்பதாக நினைக்கிறான்; வளர்ப்பதாகப் பேசுகிறான். அப்படி நினைக்கும்போதெல்லாம், அப்படிப் பேசும்போதெல்லாம் தன்னைத் தானே 'அறிஞ'னாகத் தம்பட்டம் அடித்துக் கொண்டு, சுண்டலுக்காகத் தாளம் போடும் பஜனை கோஷ்டி போல் தனக்கென்று தாளம் போடத்

தனிக்கோஷ்டி ஒன்றைச் சேர்த்துக்கொண்டு, மறைக்க முடியாத தன்னுடைய 'அறியாமை'யை மறைக்கப் பார்க்கிறுன். மன்னிக்க முடியாத இந்தக் கொலையை— ஆன்மாவுக்கே ஆதாரமான இந்த அன்புக் கொலையைத் தன்னைப் போன்ற மனிதர்களிடம் வேண்டுமானுல் அவன் மறைக்கலாம்; அணுவுக்குள் அணுவான கடவுளிடம் மறைக்க முடியுமா?

அவர் சிரிக்கிருர்; சிரிப்பை நெருப்பாக்கி, அவன் செயலை நீராக்கி, அன்பைக் கூராக்கி, அவன் அறிவை நேராக்கச் சிரிக்கிருர்!

செவிக்கு எட்டாமல் சிந்தனைக்கு மட்டுமே எட்டும் இந்தச் சிரிப்பொலி என் கணவருக்கும் எட்டித்தான் இருந்தது. எனினும் அதன் பொருளை—உண்மைப் பொருளை அவர் அறியவில்லை. அறிந்திருந்தால் முதல மனைவியுடன் நடித்த முதல் வாழ்க்கை நாடகத்தின போதேஅன் பென்னும் அரிதாரத்தை அவர் தம்முடைய முகத்தில் பூசியிருக்க மாட்டார்; அகத்தில் பூசி யிருப்பார். அவ்வாறு பூசியிருந்தால், இரண்டாவது மனைவியான என்னுடன் இரண்டாவது வாழ்க்கை நாடகத்தை நடித்துப் பார்க்க வேண்டும் என்ற நப்பாசை அவருடைய உள்ளத்தில் எழாமல் இருந் திருக்கும; கடவுளும் அவருடைய வேடத்தைக் கலைத் தெறிந்துவிட்டுக் கைகொட்டிச் சிரிக்காமல் இருந் திருப்பார்.

பார்க்கப்போனுல் தானே அன்பாகவும், அன்பே தானுகவும் இயங்கும் கடவுள் என்ன சொல்கிருர்?

"அன்பில் என்னைக் காணுங்கள்!" என்று சொல் லாமல் சொல்கிருர்.

ஆனால், மனிதன் என்ன காண்கிறான்? அதிலும் என் கணவரைப் போன்றவர்கள் என்ன காண்கிறார்கள்?

அதைச் சொல்ல எனக்கு வெட்கமாயிருக்கிறது—அதிலும் பெண்ணாய்ப் பிறந்த எனக்கு அதைச்சொல்ல வெட்கமாயிருக்கிறது.

அத்துடன், 'பண்பைப் பற்றிப் பேசி அன்பைக் கொல்லும் பாவிகள் என்னைப் பண்பில்லாதவள் என்று பழிப்பார்களே!''என்று பயமாகவும் இருக்கிறது. இருந்தாலும் அவர்கள் என்னைச் சொல்ல வைத்து விட்டார்கள். அதற்காகச் சொல்கிறேன்; இரகசியமாகச் சொல்கிறேன். காது கொடுத்துக் கேளுங்கள்—ஐயா, கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்கள். அன்பில் கடவுளைக் காணாமல் ஆண் குறியையும் பெண் குறியையும் காண்கிறார்கள்; அவற்றின் கலப்பே அன்பென்றும், அதில்லாமல அன்பு ஒரு நாளும் வாழ முடியாதென்றும் சாதிக்கிறார்கள்!

இந்தச் சாதனையே 'நவீன வாழ்க்கை' என்று எங்களைப் போன்ற வாசகர்கள் வேண்டுமானால் சாதிக்கலாம்; இந்தச் சாதனையே 'நவீன இலக்கியம்' என்று உங்களைப் போன்ற எழுத்தாளர்கள் சாதிக்கலாமா? சொல்லுங்கள் ஐயா, சொல்லுங்கள்!

ஐயோ, அதனால் நான் அடைந்த துன்பம் உங்கள் எழுத்துக்கு எட்டாவிட்டாலும் என்னுடைய எண்ணத்துக்கு எட்டித் தொலைகிறதே ஐயா, என்ன செய்வேன்? எப்படிச் சொலவேன்?

எங்கள் கார் விபத்துக்குள்ளான பிறகு, ஏழெட்டு நாட்களாக என்ன நடந்ததென்றே எனக்குத்

தெரியாது. கடைசியாகக் கண் விழித்தபோது காந்தா எனக்கு அருகே இருந்தாள்.

"இப்பொழுது நான் எங்கிருக்கிறேன், காந்தா?" என்றேன் நான், அவளை நோக்கி.

"பூலோக நரகத்தில்!" என்றாள் அவள்.

அப்பொழுதுதான் அடியாள் இருப்பது ஆஸ்பத்திரி என்று எனக்குத் தெரிந்தது. அத்துடன் எங்கள் கார் அன்றிரவு விபத்துக்குள்ளான நிகழ்ச்சியும் என்னுடைய கவனத்திற்கு வந்தது. சுற்றும் முற்றும் பார்த்தேன்; என் கட்டிலுக்கு அடுத்தாற் போலிருந்த கட்டிலில் என் கணவர் கிடத்தப்பட்டிருந்தார். அவர் வரவில்லை; அவர் இன்னும் இந்த உலகத்துக்கு வரவேயில்லை!

நேற்றுக் கல்யாணம், இன்று இந்த வைபோகம்—என்னால் தாங்க முடியவில்லை; ஓடோடியும் சென்று அவருடைய கால்களைப் பற்றிக் கொண்டு அழுதேன், அழுதேன், அழுதுகொண்டே இருந்தேன்.

திடீரென்று ஒரு கை எங்கிருந்தோ வந்து என்னைப் பற்றி இழுத்து அப்பால் விட்டது; திரும்பிப் பார்த்தேன். அத்தையுடன் நின்றுகொண்டிருந்த மாமா, "இன்றுதான் ஆபரேஷன் நடந்திருக்கிறது; இதற்குள் அவரை நீ ஆட்டிப் படைக்கலாமா, அம்மா?" என்றார்.

"ஆபரேஷனா, எதற்கு?" என்றேன் நான் திடுக்கிட்டு.

"ஸ்!" என்று அவர் என் வாயைப் பொத்தினார்.

"ஏன், அதை என்னிடம் சொல்லக்கூடாதா, அத்தை?" என்றேன் நான், என் அத்தையின் பக்கம் திரும்பி.

"சொல்லும்போது சொல்கிறேன்; பேசாமல் இரு!" என்று அவளும் என் வாயைப் பொத்தினுள்.

உடனே நான் காந்தாவின் பக்கம் திரும்பி, "ஏண்டி காந்தா, நீயாவது அதை எனக்குச் சொல்லேண்டி?" என்றேன் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக.

அவ்வளவுதான்; ஒரே தாவாகத் தாவி அவள் என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, 'ஓ'வென்று கதறிக் கதறி அழ ஆரம்பித்துவிட்டாள்!

எனக்கு ஒன்றும் புரியவில்லை—ஆமாம், எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அவளைப் பிடித்து அப்பால தள்ளிவிட்டு, டாக்டரைத் தேடி, 'ஓடு, ஓடு' என்று ஓடினேன். அப்பொழுதுதான் அவரை ஏற்றிக் கொண்டு அவருடைய கார் வீட்டை நோக்கிக் கிளம்பிக் கொண்டிருந்தது; அதைத் தாவிப் பிடிக்க முயன்ற நான், தடுமாறி விழுந்தேன்.

அப்போது அந்த வழியே வந்த நர்ஸ் ஒருத்தி என்னைத் தூக்கி விட்டுவிட்டு, "இன்றுதான் இநத உலகத்துக்கு வந்திருக்கிறீர்கள்; இதற்குள் ஏன் இந்தப் பாடு படுகிறீர்கள்?" என்ருள் அனுதாபத் துடன்.

"அதிருக்கட்டும்; என் கணவருககு என்ன ஆபரேஷன்?" என்றேன் நான்.

"பெரிய ஆபரேஷன் ஒன்றுமில்லை; சின்ன ஆபரேஷன்தான்!"

"சின்ன ஆபரேஷன் சரி; என்ன ஆபரேஷன்?"

"சின்ன ஆபரேஷன் என்றால் சின்ன ஆபரேஷன் தான்!" என்று அவள் அடித்துச் சொல்லி விட்டு, என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றாள்; நானும் ஏமாற்றத்துடன் அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே எங்கள் அறைக்குத் திரும்பினேன்.

காணவில்லை; காந்தாவை அங்கே காணவில்லை.

"மாமா, மாமா!"

காணவில்லை; மாமாவையும் அங்கே காணவில்லை.

"அத்தை, அத்தை!"

காணவில்லை; அத்தையும் அங்கே காணவில்லை.

போய்விட்டார்கள்; எல்லோரும் போயே போய் விட்டார்கள்!

எனக்கு ஒரே குழப்பமாயிருந்தது; என் கணவரை நெருங்கினேன். அவரோ கண்ணையும திறக்கவில்லை; வாயையும் திறக்கவில்லை.

எப்போது பேசுவாரோ? எப்போதுதான் என்னுடன் பேசுவாரோ?

தெரியவில்லை; தெரியவேயில்லை!

இந்த நிலையில் இரண்டே இரண்டு கேள்விகள் மட்டும் எனக்கு முன்னால் விஸ்வரூபம் எடுத்து நின்றன. அவற்றில் ஒன்று இது:

"ஏன் ஆபரேஷன், எதற்காக ஆபரேஷன்?"

இன்னொன்று இது:

"ஏன் அழுதாள்? எதற்காகக் காந்தா என்னைக் கட்டிக் கொண்டு அழுதாள்?"

எனக்கு முன்னால் நின்ற இந்தக் கேள்விகள் இரண்டும் சிறிது நேரத்திற்கெல்லாம் என்னைச் சுற்றிச் சுற்றி ஒலித்தன. பிறகு, எங்கள் அறையைச் சுற்றிச்சுற்றி ஒலித்தன. கடைசியில், நாங்கள் இருந்த ஆஸ்பத்திரியையே சுற்றிச்சுற்றி அவை ஒலிக்க ஆரம்பித்துவிட்டன!

நான் காதைப் பொத்திக் கொண்டேன்—ஆமாம், நான் காதை இறுகப் பொததிக கொண்டேன்.

ஓய்ந்தது; என்னையும் என் இதயத்தையும் சித்திரவதை செய்து கொண்டிருந்த அந்த ஒலி கொஞ்சங் கொஞ்சமாக ஓய்ந்தது.

எடுத்தேன்; காதைப் பொத்திக் கொண்டிருந்த கையை எடுத்தேன.

"அடாடா, அதற்குள எழுந்துவிட்டாளே!" என்று யாரோ ஒருவர் அசுவாரஸ்யத்துடன் சொல்லும் குரல் என் காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தேன்; அசடே உருவான என் அத்தான் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

ஒருவேளை என்னையும் என் ஆன்மாவையும் பிடுங்கித் தின்னும் கேள்விகளுக்குப் பதில் இவருக்கும் தெரிந்திருக்கலாமல்லவா? தெரிந்தால இவராவது என்னிடம் அதை ஒளிக்காமல் சொல்லலாமல்லவா?

இந்த எண்ணம் எழுந்ததும், "வாருங்கள், அத்தான்!" என்று அவர் எதிர்பாராத வரவேற்பை நான் அவருக்கு எதிர்பாராதவிதமாக அளித்தேன்.

அவ்வளவுதான்; கூரைக்கும் தரைக்குமாக அவர் ஒரு குதி குதித்து, "எங்கே, இன்னொருதரம் என்னை 'அத்தான்!' என்று சொல், லலிதா? எங்கே, இன்னொரு தரம் என்னை 'அத்தான்!' என்று சொல், லலிதா?" என்று கொஞ்சிக் கொஞ்சிக் கேட்டுக்கொண்டே வந்து எனக்குப் பக்கத்தில் நின்றார்.

இது எனக்கு என்னவோ போலிருந்தது.

'அட, கடவுளே!' என்று பெருமூச்சுவிட்ட வண்ணம் என் கணவருடைய கால்மாட்டில் உட்கார்ந்தேன்; "காலை வலிக்கிறதா, லலிதா?" என்று கரகரப்பு மிக்க குரலில் கனிவு ததும்பக் கேட்டுக் கொண்டே அவரும் எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்தார்!

'இதென்ன தொல்லை?' என்று நான் எழுந்தேன்; "சரி, காலை வலிக்கவில்லை போலிருக்கிறது!" என்று கனிவுததும்பிய குரலில் தெளிவு ததும்பக் கூறிக் கொண்டே அவரும் என்னுடன் எழுந்தார்.

பொறுமை இழந்த நான், "கேள்வியைத்தான் உங்களுக்கு நீங்களே போட்டுக் கொள்கிறீர்கள்?" பதிலைக்கூட நீங்கள் யாரிடமிருந்தும் எதிர்பார்ப்ப தில்லையா?"என்றேன், கொஞ்சம் விலகி.

"ஏன் எதிர்பார்க்கவேண்டும்? எதற்கு எதிர்பார்க்க வேண்டும்? எங்களுக்குத்தான் உங்களைப் போன்ற பெண்களின் முகத்தைப் பார்த்தாலே எல்லாம் தெரிந்து விடுகிறதே!" என்றார் அவர், கொஞ்சம் நெருங்கி.

"தெரிந்தால் தெரியட்டும்; போய் வாருங்கள்!" என்றேன் நான்.

"இதற்குத்தான் லலிதா, இவ்வளவு சீக்கிரம் நீ எழுந்து விட்டது எனக்குக் கொஞ்சங்கூட பிடிக்க

வில்லை; எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை!" என்றார் அவர், இஞ்சிதின்ற குரங்கைப் போல.

"ஏனாம்?" என்று நான் போனாற் போகிறதென்று கேட்டு வைத்தேன்.

"தன்னை மறந்த நிலையில் இருக்கும்போதுதானே உன்னை என்னால் காதலிக்க முடிகிறது?"

"அட, பாவி; இன்னுமா நீ என்னைக் காதலிக்கிறாய்?"

"என்ன லலிதா, இப்படிக் கேட்டுவிட்டாயே? இல்லாவிட்டால் இத்தனை நாட்கள் என் இஷ்டம்போல் வந்து இத்தனை நாட்கள் என் இஷ்டம்போல் உனக்குப் பக்கத்தில உட்கார்ந்து, இத்தனை நாட்கள் என் இஷ்டம்போல் உன் ஸ்பரிச சுகத்தில் மகிழ்ந்து, இத்தனை நாட்கள் என் இஷ்டம்போல் எழுந்து செல்ல எனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது?"

"சந்தேகமென்ன, பைத்தியம்தான்! இல்லாவிட்டால் கல்யாணத்தன்று இரவு, 'என் லலிதாவைக் காணோமே, என் லலிதாவைக் காணோமே!' என்று நீ கத்தித் தொலைத்து என் மானத்தை வாங்கியிருப்பாயா?" காருக்குப் பின்னால்தான் நீ தொத்திக் கொண்டு வந்து என்னையும் உன்னைப் போல் பைத்தியமாக நடிக்க வைத்திருப்பாயா?"

"ஆஹா! அன்று மட்டும் அந்தப் பாழாய்ப்போன போலீஸ்காரன் என்னைப் பார்க்காமல் இருந்திருந்தால் ஆஸ்பத்திரியில் அடியேனுக்குக் கிடைத்த சந்தர்ப்பம் சர்க்கஸிலும் கிடைத்திருக்கும். நானும் உன் கணவரைப்போல ஒரு டிக்கட் வாங்கியிருப்பேன்,

நானும் உன் காதலனைப்போல் உனக்குப் பக்கத்தில் 'ஜம்'மென்று உட்கார்ந்திருப்பேன். இன்று 'போய் வாருங்கள்!' என்று செல்வது போல் அன்று உன்னால் சொல்லியிருக்க முடியாது; போவதாயிருந்தால் நீங்கள் தான் எழுந்து போயிருக்கவேண்டும், இல்லையா?"

"ஆச்சரியம், கல்யாணத்திற்குப் பிறகுகூட இந்தக் காதல் பைத்தியம் தெளியாமலிருப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்!"

"இல்லை லலிதா, இல்லை. இது புதுமை; புதுமையிலும் புதுமை. எங்களைப் போன்றவர்களுக்குக் கன்னியைக் காதலிப்பதைக் காட்டிலும் கல்யாணமானவளைக் காதலிப்பதில்தான் அந்தப் புதுமை இருக்கிறதாக்கும்?"

"இருக்கலாம்: உங்களைப்போன்ற கையாலாகாதவர்களுக்குக் கன்னியைக் காதலிப்பதைக் காட்டிலும் கல்யாணமானவளைக் காதலிப்பதில் அந்தப் புதுமை இருக்கலாம்!"

"ஏன் இருக்காது? கையாலாகாதவர்களிடம் காசுக்குத்தான் பஞ்சம்; காதலுக்குக்கூடவா பஞ்சம்?"

"புத்திக்கும் பஞ்சமாயிருப்பதுதான் எனக்குப் புரியாத புதிராயிருக்கிறது!"

"புதிராவது! புரட்சி லலிதா, புரட்சி. அந்தப் புரட்சியும் எதில் இருக்கிறது, தெரியுமா? யாராவது ஓர் ஏழைப் பெண்ணை—அதாவது, காசால் வாழ முடியாத ஏழைப் பெண்ணை—காதலால் அவளையும் வாழ வைக்க முயன்று, தன்னையும் வாழ வைத்துக் கொள்ள முயல்வதில் இல்லை; காசால் வாழமுடிந்த

பெண்ணை—அதாவது, பலவீனம் மிக்க பணக்காரன் ஒருவனைக் கல்யாணம் செய்து கொண்டு தானும் பணக்காரியாகிவிட்ட பெண்ணை—காதலால் அவனையும் வாழவைக்க முயன்று, தன்னையும் வாழ வைத்துக் கொள்ள முயல்வதில்தான் இருக்கிறது!''

''அந்தப் புரட்சிகரமான காதலை அவள் உங்கள் மேல் கொள்ளாமலிருந்தால்?''

''அவள் கொள்ளாமலிருந்தால் என்ன, அவள் முகந்தான் எங்களைப் பார்க்கும் போதெல்லாம் காதல் கொள்கிறதே!''

''அகம்?''

''அதைப்பற்றி நாங்கள் அவ்வளவாகக் கவலைப் படுவதில்லை!''

''ஆமாம். அவள் முகம் உங்களைப் பார்க்கும் போதெல்லாம் காதல் கொள்கிறதென்று உங்களுக்கு எப்படித் தெரிகிறது?''

''விரிந்து பரந்துப் பெருகி வழியும் கற்பனையில் தான்!''

''உங்கள் கற்பனைக்காக அவள் தன் கற்பை இழந்து விட வேண்டுமா?''

''இழக்காவிட்டால் அன்புப் புரட்சி செய்வது எப்படி?''

''அதனால்தான் மனைவிக்குக் கணவனைத் தவிர ஒரு துணைவனும், கணவனுக்கு மனைவியைத் தவிர ஒரு துணைவியும் வேண்டும் என்கிறீர்களா?''

"ஆமாம் லலிதா, ஆமாம். அதுவே எங்கள் லட்சியம்; அதுவே எங்கள் பேராசிரியர்கள்கூட ஒப்புக்கொள்ளும் லட்சியம்!"

"லட்சியம் எதுவாயிருந்தாலும் அது ஆண்களுக்குத்தான் இருக்கவேண்டும்; பெண்களுக்கு இருக்கக்கூடாது அப்படித்தானே?"

"ஆமாம் லலிதா, ஆமாம். அப்பொழுதுதான் காதல் புத்துயிர் பெறும்; காதல் புத்துணர்ச்சி பெறும்!"

"அதனால் கல்யாணமாகாத தாய்மார்களும், கல்யாணமாகாத தகப்பன்மார்களும் மேல்நாட்டில் பெருகுவது போலக் கீழ்நாட்டிலும் பெருகவேண்டும். அப்படித்தானே?"

"பெருகி என்ன பிரயோசனம்? அங்கேயும் சரி, இங்கேயும் சரி—'எங்கள் மாடல் காதல்' இன்னும் அவ்வளவு தூரம் வளரவில்லை; அங்கேயும் எங்கள் 'மாடல் நாவல்கள்' இன்னும் அவ்வளவு தூரம் வெளியாகவில்லை. ஆனால் உங்களைப் போன்றவர்களுக்கு இருக்கும் தெய்வ பக்தி எங்களுக்கு உண்டு; அந்தத் தெய்வம் கல்யாணமாகாத தாய்மார்களோடு கல்யாணமான தாய்மார்களையும், கல்யாணமாகாத தகப்பன்மார்களோடு கல்யாணமான தகப்பன்மார்களையும் கட்டாயம் காப்பாற்றும் என்ற நம்பிக்கையும் உண்டு!"

"அட, சோம்பேறிப் பயல்களா!"

"சுகம் சோம்பேறித்தனத்தில்தான் இருக்கிறது. அதற்கு ஆதாரம் இந்து தர்மத்தில்கூட இருக்கிறது!"

"என்ன ஆதாரம், எதற்கு ஆதாரம்?"

"கணவனுக்கு மனைவியாயிருப்பவள், காதலனுக்கு துணைவியாகவும இருக்கலாம் என்பதற்கு ஆதாரந் தான்!"

"அப்படியே இருக்கட்டும். வண்டு மலரை மொய்ப்பது நல்லதா, மலத்தை மொய்ப்பது நல்லதா?"

"மலரை மொய்ப்பது பழமை; மலத்தை மொய்ப்பது புதுமை!"

"அந்தப் புதுமையின் விளைவுதான் தங்களை மறந்த நிலையில் இருக்கும் எங்களைப் போன்ற பெண்களிடம் உங்களைப் போன்ற ஆண்கள் ஸ்பரிச சுகம் காண்பதோ?"

"ஆமாம் லலிதா, ஆமாம். அதுவே புதுமை; அதுவே புரட்சி!"

"அப்படியானால் செத்த பின் மனிதர்களைப் பிடுங்கித் தின்னும் கழுகுகளுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்?"

"மனிதர் உயிரோடிருக்கும்போது கழுகுகளால் அவர்களைப் பிடுங்கித் தின்ன முடிவதில்லை; தங்களை மறந்த நிலையில் பெண்கள் இல்லாமலிருக்கும்போது எங்களால் அவர்களைக் காதலிக்க முடிவதில்லை. இதுவே வித்தியாசம்!"

"இந்த வித்தியாசங்கூட இல்லாமல் அழுகிப் போன பிணத்தில் புழுத்து நெளியும் புழுக்களைப்போல நீங்கள் பெண்களைக் கண்டால் நெளிகிறீர்களே?"

“எல்லாம் அன்பை வாழ வைப்பதற்காக லலிதா, எல்லாம் அன்பை வாழ வைப்பதற்காக!”

“வாழ வைப்பதற்கா, சாக வைப்பதற்கா?”

“எது வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும் எங்கள் வாழ்வுக்கு வழி கல்யாணமானவளைக் காதலிப்பதில் தான் இருக்கிறது!”

“கன்னியைக் காதலிப்பதில் இல்லையாக்கும்?”

“இல்லை; இல்லவே இல்லை!”

“இல்லாவிட்டால் போகட்டும். இப்போது நீ இந்த இடத்தைவிட்டுப் போகப்போகிறுயா, இல்லையா?”

“ஏன். போகவேண்டும், எதற்காகப் போக வேண்டும்? வரவேற்பை எதிர்பார்க்காத நாங்கள்தான் பிரிவுபசாரத்தையும் எதிர்பார்ப்பதில்லையே?”

“கொஞ்ச நேரத்திற்கு முன்னுல் எதிர்பாராத வரவேற்பை எதிர்பாராத விதமாக உனக்கு அளித்த நான், இப்போது எதிர்பாராத பிரிவுபசாரத்தையும் எதிர்பாராத விதமாக உனக்கு அளிக்கிறேன். போ, உடனே இந்த இடத்தை விட்டுபோ!”

“ஐயோ, லலிதா உனக்குத் தெரியவில்லை; உண்மை உனக்குத் தெரியவில்லை. தெரிந்தால் என்னை நீ விரட்ட மாட்டாய்; உன்னையே விருந்தாக வைத்து என்னை நீ வருந்தி, வருந்தி அழைப்பாய்!”

“உனக்குத் தெரிந்த உண்மை எனக்கும் தெரியும். போடா நாயே, போடா வெளியே!”

“போடி, புத்திக்கெட்டவளே! உனக்குத் தெரியாது; எனக்குத்தெரிந்த உண்மை உனக்குத் தெரியவே தெரியாது!”

"அதென்னடா, அப்படிப்பட்ட உண்மை?"

"அதுதான் உன் கணவனுக்கு ஆபரேஷன் நடந்த உண்மையடி, ஆபரேஷன் நடந்த உண்மை!"

"என்ன ஆபரேஷன், எதற்கு ஆபரேஷன்?"

"அதை ஏன் இப்போது சொல்லவேண்டும்? கசப்பான அந்த உண்மை தெரிந்தபின் இனிப்பான என்னைத் தேடி என்றாவது ஒரு நாள் நீ வருவாய்; அப்போது சொல்கிறேன்!" என்று கறுவிக்கொண்டே அவன் சென்றான்—ஆமாம், அவன்தான் சென்றான்—அவன் கெட்ட கேட்டுக்கு 'அவர்' என்ன வேண்டிக் கிடக்கிறது, 'அவர்?'

அன்றிரவு என் கணவருடைய பாத கமலங்களையே, பஞ்சணையாகக்கொண்டு நான் தூங்காமல் தூங்கிக் கொண்டிருந்தபோது, யாரோ எதையோ உருட்டிவிட்டுத் தானும் அதன் மேல் உருண்டு விழும் சத்தம் என் காதில் விழுந்தது. திடுக்கிட்டு விழித்துப் பார்த்தேன்; பாத கமலங்களுக்குப் பதிலாகப் பஞ்சணை என் தலைமாட்டில் இருந்தது. பரபரப்புடன் எழுந்து விளக்கைப் போட்டேன்; கணவரைக் காணோம், சுற்று முற்றும் பார்த்தேன்; தாளிடப்பட்டிருந்த கதவு திறக்கப்பட்டிருந்தது!

இவர் எப்போது மூர்ச்சைத் தெளிந்து எழுந்தார்? இவர் எப்போது கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றார்?

ஏன் சென்றார், எதற்காகச் சென்றார்?

ஒருவேளை......

குளிக்கும் அறையை நோக்கி விரைந்தேன்; கதவு தாளிடப்படாமலிருந்ததால் காத்திருந்து பார்க்காமல் திரும்பினேன்.

எங்கு சென்ருர்? எதையோ யாரோ உருட்டிஞற் போலிருந்ததே, அது அவர்தாஞ? அவரேதாஞ?

அல்லது......

ஏன் அவராகவே இருக்கக்கூடாது? அவராகவே தான் இருக்கவேண்டும்!

ஓடினேன்; தேடினேன்.

ஓர் அறை; இருட்டறை. அந்த அறையிலிருந்த இருட்டைக் கிழித்துக்கொண்டு ஒரு தீக்குச்சி திக்கென்று எரிந்தது!

நின்றேன்; பார்த்தேன். அவர்தான்; அவரேதான். தீக்குச்சியின் வெளிச்சத்தில் எதையோ தேடிய வண்ணம் பீதி நிறைந்த அவருடைய கண்கள் நான் இருந்த திசையை நோக்கி நோக்கித் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தன!

கண்டேன்; காணுதவள்போல் ஒளிந்து நின்றேன்

ஐயோ, இதென்ன! அங்கிருக்கும் விஷக் குப்பியை அவர் ஏன் தம்முடைய நடுங்கும் கைகளால எடுக்கிருர? அவசர அவசரமாக அதை ஏன் ஆவலே உருவாய்த் திறக்கிருர்?

நின்றது நின்றபடி நிற்கும் அவருடைய கண்கள் ஏன் மூடுகின்றன? அவருடைய உதடுகள் ஏன் அசைகின்றன?

கடவுளுக்குத் தம் கடைசி வணக்கத்தைச் செலுத்து கிறாரா? கண்கண்ட தெய்வமாயிருப்பவர், கண் காணாத தெய்வமாகப் போகிறாரா?

ஏன், ஏன்?

அவ்வளவுதான்; கையிலிருந்த குப்பி அவருடைய வாயை நெருங்குவதற்கு முன், "ஏன் இந்த முயற்சி?" என்று கேட்டுக்கொண்டே பாய்ந்து சென்று அவருடைய கையைப் பற்றினேன்.

"விடு என்னை, விட்டுவிடு என்னை!" என்று அவர் இறைந்தார்.

"வாழ்வில் பங்கு கொண்ட எனக்குச் சாவிலும் பங்கு கொடுங்கள்; விட்டுவிடுகிறேன்!" என்றேன நான்.

அவர் என்னைப் பார்த்தார்; ஒரு முறைக்கு இருமுறை பார்த்தார்.

உடனே கையிலிருந்த குப்பியைக் கீழே விட்டெறிந்து விட்டு வெளியே வந்தார். "கேட்க மாட்டேன்; சாவில் நீ பங்கு கேட்டாலும் நான் பங்கு கேட்கமாட்டேன். வாழ்வில் வேண்டுமானால் பங்கு கேட்பேன்: வாழ்வில் வேண்டுமானால் உன்னிடம் நான் பங்கு கேட்பேன்!" என்றார்.

நான் அவரைப் பார்த்தேன்; ஒரு முறைக்கு இரு முறை பார்த்தேன்.

"கேட்கவில்லையா உனக்குக் கேட்கவில்லையா?" என்று அவர் எதையோ உற்றுக் கேட்பவர் போல் என்னைக் கேட்டார்.

ஒன்றும் புரியாமல், ''எதைக் கேட்கவில்லையா என்கிறீர்கள்?'' என்றேன் நான்,

''அதோ கேட்கிறதே, அந்தச் சிரிப்பொலியைத் தான்! அதோ கேட்கிறதே, அந்தச் சிரிப்பொலியைத் தான்!'' என்றார் அவர்.

நானும் உற்றுக் கேட்டேன். எனக்குக் கேட்க வில்லை!'' எனக்கு அந்தச் சிரிப்பொலி கேட்கவேயில்லை.

''இல்லையே, எனக்குக் கேட்கவில்லையே!'' என்றேன் குழப்பத்துடன்.

''கேட்காது; ஒரு நாள்—ஒரே ஒரு நாள்—என் வாழ்வில் பங்குகொண்ட பாவத்துக்காக என்னுடைய சாவிலும் பங்கு கேட்கும் உனக்கு,உன்னைப் போன்றத் தமிழ்நாட்டுப் பெண்களுக்கு அந்தச் சிரிப்பொலி கேட்கவே கேட்காது!'' என்று முணுமுணுத்த வண்ணம் மேலே இரண்டடி எடுத்து வைத்தவர், ''நான் செத்தால் நீயும் என்னைப்போல் மறுமணம் செய்துகொள்வாயா? அதற்கு அன்பே காரணம் என்று அவனிடம் சாதிப்பாயா, லலிதா?'' என்று கேட்டுக்கொண்டே என்னை நோக்கித் திரும்பினார்.

இதற்கு நான் என்ன சொல்வேன்? சிரிக்க முடியாமல் சிரித்தேன்!

அவ்வளவுதான்; ''இப்படித்தான் லலிதா, அவளும் இப்போது என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கிறாள்! இப்படித்தான் லலிதா, அவளும் இப்போது என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருக்கிறாள்!'' என்று அவர் கத்த ஆரம்பித்துவிட்டார்.

இப்போதுதான் செவிக்கு எட்டாத அந்தச் சிரிப்பொலி என் சிந்தனைக்கு எட்டிற்று. விஷயம் என்னவென்பதை ஓரளவு புரிந்துகொண்ட நான், "யாரும் சிரிக்கவில்லை; உள்ளே வாருங்கள்!" என்று அவரை அழைத்துக்கொண்டு போய்க் கட்டிலின்மேல் படுக்க வைத்தேன்.

"கேட்கிறது, அவளுடைய சிரிப்பொலி இன்னும் எனக்குக் கேட்கிறது!" என்றார் அவர்.

"தூங்குங்கள்; கேட்காது!" என்றேன் நான்.

"கேட்காமல இருக்கட்டும் தூங்குகிறேன்!" என்றார் அவர்.

ஏக காலத்தில் இரண்டும் சாத்தியமாவது எப்படி? தம்மிடம் அன்பு கொண்ட முதல் மனைவியின் அன்பை என்மேல் கொண்ட அன்பால் கொல்ல முடிந்த அவரால், ஆன்மாவையும் கொல்ல முடிந்தாலன்றோ சாத்தியமாகும்?

# 5. "கடவுளே, வழி காட்டு!"

விதி மனிதனிடம் விளையாடுகிறது. ஆனால், மனிதன் விதியுடன் விளையாடுகிறானா? விரும்பாத மனிதனிடம் விதி மட்டும் ஏன் விளையாடுகிறது?— இது சிலருக்குப் புரியாத புதிராயிருப்பது போல் எனக்குப் புதிராயில்லை!

ஆம்; புரிந்தது—புரிந்தது என்றால் புதிர் புரியவில்லை; புதிர் ஏன் புரியவில்லை என்று புரிந்தது.

புரிந்தால் மனிதன் மனிதனாகவா இருப்பான்? சந்தர்ப்பம் வாய்த்தால் தன் இனத்தைத் தானே தின்று கொழுக்கத் துணியும் தேளாகி விடமாட்டானா?

மனிதனைத் தேளாக்காமல் மனிதனாகவே வைத்திருப்பதோடு, அவல நிலை அடைந்த போதெல்லாம் அவனுக்கு ஆறுதலையும் அளித்து வரும் புதிர் எனக்கும் ஆறுதல் அளித்தது. அதாவது, ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பியதும் என்னையும் என் கணவரையும் பார்க்க வந்தவர்களெல்லாம் மேற்படி புதிரைப் பற்றியும் அதன் புரியாத தன்மையைப் பற்றியுமே எங்களிடம் பேசினார்கள். இது காந்தாவுக்குப் பிடிக்கவில்லை. எப்படிப் பிடிக்கும்?

எங்கள் கலாசாலை வாழ்க்கையின்போது, ஒருநாள் அவளும் நானும் சாலை வழியே சென்றுகொண்டிருந்தோம். எங்களுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த பெரியவர் ஒருவர் சாலையோரத்தில் கிடந்த தேய்ந்த லாடம், கல், முள், கண்ணாடித் துண்டுகள் ஆகியவற்றையெல்லாம் கர்ம சிரத்தையுடன் பொறுக்கி எடுத்துக்கொண்டே சென்றார். அப்போது வாழைப்பழத் தோல் ஒன்று வந்து அவருக்கு முன்னால் விழுந்தது; அதையும் எடுத்துக் கொண்டு மேலே செல்லவில்லை. நின்றார்; நின்று. பார்த்தார். மதிற்சுவரின் மேல் உட்கார்ந்து வாழைப் பழம் தின்று கொண்டிருந்த 'புண்ணியாத்மா' செய்யும் 'பரோபகாரம்' அது என்று தெரிந்தது. "தம்பி! தோட்டந்தான் பின்னாலிருக்கிறதே, தோலை அதில் விட்டெறியலாமே?" என்றார் பெரியவர்.

"அது என் இஷ்டம்!" என்றான் சிறியவன் வயதில மட்டுமல்ல; புத்தியிலும்தான்!

"என்னமோ, உன்னுடைய இஷ்டம் உன்னைக் கஷ்டத்தில் கொண்டுவந்து விடாமல் இருந்தால் சரி!" என்று சொல்லிக் கொண்டே பெரியவர் மேலே சென்றார்.

இரண்டு அடிகள் எடுத்துவைத்ததும் தனக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த ஒருவர் 'தடா'லென்று கீழே விழும் சத்தம் அவருடைய காதில விழுந்தது. திரும்பிப் பார்த்தார்; வழுக்கி விழுந்தவரைக் கண்டு வாழைப்பழத்தோலை எறிந்தவன் சிரித்துக் கொண்டிருந்தான். "அட பாவமே, அவனுடைய இஷ்டம் அவனைக் கஷ்டத்துக்கு உள்ளாக்காமல் இவரையல்லவா கஷ்டத்துக்கு உள்ளாக்கிவிட்டது!" என்று

வருத்தத்துடன் சொல்லிக்கொண்டே, விழுந்தவரைத் தூக்கி விடுவதற்காகக் குனிந்தார். அதே சமயத்தில் சாலையோரத்திலிருந்த ஆலமரம் ஒன்று எதிர்பாராத விதமாக அடி பெயர்ந்து அவர்மேல் விழுந்தது. அலறினார்; அழுதார்; துடித்தார்.

அவன் சிரித்தான், சிரித்தான், சிரித்துக் கொண்டே இருந்தான்!

பாதசாரிகள் பார்த்தார்கள்; "எல்லாம் விதியின் விளையாட்டு!" என்ற தேறுதலில் ஆறுதலைக் கண்டார்கள்.

அதைத் தவிர மனிதனுக்கு ஆறுதல் அளிக்க இந்த உலகத்தில் வேறு என்ன இருக்கிறது? நானும் அதே தேறுதலில் ஆறுதலைக் கண்டேன்.

காந்தா அவ்வாறு காணவில்லை. "விதியாவது, விளையாட்டாவது! முட்டாள்தனம், பெரியவரின் முட்டாள்தனம்!" என்றாள் ஆத்திரத்துடன்.

நான் சிரித்தேன். "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

"இப்படியும் சிலர் புத்திசாலிகளாகப் பார்க்கிறார்களே, அதற்காகச் சிரிக்கிறேன்!" என்றேன் நான்.

"உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! பிறருடைய காரியத்தில் தலையிடாமல் தன்னுடைய காரியத்தை மட்டும் பார்த்துக்கொண்டு போயிருந்தால் இவருக்கு இந்தக் கதி வந்திருக்குமா?"

"நாய்கூட அப்படிப் போவதில்லையே, ஒரு நாய் குரைத்தால் ஒன்பது நாய்கள் சேர்ந்து குரைக்கின்றனவே!"

"எதற்குக் குரைக்கின்றன? எப்போது குரைக்கின்றன? எதிரியைத் தன்னலத்திற்காகத் துரத்தியடிக்கும்போது மட்டுமே ஒரு நாயுடன் ஒன்பது நாய்கள் சேர்ந்து குரைக்கின்றன. அதே நாய்களுக்கு முன்னால் நீ ஓர் எச்சிலையைக் கொண்டு வந்து போட்டுப் பார். அப்போது தெரியும் அவற்றின் ஒற்றுமை!"

"அப்படியே மனிதனும் இருக்கவேண்டுமா, என்ன?"

"இல்லாவிட்டால் மதிற்சுவரின்மேல் உட்கார்ந்து சிரிக்கமுடியாது; மரத்தின்கீழ் அகப்பட்டுக்கொண்டு அழவேண்டும். இதைத்தான் கடவுள் சொல்லாமல் சொல்கிறார்; விதியும் செய்யாமல் செய்கிறது!"

"அதற்காக நீ வேண்டுமானால் நாயாயிரு; நான் நாயாக மாட்டேன்!" என்றேன் நான்.

அவள் சிரித்தாள், அன்றும் சிரித்தாள், இன்றும் சிரிக்கிறாள்.

சிரிப்பு எரியும் தீயில் எண்ணெய் விடுகிறது; கண்ணீர் எரியும் தீயில் தண்ணீர் விடுகிறது!

சிரிப்பால் எண்ணெய் விடாமல், கண்ணீரால் தண்ணீர் விட்ட என்னை என் கணவர் புரிந்து கொள்ளவில்லை. சோதித்தார்; மேலும் மேலும் என்னைச் சோதித்தார்.

அன்றிரவு அவர் என்னை என்ன கேட்டிருந் தாலும் பரவாயில்லை; வேறு என்ன செய்திருந்தாலும் பரவாயில்லை.

"இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?" என்று கவலையுடன் கேட்ட என்னை நோக்கி, "எப்படியிருந் தால் உனக்கென்ன, நீ யார் அதைக் கேட்க!" என்று அவர் சீறினார்; அவருடைய தலையை அன்புடன் கோதி விட்டுக் கொண்டிருந்த என் கையைப் பிடித்து அப்பால தள்ளினார்.

எப்படி இருக்கும் எனக்கு?—இருந்தாலும் ஒரு வாறு அதைச் சமாளித்துக்கொண்டு, "என்னைத் தெரியவில்லையா, நான்தான் உங்கள் லலிதா!" என்றேன்.

"இல்லை? நீ என் புனிதா! இறந்த பின்னும் எங் கிருந்தோ வந்து என்னைக் கொல்லாமல் கொல்லும் புனிதா! என்னை விட்டு அப்பால் போ!" என்று அவர் என்னை விரட்டினார்.

அப்போதுதான் அவருடைய முதல் மனைவியின் பெயர் புனிதா என்பது என்னுடைய நினைவிற்கு வந்தது. அத்துடன், அவளை நினைத்துக்கொண்டுதான் அவர் இப்படியெல்லாம் அவதிப்படுகிறார் என்பதும் தெரிந்தது. என்ன சொல்வேன், என்ன செய்வேன்? எப்படியாவது அவரைத் தேற்றவேண்டுமே என்று எண்ணியவளாய், "இறந்தவள் வரமாட்டாள். ஒரு நாளும் வரமாட்டாள். அவளை நினைத்துக் கொண்டு நீங்கள் ஏன் அமைதியை இழக்கவேண்டும்? ஓர் இலை உதிர்ந்தால் இன்னொரிலை துளிர்ப்பது இயற்கை. உங்கள் வாழ்க்கைத் தருவிலிருந்து அவள் உதிர்ந்து

விட்டாள்; நான் துளிர்த்திருக்கிறேன். இவ்வளவு தான் விஷயம், இதற்கா இந்தப் பாடு?" என்றேன்

ஒரு கணம் அவர் என்னை ஊடுருவிப் பார்த்தார். மறு கணம், "உன்னைக் கோபித்துக்கொண்டேனு, ஒரு பாவமும் செய்யாத உன்னைக் கோபித்துக் கொண்டேனு?" என்று தழுதழுத்த குரலில் கேட்ட வண்ணம் என்னைத் தழுவிக் கொண்டு, "உதிர்ந்தது உண்மைதான், லலிதா! ஆனல், மண்ணேடு மண்ணுக அவள் மக்கவில்லை. என் கண்ணேடு கண்ணுகிவிட்டாள்; அந்தக் கண்ணை உன்னைக் கொண்டு நான் குத்த முயன்றேன். ஆனல் நடந்தது என்ன? என்னைக் கொண்டு உன்னுடைய கண்ணை அவள் குத்திவிட்டாள்! லலிதா, உன்னுடைய கண்ணை அவள் குத்திவிட்டாள்! நீ குருடி; கண் இருந்தும் குருடி; வாழ்க்கைப் பாதையில் வழி தெரியாமல அலையப்போகும் குருடி! அது மட்டுமா? பழுத்து உதிர்ந்தவள் அவள்; பழுக்காமல் உதிர்ந்தவள் நீ! இறந்தும் வாழ்பவள் அவள்; வாழ்ந்தும் இறந்தவள் நீ!" என்று அவர் கதறினர்.

"கண்ணைக் குத்தினல் என்ன, கைக்குத்தான் நீங்கள் கோலாயிருக்கிறீர்களே!" என்றேன்.

"உனக்குத் தெரியாது, அதைத்தான் அவள் உடைத்தெறிந்து விட்டாள் லலிதா, அதைத்தான் அவள் உடைத்தெறிந்துவிட்டாள்!" என்றார் அவர், என்னைப் பார்க்காமல் வேறு எங்கேயோ பார்த்துக் கொண்டே.

அவருடைய முகத்தை நான் மெள்ளத் திருப்பினேன். அவ்வளவுதான்; கலங்கியிருந்த கண்

களைக் கைகளால் பொத்திக்கொண்டு அவர் கதறி அழுதார்.

“ஏன் அழுகிறீர்கள், எதற்காக அழுகிறீர்கள்?” என்று நான் துடிதுடித்துக் கேட்டேன்.

“கேட்காதே, அதை மட்டும் என்னிடம் கேட்காதே! நான் செய்த பாவத்துக்காக நான் அழத்தான் வேண்டும்; என் ஆயுள் உள்ளவரை நான் அழத்தான் வேண்டும்!” என்றார் அவர் படபடப்புடன்.

“நீங்கள் அழும்போது நான் மட்டும் சிரித்துக் கொண்டா இருக்கப் போகிறேன்? விஷயத்தைச் சொல்லுங்கள், அதற்காக அழத்தான் வேண்டுமென்றால் நானும் உங்களுடன் சேர்ந்து அழுகிறேன்.”

“கூடாது, ஒரு பாவமும் செய்யாத நீ என்னுடன் சேர்ந்து அழக்கூடாது. சிரிக்கவேண்டும லலிதா, நான் அழுதால் நீ சிரிக்கவேண்டும். அப்பொழுது தான் தன்னலத்துக்காக அன்பைக் கொன்றுவிட்டு, ‘உலகம் வாழ்வதற்காக நான் அதை வளர்க்கிறேன்!’ என்று சொல்லிக்கொள்ளும் என்னைப்போன்ற மாந்தர்களுக்குப் புத்தி வரும் லலிதா, புத்தி வரும்!”

“சரி, சிரிக்கிறேன். விஷயத்தைச் சொல்லுங்கள்?”

“முடியாது. உன்னிடம் அதைச் சொன்னபின் என்னால் உயிர் வாழ முடியாது!”

“அப்படியானால் சொல்ல வேண்டாம்; படுத்துக் கொள்ளுங்கள்” என்று அவரைக் கட்டிலின் மேல் படுக்கவைத்து விட்டு, எழுந்து சென்று விளக்கை அணைத்துவிட்டு, நானும் தரையில் முந்தானையை விரித்துப் படுத்தேன்.

நள்ளிரவு: மணி பன்னிரண்டு அடித்து ஓய்ந்தது. தமக்குத் தூக்கம் வராதபோது எனக்கு மட்டும் தூக்கம் வந்துவிடும் என்று அவர் எப்படித்தான் நினைத்தாரோ, எழுந்து விளக்கைப் போட்டார்; என்னைப் பார்த்தார். கனைத்தார்; ஒரு முறைக்கு இரு முறையாகக் கனைத்தார். அசைந்து கொடுக்கவில்லை; கொஞ்சங் கூட நான் அசைந்து கொடுக்கவில்லை. போட்ட விளக்கை அணைத்தார்; புறப்பட்டார்.

எங்கே, எங்கே, எங்கே?

கேட்டுத் தெரிந்து கொள்வதைவிட, கேட்காமலே தெரிந்து கொள்வதுதான் மேல் என்று எண்ணிய நான், அவருக்குத் தெரியாமல் அவரைத் தொடர்ந்தேன். அடிமேல் அடிவைத்துத் தொடர்ந்தேன். திரும்பினால் ஒளிந்தேன்; திரும்பாவிட்டால் நடந்தேன்.

கற்களும் முட்களும், 'என்ன விஷயம், எங்களைக் கூடப் பொருட்படுத்தாமல் இந்த நேரத்தில் எங்கே செல்கிறீர்கள்?' என்று தங்கள் கைவரிசைகளை எங்கள் கால்களில் காட்டி எங்களை விசாரித்தன.

'உள்ளத்தில் பொத்துக்கொண்டவிட்ட கற்களையும் முட்களையும் உங்களைப் பிடுங்கி எறிவது போல் பிடுங்கி எறிவதற்காக!' என்று 'அவற்றைப் பிடுங்கி எறிந்து கொண்டே நாங்கள் சென்றோம்.

'எங்களுக்குத்தான் விரோதிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பயந்து நாங்கள் இரவில் வெளியே வருகிறோம். உங்களுக்கு யார் விரோதிகள், நீங்கள் யாருக்குப் பயந்து இரவில் வெளியே வருகிறீர்கள்?' என்று கேட்பதுபோல் ஆந்தைகளும் வௌவால்களும் எங்களைக் கண்டதும் அலறின.

'ஏனோ தெரியவில்லை, இப்போது எங்களுக்கு நாங்களே விரோதிகளாகிவிட்டோம். அதனால்தான் ஒருவரையொருவர் அறியாமல் இரவில் செல்கிறோம்' என்று சொல்லக்கூட வெட்கப்படுபவர்கள்போல் அவற்றை ஏறெடுத்துப் பார்க்காமல் நாங்கள் சென்றோம்.

கோயில்; ஊருக்கு நடுவே இல்லாமல் கொஞ்சம் ஒதுங்கியிருந்த கோயில். 'பக்தர்களைக் கவனிக்காமல் பகவான் எங்கே தூங்கிவிடப் போகிறாரோ!' என்று பயந்தவர்களாய் வீடு வாசலற்ற அடியார்கள் பலர் அங்கே பலத்த குறட்டை விட்டுப் பகவானைத் தூங்க விடாமல் தாங்கள் மட்டும் தூங்கிக்கொண்டிருந்தனர். அந்தக் கோயிலின் வாசலை அடைந்ததுதான் தாமதம், "கடவுளே, வழி காட்டு! கடவுளே, வழி காட்டு!" என்று கதறிக்கொண்டே என் கணவர் கர்ப்பக்கிரகத்தின் படிகளின் மேல் தலையை வைத்து அழுதார். புரண்டார், எழுந்தார்.

அட கடவுளே, இங்கேயும் புதிர்தானா? ஏன் வழி காட்டவேண்டும்? எதற்கு வழி காட்டவேண்டும்?

உனக்குத் தான் யாரும் சொல்ல வேண்டியதில்லை; எனக்குமா யாரும் சொல்லவேண்டியதில்லை?

நல்ல வேளை, எதிலும் சந்தேகம் தட்டும் என் கணவருக்கு எல்லாம் வல்ல இறைவன் விஷயத்திலும் கொஞ்சம் சந்தேகம் தட்டிற்றோ என்னவோ, சொல்ல ஆரம்பித்தார். சொல்வதைச் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே, ரகசியமாகச் சொல்ல ஆரம்பித்தார்:

"கடவுளே, வழி காட்டு! அன்பைக் கொன்றதற்காக ஆணவத்தைக் கொன்றுவிட்ட கடவுளே வழி

காட்டு! ஆண்மை இழந்த எனக்கும், அதனால் இன்பத்தை இழந்து துன்பத்தையே துணையாகக் கொள்ளப்போகும் என் மனைவிக்கும் வழி காட்டு! நான் தகுதியற்றவனாகிவிட்டேன்! என்னுடைய மனைவிக்குக் கணவனாகயிருக்க நான் தகுதியற்ற வனாகிவிட்டேன்! வழி காட்டு! கடவுளே எனக்கும் என் மனைவிக்கும் வழி காட்டு!''

அட பாவமே, அருமை அத்தையிலிருந்து அசட்டு அத்தான் வரை அன்றிலிருந்து இன்றுவரை எனக்குத் தெரியாமல் மூடி மூடி வைத்த விஷயம் இதுதானோ, இதுவேதானோ?

வெட்கக்கேடுதான்! — எது ஆண்மை? எது இன்பம்? எதை இழந்தால் மனிதன் ஆண்மையை இழக்கிறான்? எதை இழந்தால் மனிதன் இன்பத்தை இழக்கிறான்?

ஐயோ, வீட்டையே புத்தகசாலையாக்கி வைத்துக் கொண்டிருக்கும் இவருக்குக் கேவலம் ஆண்மைக்கா அர்த்தம் தெரியவில்லை? இன்பத்துக்கா பொருள் இன்னதென்று விளங்கவில்லை?

சீ சீ, தமிழ் இலக்கியமே இவரால் தற்கொலை செய்து கொண்டுவிடும் போலிருக்கிறதே!

இவ்வாறு எண்ணி நான் வியந்துகொண்டிருந்த போது யாரோ ஒருவருடைய கை வந்து என் தோளின் மேல் விழுந்தது; திடுக்கிட்டுத் திரும்பினேன்.

இனம் தெரியவில்லை. நின்ற இடத்தைப் போலவே நிலை குலைந்த சிந்தையும் அப்போது இருட்டாயிருந்த தால்!

# 6. 'இரு பிரமுகர்கள்'

நல்ல வேளை, என் தோளை பற்றிய கை அசட்டு அத்தானுடைய கையாயிருக்கவில்லை; அத்தையின் கையாயிருந்தது.

"எந்த விஷயம் உனக்குத் தெரியவேண்டா மென்று இத்தனை நாட்களாக நாங்கள் மறைத்து வைத்திருந்தோமோ, அந்த விஷயம் இன்று உனக்குத் தெரிந்துவிட்டது, ஆனால் உனக்குத் தெரிந்த விஷயம் அவருக்குத் தெரியவேண்டாம். லலிதா! தெரிந்தால் என்ன ஆகுமோ, என்னவோ என்று எனக்குப் பயமாயிருக்கிறது. வா வா, வந்த சுவடு தெரியாமல் நாம் திருமபிப் போய்விடலாம்; அவர் வரும்போது வரட்டும்!" என்று என் அத்தை என்னை இழுத்துக்கொண்டு சென்றாள்.

அந்தச் சமயம் எனக்கும் அது சரியென்றே பட்டது. ஆனால், அன்றிலிருந்து என் அத்தை என்னுடைய கணவரைத் தவிர வேறு எந்த ஆண் பிள்ளையையும் கண்ணால்கூடக் காணவொட்டாமல் தடுத்து, "அங்கே போகாதே, இங்கே நிற்காதே! அப்படிச் சிரிக்காதே, இப்படி அழாதே!" என்றெல்லாம் இடித்துரைத்து, என்னையும் என்கற்பையும் எனக்குத்

தெரியாமல் காக்க முயன்றதுதான் என்னை என்னவோ செய்வது போலிருந்தது!

இவள் இப்படியிருக்க, என் கணவரோ இதற்கு நேர் விரோதமாயிருந்தார். அடிக்கடி யாராவது ஒருவரை அவர் அழைத்து வந்து, அவருடைய அருமை பெருமைகளைப் பற்றியெல்லாம் என்னிடம் ஆதியோடந்தமாகச் சொல்லி, அதுவரை அவர் கல்யாணம் செய்துகொள்ளாமலிருப்பதற்குக் காரணங்கள் என்னென்ன உண்டோ, அவற்றையெல்லாம் ஒன்று விடாமல் எனக்கு விளக்கி, என்னையும் அவரையும் ஏதாவது ஓர் ஏகாந்தமான இடத்தில் உட்கார வைத்துவிட்டு மெள்ள நழுவி விடுவார்!

வந்தவர் இஞ்சி தின்ற குரங்கைப்போல என்னைப் பார்த்துப் பார்த்து இளிப்பார்; திராட்சைப் பழத்தைக் கண்ட நரியைப்போல என்னைத் தாவித் தாவிப் பார்ப்பார்.

நடுநடுவே என் கணவர் வந்து அன்பைப் பற்றியும், அன்பை நிலை நாட்டுவதற்காக உலகில் அவதரித்த அவதார புருஷர்களைப் பற்றியும் எங்களிடம் பேசுவார். அத்துடன் நிற்காமல், அந்த அன்பு முற்றி எப்படிக் காதலாக மாறுகிறது என்பதைப் பற்றியும் சாங்கோபாங்கமாக விவரிப்பார். வந்தவர் கதை கேட்க வரவில்லை என்பது அப்போதுதான் தெரியும் எனக்கு. ஏனெனில், மேற்கோள் காட்டுவதற்காக ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு வர என் கணவர் எழுந்து சென்றால் போதும் வந்தவர் சொல்லிக் கொள்ளாமல் நடையைக் கட்டி விடுவார்!

அவர் போனபின் என் கணவர் வருவார்; "வந்தவர் எங்கே போனார்?" என்று என்னை விசாரிப்பார்.

"அன்பை நிலை நாட்டுவதற்காக அவதாரம் எடுக்கப் போயிருக்கிறார்" என்பேன் நான், சிரித்துக் கொண்டே.

என் கணவரும் என்னுடன் சேர்ந்து சிரிப்பார். அப்போது என் கணவர்தான் அதுவரை காணாத அவதார புருஷராகத் தோன்றுவார் எனக்கு!

அடுத்தாற்போல் இன்னொருவர் வருவார்! அவர் எங்களிடம் சொல்லிக் கொண்டு போவார். இதனால் கொஞ்சம் நம்பிக்கையுடன் என் கணவர் என்னிடம் வந்து, "வந்தவர் எப்படி?" என்று ஆவலுடன் விசாரிப்பார்.

எனக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வரும். எனினும் அதை அடக்கிக்கொண்டு, "எல்லோரையும் போலத்தான்!" என்பேன்.

"எல்லோரையும் போல என்றால்...?"

"எல்லா ஆண் பிள்ளைகளையும் போலத்தான் என்கிறேன்!"

"இருந்தாலும் அவருக்கு உன்னிடம் எவ்வளவு அனுதாபம் தெரியுமா?" என்று அவர் ஆரம்பிப்பார்.

"இருக்கும்!" என்பேன் நான்.

"அதிலும், என்னை நீ கல்யாணம் செய்து கொண்டதைப்பற்றி..."

"இருக்கும், இருக்கும்!"

"அவருக்கு மட்டுமென்ன, எனக்கும்..."

"ஐயோ, கல்யாணத்துக்கு முன்னால் அந்த அனுதாபம் உங்களுக்கு இருந்திருக்கக்கூடாதா?"

"இருந்தது; கல்யாணத்துக்குப் பின்னால் அந்த அனுதாபத்தைக் காதலால் போக்கிவிடலாம் என்று நான் நம்பினேன்..."

"அந்த நம்பிக்கை இப்போது என்ன ஆயிற்று?"

"ஒன்றும் ஆகவில்லை, ஒன்றும் ஆகவில்லை!" என்று மழுப்பிக்கொண்டே, 'காத'லுக்கு வேறு ஆளைத் தேடும் படலத்தை அவர் எனக்குத் தெரியாமல் என்னிடம் மறைக்கப் பார்ப்பார். அப்போது என்னுடைய ஆத்திரம் அனுதாபமாக மாறும்! "தொலையட்டும்!" என்று அத்துடன் அவரை விட்டுவிடுவேன்.

ஆயினும், 'சதைப் பசி ஒன்றே காதலுக்கு ஆதாரம்!' என்று அவரும் அவருடைய நண்பர்களும் என்னிடம் மறைமுகமாகக் கதைக்கும்போதெல்லாம், 'உலகத்தார் முன்னிலையில் இவர்கள் நல்லவர்கள் என்று பெயர் எடுக்கவேண்டுமென்பதற்காக என்னைக் கெட்டவளாக்க வேண்டுமா? அதற்காக என் மானம், மரியாதை, காதல், கற்பு ஆகியவற்றையெல்லாம் நான் இவர்களுக்குப் பலி கொடுக்கவேண்டுமா? தமிழ் நாட்டின் தனித் தன்மை, தமிழச்சிகளின் தனிப் பெருமை முதலியவைகளையெல்லாம் தத்தம் செய்து விடவேண்டுமா? என்ன தன்னலம் இவர்களுக்கு!' என்று என் உள்ளம் எரிமலைபோல் அனலைக் கக்கும்;

அதை அணைக்க முடியாமல் நான் தவியாய்த் தவிப்பேன்; 'தலைவலி' என்று சொல்லிவிட்டுப் போய்த் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விசித்து விசித்து அழுவேன்; அழுத கண்ணீரால் என் உள்ளம் கக்கும் அனலை ஓரளவாவது அணைக்கப் பார்ப்பேன்!

இதை அறியாமல் என்னை இன்னொருவனிடம் ஒப்படைக்க என் கணவர் முயலும்போதெல்லாம், 'ஐயோ இதென்ன சோதனை!' என்று எனக்குத் தோன்றும். இந்தச் சோதனையிலிருந்தும், சோதனையால் அடைந்த வேதனையிலிருந்தும் தப்ப ஒரு துளி விஷத்தின் உதவியையாவது, ஒரு முழுங் கயிற்றின் உதவியையாவது நாடினால் என்ன என்றுகூடச் சில சமயம் தோன்றும். அவற்றை நாடினால், 'நடைமுறை வாழ்க்கையில் நான் அடைய வேண்டிய வெற்றியை அவையல்லவா அடைந்துவிடும்?' என்று எண்ணித் தோல்விக்கு இடங் கொடாமல் என்னையும் என் லட்சியத்தையும் காத்துக்கொள்ள முயல்வேன்.

ஆம்! எனக்கு லட்சியம் என்று ஒன்று இருந்தது; அந்த லட்சியத்துக்காக எதையும் எதிர்த்து நிற்கும் சக்தியும் எனக்கு இருந்தது.

பெண்ணே சக்தியின் வடிவமல்லவா?

அன்று ஏதோ ஒரு விழாவுக்குத் தலைமை தாங்க வேண்டுமென்பதற்காகக் காந்தா என் கணவரை அழைத்துக் கொண்டு போயிருந்தாள். போனவர் திரும்பி வரும்போது வழக்கம்போல் ஒரு பிரமுகரை அழைத்துக்கொண்டு வந்து எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

'பிரமுகர்' என்று தன்னைத்தானே எண்ணிக் கொண்டு 'பெரிய மனுஷர் வேஷம்' போட்டுக் கொண்டிருந்த அந்தப் பேர்வழியை எனக்கு ஏற்கனவே தெரியும். தெரியும் என்றால் ஆளைத் தெரியாது; அவருடைய அருமை பெருமைகளைப் பற்றித் தெரியும்.

அதாவது, யாராவது ஒருவர் ஏதாவது ஒரு காரியார்த்தமாக அவரைச் சந்தித்து, 'உங்களுக்குள்ள அறிவுக்கும் ஆற்றலுக்கும் நீங்கள் எவ்வளவோ காரியங்கள் செய்யலாமே. ஒன்றும் செய்யாமல் இருக்கிறீர்களே!' என்று கொஞ்சம் 'காக்கா' பிடித்தால் போதும்; 'கவலைப்படாதீர்கள்! எனக்காக நிதி திரட்டும் அளவுக்கு உங்களை நான் கொண்டு வந்துவிட மாட்டேன்!' என்று சொல்லிவிட்டுப் பெருமையால் விம்மிப் புடைக்கும் தம்முடைய மார்பைத் தாமே பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கொள்வாராம். சந்திக்கச் சென்றவர், "அட பயித்தியமே, காந்தி மகானுக்கு நிதி திரட்ட முயன்றவர்களையே காலை வாரி விட்டுவிட்ட தமிழ் மக்கள் உனக்கா நிதி கொடுக்க 'நான் முந்தி நீ முந்தி!' என்று ஓடிவரப் போகிறார்கள்!' என்று உள்ளூர நினைத்துக் கொண்டு, 'நீங்கள் வேண்டாமென்றாலும் நாங்கள் விட்டுவிடுவோமா' என்று ஆறுதலுக்காக அவருடைய சிண்டைத் தட்டிவிட்டு விட்டு, வந்த வழியை நோக்கித் திரும்புவாராம்!

யாருக்கு எப்படி இருந்தாலும் என்னைப் பொறுத்த வரை 'லங்கேஸ்வர'னாக நடந்துகொண்ட அவர் எப்பொழுது பார்த்தாலும் கார்காலத்துத் தவளையைப் போலக் 'காதல், காதல்' என்று கதறிக் கொண்டே இருப்பார்; காற்றோடு காற்றாய்க் கலந்து கொண்டிருந்த

அவர் கதறலிலே மயங்கி, காந்தா அவரைத் தன்னுடைய 'காதல் தெய்வ'மாகக் கொண்டிருந்தாள்! அந்தக் 'காதல் தெய்வ'மோ அவளைக் கடைக் கண்ணால்கூடக் கடாட்சிக்காமல் 'ஓடு மீன் ஓட, உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு!' என்பதுபோல, 'வசதி மிக்க வனிதை'யைத் தேடி, வாழ்க்கைக் கரையில் 'ஒற்றைக் கால் தவம்' செய்து கொண்டிருந்தது!

இந்தக் கொக்குக்கும், ஏற்கனவே என்னைக் கொத்திச் செல்ல முயன்ற கொக்குகளுக்கும் இருந்த வித்தியாசம் ஒன்றே ஒன்று தான். அந்த வித்தியாசம் என்னவென்றால் எனக்காக நான் என்ன செய்தாலும் சரி, எல்லாம் தனக்காகவே செய்வதாக இது நினைத்துக்கொள்ளும்—உண்பது தனக்காக, உடுப்பது தனக்காக, சிரிப்பது தனக்காக, அழுவது தனக்காக என்று இது நினைத்துக் கொண்டு அவஸ்தைப்பட்டால், எதுதான் எனக்காக என்று நினைத்துக்கொண்டு நான் இதற்காக அனுதாபப் படுவேன்?

வாழ்க்கைக் கரையில் மட்டுமல்ல, சித்தப் பிரமையின் சிகரத்திலும் நின்று என்னைக் கொத்திக் கொத்திச் செல்ல முயன்ற இந்தக் கொக்கின் காலை எப்படியாவது ஒடித்துவிட வேண்டுமென்று என் அசட்டு அத்தான் முயன்றார் — அவ்வளவுதான்: எங்கள் வீடு குப்பைத் தொட்டியாயிற்று; நான் அதில் விழுந்த எச்சிலையானேன்; அந்த எச்சிலைக்குச் சண்டை பிடிக்கும் நாய்களாக இரண்டு 'பிரமுகர்'களும் மாறி விட்டனர்!

# 7. கதவே துணை!

ஏதோ ஒரு புத்தகத்தில் எப்பொழுதோ படித்த தாக ஞாபகம், ஆண்கள் பாவம் செய்வதற்கென்றே பெண்கள் பூலோகத்தில் படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று!—என்னுடைய வாழ்க்கையில் அதை உண்மை யாக்கிவிடக் கூடாதே என்பதற்காக நான் எவ்வளவோ முயன்றேன்; முடியவில்லை.

முதல் தோல்வி என் கணவரால் எனக்கு ஏற்பட்டு விட்டது. இரண்டாவது தோல்வியை என்னுடைய அத்தானிடமோ, ஸ்ரீமான் லங்கேஸ்வரனிடமோ நான் அடையவேண்டுமா? அவர்களைப் பாவம் செய்யத் தூண்டுவதற்குத்தான் பாழும் அழகு பயன்பட வேண்டுமா?

ஐயோ, அந்தப் பிரமுகர்கள் இருவரும் தங்களைத் தாங்களே ஒருவரைவிட ஒருவர் உயர்ந்தவர் என்று உதட்டால் சொல்லிக்கொண்டார்களே தவிர, உள்ளத் தால் வாழவிரும்பவில்லையே? — என்ன செய்வேன்? எப்படி அவர்களுடைய உதட்டையும் உள்ளத்தையும் ஒன்றாக்கி வாழ வைப்பேன்?

இந்த லட்சணத்தில் நான் இருந்தது முன்பிருந்த ஊராயிருந்தாலும் பரவாயில்லை; அத்தையும் மாமா

வும் என்னுடன் இருந்திருப்பார்கள்; அவர்களையும் அவர்களுடைய உபத்திரவத்தையும் எப்படிச் சமாளித்திருக்க வேண்டுமோ, அப்படிச் சமாளித்திருப்பார்கள். இப்பொழுதிருக்குமிடத்திலோ என்னையும் சமையற்காரன் சாம்புவையும் தவிர வேறு யாருமில்லை. எனவே, இருவரில் ஒருவர் வாய்ச் சண்டையை விட்டுக் கைப் பிரயோகத்தாலோ கால் பிரயோகத்தாலோ 'தப்பினேன், பிழைத்தேன்!' என்று தட்டுத் தடுமாறி எழுந்து வெளியே ஓடும்வரை, அவர்களுடைய சண்டையை நான் வேடிக்கைப் பார்ப்பது என்னுடைய தலைவிதியாயிற்று!

ஒருவர், 'அன்பே உலகில் என்னை நம்பித்தான் உயிர் வாழ்கிறது!' என்று மார் தட்டுவார்; 'இல்லை; இல்லவே யில்லை, அது என்னை நம்பித்தான் உயிர் வாழ்கிறது!' என்று தோள் தட்டுவார். 'இதோ பார், இவள் எனக்குத்தான் சொந்தம் என்பதற்கு இந்தக் கடிதமே அத்தாட்சி!' என்று என் கணவர் எழுதி வைத்துவிட்டுச் சென்ற கடிதத்தை எடுத்துக் காட்டுவார் ஒருவர்; 'இதோ பார், இவள் எனக்குத்தான் சொந்தம் என்பதற்கு என் ரத்தமே அத்தாட்சி!' என்று நகத்தால் தோலைக் கீறி ரத்தத்தை எடுத்துத் தொட்டுக் காட்டுவார் இன்னொருவர். இந்தக் கோரக் காட்சியைப் பார்க்கச் சகிக்காமல் நான் கண்ணை மூடிக் கொள்வேன். கடைசியாக வாய்ச் சண்டை நிற்கும்; எதிர்பார்த்ததற்கு மேலாகவே கையும் காலும் சேர்ந்தாற் போல பிரயோகமாகும். 'விட்டேனா, பார்! விட்டேனா பார்!' என்று பரஸ்பரம் கருவிக்கொண்டே ஒருவரையொருவர் விரட்ட, இருவரும் தெருவில் இறங்கி ஓடும் சத்தம் என் காதில் விழும்; 'அப்பாடா!' என்ற ஆறுதலுடன் தெருக் கதவைச் சாத்தித்

தாளிட்டுவிட்டு வந்து நான் கட்டிலின் மேல் படுப்பேன். சமயமறிந்து ஒரு கப் காபியைக் கொண்டு வந்து எனக்கு எதிரே வைப்பான் சாம்பு; எடுத்துக் குடித்து அந்த ஈனர்களால் ஏற்பட்ட களைப்பைப் போக்கிக் கொள்வேன்.

ஒரு நாள்...

மாலை மணி ஐந்திருக்கும். "உனக்காக என் கடமையை நான் செய்யா விட்டாலும் உன் கணவருக்காக என்னுடைய கடமையை நான செய்ய வேண்டியிருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே வந்து எனக்கு எதிர்த்தாற்போல் உட்கார்ந்தார் ஸ்ரீமான் லங்கேஸ்வரன்.

அப்போதுதான் தெருக் கதவைத் திறந்துகொண்டு சாம்பு வெளியே போன விஷயம் என்னுடைய ஞாபகத்துக்கு வந்தது. இருந்தாலும அதை வெளியே காட்டிக்கொள்ளாமல், "ரொம்ப சந்தோஷம்; எனக்கும் உங்களைப் பார்க்கும் போதெல்லாம் கடமையை வற்புறுத்திய கீதாசாரியனையே நேரில் பார்ப்பது போல இருக்கிறது!" என்றேன் நான்.

இதனால் உச்சி குளிர்ந்த அவர், "மாலை வேளையில் மணாளனின் ஞாபகம் வரவில்லையா, உனக்கு?" என்று கேட்டுக்கொண்டே என்னைக் கொஞ்சம் நெருங்கினார்.

"வருகிறது, வருகிறது!" என்றேன் நான்.

"அத்துடன் வழக்கமாக அவர் வாங்கிக் கொண்டு வரும் மல்லிகை மலரின் ஞாபகமும் உனக்கு வராமல் இருக்க முடியாதே!"

"முடியாது, முடியாது!"

"இதோ பார், அதற்காகத்தான், இந்த மலரை நான் வாங்கிக் கொண்டு வந்தேன். உனக்கு ஆட்சேபணை இல்லையென்றால்...?"

"சூட்ட வேண்டிய மலரை நீங்களே சூட்டுவதில் உங்களுக்கு என்ன ஆட்சேபணை இருக்கப் போகிறது!"

"இருக்காது; இருக்கவே இருக்காது!"

"அதனாலென்ன, மலரைச் சூட்டிக் கொள்வதற்கு முன்னால் தலையை வாரிக்கொள்ள வேண்டாமா? அதற்காக சீப்பைத் 'தேடு, தேடு' என்று தேடினேன்; கிடைக்கவில்லை...;'

"போனால் போகிறது; வேறொன்று நான் வாங்கிக் கொண்டு வருகிறேனே!"

"அவ்வளவு சிரமம் கொடுக்கலாமா; உங்களுக்கு?"

"பேஷாய்க் கொடுக்கலாம். நீ வாயசைத்தால் போதாதா, நான் தலையசைக்க? இதோ, பறந்துபோய் பறந்தே வந்துவிடுகிறேன்!" என்று சட்டைப்பையிலிருந்து எடுத்த மலரை மறுபடியும் சட்டைப் பைக்குள் மறக்காமல் போட்டுக்கொண்டு ஒரே தாவில் அவர் தெருவைத் தாவினார்!

அதுதான் சமயமென்று கதவைச் சாத்தித் தாளிட்டுவிட்டு வந்து நான் உட்கார்ந்தேன். புழக்கடை வழியாக என் அத்தான் வந்தார்; "தானாடா விட்டாலும் தன் சதை ஆடும் என்று பெரியவர்கள் தெரியாமல் சொல்லவில்லை லலிதா, பெரியவர்கள்

தெரியாமல் சொல்லவில்லை!" என்று சொல்லிக் கொண்டே வந்து எனக்கு எதிர்த்தாற்போல் உட்கார்ந்தார்.

அவரது பேச்சைக் கேட்க எனக்குச் சாம்புவின் மேல் கோபம் கோபமாக வந்தது—காலையில் திறந்து விட்ட புழக்கடைக் கதவை மறுபடியும் சாத்தித் தொலைக்க மறந்து விட்டான் போலிருக்கிறது! அவனுக்கென்ன, அதன் பலனை இப்பொழுது நானல்லவா அனுபவிக்க வேண்டியிருக்கிறது?

இந்த எண்ணத்தில் தன்னை மறந்துவிட்ட என்னை நோக்கி, "என்ன லலிதா, என்னைக் கண்டதும் யோசனையில் ஆழ்ந்துவிட்டாயே?" என்றார் என் அத்தான், வெய்யிலில் வைத்த வெண்ணெயைப் போல!

"ஒன்றுமில்லை. பெண்களால் அழகு தவழும் சிலருடைய முகத்தில் அசடு தவழுகிறது; அசடு தவழும் சிலருடைய முகத்தில் அழகு தவழுகிறது இவர்களில் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்களா யிருக்கிறீர்களே நீங்கள் என்று யோசித்தேன்!" என்று நான் ஒரு போடு போட்டேன்.

அவ்வளவுதான்; வந்தது மோசம்-"அப்படியா லலிதா? நான் உனக்கு அழகாயிருக்கிறேனா, நான் உனக்கு அழகாயிருக்கிறேனா?" என்று கொஞ்சிக் கேட்டுக்கொண்டே ஒரு துள்ளுத் துள்ளி அவர் என்னைக் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கினார்.

"அட பாவமே, மறுபடியும் அந்த அசட்டுத்தனம் வந்து தொலைந்துவிட்டதே!" என்று நான் எழுந்து நின்றேன்.

"இனிமேல் சமர்த்தாயிருக்கிறேன் லலிதா, இனிமேல் சமர்த்தாயிருக்கிறேன் லலிதா!" என்று சொல்லிக்கொண்டே அவரும் என்னுடன் எழுந்து நின்றார்.

"ரொம்ப சந்தோஷம். வாருங்கள், தோட்டத்துப் பக்கம் போவோம்!"

"அங்கே போய் என்ன செய்வதாம்?"

"பூப் பந்து ஆடுவோமா?"

"ம்ம், முதலில் பூப்பந்து ஆடுவோம். அப்புறம், அப்புறம்......

"அப்புறம் என்ன, சொல்லுங்களேன்?"

"போ லலிதா, அதைச் சொல்ல எனக்கே வெட்கமாயிருக்கிறது!" என்று எண் சாண் உடம்பையும் பதினாறு கோணலாக வளைத்துக்கொண்டு அவர் நின்றார்.

விஷயத்தைப் புரிந்துகொண்ட நான், "இவ்வளவு தானே?—சொல்லாதீர்கள்; எனக்கே அது தெரிந்து விட்டது!" என்றேன் வராத புன்னகையை வரவழைத்துக்கொண்டு.

அவ்வளவுதான்; "தெரிந்துவிட்டதா, நிஜமாகவே தெரிந்துவிட்டதா?" என்று உற்சாகத்துடன் கேட்டுக்கொண்டே அவர் என்னுடைய கையைப்பற்ற வந்தார்.

கொஞ்சம் பின் வாங்கி, "அதற்குள் அவசரப்படுகிறீர்களே?" என்றேன் நான்.

"இல்லை லலிதா இல்லை; அவசரப்படவில்லை!" என்று அவரும் கொஞ்சம் பின் வாங்கினார்.

"சரி, வாருங்கள்!" என்று பந்தையும் மட்டையும் எடுத்துக்கொண்டு கிளம்பினேன்; அவரும் என்னுடன் கிளம்பினார்.

இருவரும் தோட்டத்துக்கு வந்தோம்; ஏற்கெனவே அங்கு கட்டி வைக்கப்பட்டிருந்த வலையை அடுத்தடுத்து நின்று, ஆட்டத்தை ஆரம்பித்தோம்.

எதிர்பார்த்தபடியே என்னால் அடிக்கப்பட்ட பந்து அவரிடமிருந்து தப்பிப் புழக்கடை மதிற்சுவரைத் தாண்டிச் சென்றது; அந்தப் பந்தைப் போலவே அவரும் ஒரே பாய்ச்சலில் புழக்கடைக் கதவைத் தாண்டிச் சென்றார் — பந்தை எடுத்துக்கொண்டு வரத்தான்!

அந்தச் சந்தர்ப்பத்தை நான் நழுவ விடவில்லை; கதவை இழுத்துச் சாத்தி ஒரு தாளுக்கு இரு தாள்களாகப் போட்டுவிட்டு உள்ளே வந்தேன்—என்ன ஆச்சரியம்!

**"நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்**
**நுண்ணிடைப் பெண் ஒருத்தி பணியிலே!"**

என்று பாடிக்கொண்டே ஸ்ரீமான் லங்கேஸ்வரன் வாயில் கவ்விய சீப்புடன் எனக்கு எதிர்த்தாற்போல் மாடியிலிருந்து குதித்தார்.

# 8. என் கணவர்

பொதுவாக ஆண்கள் நல்லவர்களோ, கெட்டவர்களோ? அதைப் பற்றிய எனது கொள்கையில் அபிப்பிராய பேதமுடையவர்கள் இருக்கலாம். இருந்துவிட்டுப் போகட்டும்.

ஆனால், ஒவ்வொரு பெண்ணுக்கும்—அதாவது ஒவ்வொரு நல்ல பெண்ணுக்கும்—கணவன் என்ற ஸ்தானத்தில் ஒருவன் இருக்கிறானே, அவன் மிகவும் நல்லவன்; மிக மிக நல்லவன்—கிழவனாகத்தான் இருக்கட்டுமே, அதனால் என்ன? ஆண்மை இழந்தவனாகத்தான் இருக்கட்டுமே, இதனால் தான் என்ன? குருடனாகத்தான் இருக்கட்டுமே, அதனால் என்னவாம்? அதனாலெல்லாம் ஒன்றுமில்லை; அவன் அவளுக்குக் கணவனாக இருக்கவேண்டும்—அவ்வளவுதான்.

ஒரு மனிதன்—ஒருத்திக்குக் கணவனாக இருப்பவன்—கிழவனாக இருக்கக் கூடாது என்று ஏதாவது நியதி உண்டா?—இல்லை; இல்லவே இல்லை. அவன் கிழவனாக இருக்கலாம்; அவனுடைய நெஞ்சில் கிழட்டுத்தனம் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் அவன் இளைஞனேயானாலும் கிழவன்தான்; இளமை இழந்த கிழவன்தான்!

அவன்—அந்தக் கணவன் ஆண்மை இழந்தவனாக இருக்கலாம்; அவனுடைய இதயத்தில் பேடித்தனம் இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் அவன் ஆண்மையுள்ளவனேயானாலும் பேடிதான்; ஆண்மையற்ற அலிப் பிறவிதான்!

அவன்—அந்தக் கணவன்—குருடனாக இருக்கலாம்; அவனுடைய அகக்கண் குருடாய் இருக்கக் கூடாது. அப்படியிருந்தால் அவன் கண்களுடையவனேயானாலும் குருடன்தான். கண்களற்ற கபோதிதான்!

இத்தகைய எண்ணங்கள், சின்னஞ் சிறு பிராயத்திலிருந்தே என் உள்ளத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டிருந்ததால், என் கணவன் மீது எந்த நிலையிலும் மாறாத அன்பு கொண்டிருந்தேன், நான்.

அந்த அன்பை—அந்த அருமையான இதயத்தை அவர் தெரியாத்தனத்தாலோ, தெளிவின்மையாலோ, நிராகரித்து, எவனோ ஒருவனுக்கு அவர் என்னைத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார்; போயேவிட்டார். அவருக்கான அர்த்தமற்ற செய்கைக்காகச் சில சமயம் நான் அனுதாபப்பட்டாலும், 'அட அற்பப் புழுவே!' என்று சிலசமயம் நான் ஆத்திரமும் அடைந்தேன்;—ஆம்; உண்மை—உண்மையிலும் உண்மை!

ஒழுக்கத்தைத் திருக்குறளோடு ஒதுக்கிவைத்து விடாமல வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க விரும்பும் ஆண்மை மிக்க ஆண்களும், பெண்மை மிக்க பெண்களும்—கண்களால் பார்த்தாலும் சரி, காதுகளால் கேட்டாலும் சரி,—வெட்கித் தலை குனியும் அளவுக்கு

என் வீட்டில் நடந்த வெட்கக்கேடான சம்பவங்களை நினைக்கும்போது, தன்னை மானபங்கம் செய்து கொண்டதோடு என்னையும் மானபங்கம் செய்து விட்டுச் சென்ற என் கணவரை—எங்கோ ஓடிப்போன என் கணவரை—நான் அன்றும் மனமாரச் சபித்தேன். இன்றும் மனமாரச் சபிக்கிறேன்.

விசாலம் மிக்க தன் இதயத்தால் என்னைப் 'பொது உடமை' ஆக்கிவிட்ட அவரை—அந்த அன்பின் உருவை—நான் வாயார மனமாரச் சபிக்காமல் வாழ்த்த வேண்டுமோ, என்ன?

அன்று ஸ்ரீமான் லங்கேஸ்வரனை அந்தக் கோலத்தில் கண்டதும எனக்கு அப்படித்தான் தோன்றிற்று. 'பாவி! அவனால் எனக்குக் கணவனாக இருக்க முடியவில்லையென்றால் என்னை அனாதையாக—யாரும் அற்றவளாகவாவது விட்டு விட்டுப் போகக்கூடாதா! இவனையும் ஒரு பெரிய மனிதன் என்று இவன் கதைத்ததை நம்பி இவனிடம் என்னை விட்டு விட்டுச் சென்று விட்டானே! என்றுநெற்றியில் துளிர்த்த வியர்வையை வழித்து விட்டுக்கொண்டே நான் முணுமுணுத்த போது,

"என்ன நேர்ந்தது லலிதா, என்ன நேர்ந்தது?" என்று பதறினார் அவர்.

எனக்கு வந்த ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு "கதவு என்னைக் கைவிட்டதுபோல் உங்களையும் கைவிட்டுவிட்டது போல் இருக்கிறது?" என்றேன் நான்.

"ஆமாம், ஆமாம். அதனால்தான் தெருவிலிருந்து மாடியைத் தாவினேன்; மாடியிலிருந்து வாசலைத் தாவினேன்!" என்றான் அவன்.

"பலே! இதற்கு முன் நீங்கள் இலங்கையை ஆண்டவரா? இல்லை, இலங்கைக்குப் பாய்ந்தவரா?" என்றேன் நான்.

"யாராயிருந்தால் என்ன, அவர்களுக்கு நான் சளைத்து விடவில்லை! உனக்குத் தெரியாது போலிருக்கிறது—கம்பன் ஓர் இடத்தில் சொல்லுகிருன்—'அடடா! அனுமானை அப்படியே படம் பிடித்துவிட்டான்"—என்று எல்லாம் தெரிந்தவர் போல் தலையை நிமிர்த்திக்கொண்டு, மார்பை முன்னும் தள்ளிக் கொண்டு, நின்ருர் அவர்.

"தேவலையே, நீங்கள் கம்ப ராமாயணம் கூடப் படித்திருக்கிறீர்களா?" என்றேன் நான்.

"இதோ பார் லலிதா, என்னைப் பற்றி நீ எது வேண்டுமானாலும் சொல்லும்; என் இலக்கிய ஞானத்தை மட்டும் குறைத்துப் பேசாதே?" என்று சற்றுக் கண்டிப்பான குரலில் சொன்னுர் அவர்.

"தெரியாமல் சொல்லிவிட்டேன்; தயவு செய்து மன்னிக்கவேணும்" என்று கெஞ்சினேன்.

"அதனாலென்ன, நான் ஆசையோடு வாங்கி வந்த வாச மலர்ச்சரம் வாடுகிறது லலிதா!" என்று சொல்லிக் கொண்டே அவர் எனக்குப் பின்புறமாக வந்து கூந் தலை வாரி முடிக்க முயன்ருர். நான் திரும்ப அவர் திரும்ப, இருவரும் ஒரு சுற்றுச் சுற்றித் திரும்பி நேருக்கு நேராக நின்ருேம்.

"லலிதா!" என்று கதைகளில் வரும் காதல் கதா நாயகர்களைப்போல அவர் எனக்கு முன்னால் வாயைப் பிளந்து கொண்டு நின்ருர்.

"என் அன்பே!" என்று கதைகளில் வரும் கதாநாயகிகளைப்போல நானும கண்களைக் கவிழ்த்து, முகத்தைச் சாய்த்து அவருக்கு முன்னால் நின்றேன்.

"ஐயோ, என் ஆசை லலிதா! இந்தப் 'பார்வைக்'கே என் கற்பனை சாம்ராஜ்யத்தையே நான் உன்னுடைய பாதாரவிந்தங்களில் வைத்து வணங்கலாமே!" என்று வெய்யிலில் நிற்கும் பைரவரைப்போல நாக்கை வெளியே நீட்டினார் அவர்.

"அவ்வளவு அழகாயிருக்கிறேனா நான்?" இப்படி நான் கேட்டுவைத்ததுதான் தாமதம்—என்ன சொல்வேன், போங்கள்!—வானத்துக்கும் பூமிக்குமாக ஒரு துள்ளுத் துள்ளி, "என்ன வார்த்தை இது?—இந்த வார்த்தை என்னைக் கொல்லுகிறது லலிதா, இந்த வார்த்தை என்னைக் கொல்லுகிறது!—ஐயோ, நான் என்ன செய்வேன்? எப்படி உன் அழகை வர்ணிப்பேன்!—வேண்டுமானால் உள்ளே போய்க்கண்ணாடியை எடுத்துக்கொண்டு வரட்டுமா? —உன்னுடைய அழகை நீயே பார்த்துப் பரவசப்படு, நீயே பார்த்துப் பரவசப்படு!" என்று சொல்லிக்கொண்டே அவர் மாடியை நோக்கி ஓடினார்.

அதே சமயத்தில் புழக்கடை மதிற்சுவருக்குமேல் என் அத்தானின் தலை தெரியவே, "என்னை விட்டு விட்டு எங்கே போகிறீர்கள்? எனக்குப் பயமாக இருக்கிறது!" என்று கூவினேன் நான். இதைக் கேட்டதும் சர்வக்ஞனாகவே ஸ்ரீ லங்கேஸ்வரன் மாறி விட்டார்.

''உன்னை நான் விடுவேனோ—என்
உள்ளத்தைக் கொள்ளை கொண்ட
உன்னை நான் விடுவேனோ?
என்னை நீ கைவிட்டால்—அடியேன்
என்னுயிர் விட்டிடுவேன்,
என்னுயிர் விட்டிடுவேன்.'

என்று பாடிக்கொண்டே காதல் ஜுரத்தால் கண்கள் கிறங்க என்னை நோக்கித் திரும்பினார்.

''என் அசட்டு அத்தான் மறுபடியும் வந்து என் உயிரை வாங்கிவிடுவார் போலிருக்கிறது; என்னை விட்டுப் போகாதீர்கள்!'' என்று நான் அவரை வேண்டிக் கொண்டேன்.

''அஞ்சற்க; அளித்தோம் அபயம்!'' என்று தன் பூனைக் குரலில் சிம்மக் கர்ஜனை செய்துகொண்டே காற்றில் கையை வீசினார் அவர்.

''நீ யாரடா அவளுக்கு அபயம் அளிக்க?'' என்று புழக்கடைச் சுவர்மேல் ஏறி நின்று எதிர் சவால விட்டார் என் அத்தான்.

இதுதான் சமயம் என்று நான் அவரருகே ஓடி, ''அத்தான் இந்தச் சனியனை நீங்கள்தான் எப்படி யாவது விரட்ட வேண்டும்!'' என்று நான் அவருடைய காதோடு காதாகச் சொல்லி வைத்தேன். அவ்வளவு தான்! அடுத்த நிமிஷமே, 'ராபின் ஹுட்டாக' மாறி விடட என் அத்தான், அருகேயிருந்த ஆலமரத்தின் விழுதைப் பிடித்துக் கொண்டே வந்து ஸ்ரீமான் லங்கேஸ்வரனுக்கு முன்னால குதித்தார்.

''ஐயா, சர்வக்ஞரே! நீர் கண்ட காதல் துறை இது தானோ?'' என்று கேட்டார்.

"ஆம், நான் கண்ட காதல் துறை இதுதான்!" என்றார் ஸ்ரீமான் லங்கேஸ்வரன் அழுத்தந் திருத்தமாக.

"அந்தத் துறைக்குத் தாங்கள் தனி நாயகமாய் நின்று விளங்கும் காரணம் யாதோ?"

"அதெல்லாம் சொல்லித் தெரிவதில்லை!"

"அப்படிப்பட்ட மன்மதக் கலையோ, அது? அந்தக் கலையை மாற்றான் மனைவியின் மீதுதான் பிரயோகிக்க வேண்டுமோ?"

அவ்வளவுதான்; "உனக்கென்னடா தெரியும்? என் அநுபவமும் சித்தாந்தமும்?—காலிப்பயலே!" என்று உறுமினார் ஸ்ரீமான் லங்கேஸ்வரன்.

"துள்ளாதீர் பெரிய மனிதரே; துள்ளாதீர்!—உம்முடைய அநுபவம், உம்முடைய அயோக்கியத்தனம், உம்முடைய சித்தாந்தம் உம்முடைய சீர்கேடு யாவும் என் கையில் சிக்கிக்கொண்டிருக்கிறது. அதை அம்பலப்படுத்தத் தயாராய் இருக்கிறேன்" என்று விரல்களைச் சொடுக்கிக்கொண்டு அவருக்கு முன்னால் நின்றார் என் அத்தான்.

"இருந்தால் என்னடா செய்துவிடுவாய்?" என்று அவருடைய கன்னத்தில் அறைந்தார் ஸ்ரீமான் லங்கேஸ்வரன்.

அவ்வளவுதான்; வாங்கியதைத் திருப்பிக் கொடுத்ததோடு மட்டும் நிற்கவில்லை என் அத்தான். ஸ்ரீமான் லங்கேஸ்வரனின் 'காலரை'ப் பிடித்து இழுத்து முகவாயில் ஒரு குத்து விட்டார். குத்தின வேகத்தில் அவர் விழ அத்தானும் விழுந்தார். இரு

பிரமுகர்களும் எழுந்து ஒட்டிக் கொண்ட மண்ணைத் தட்டிவிட்டுக்கொண்டு ஒருவரையொருவர் நெருங்கினர்.

"உன்னைப் பார்க்கவேண்டிய இடத்தில் பார்த்துக் கொள்கிறேன்!" என்றான் ஸ்ரீமான் லங்கேஸ்வரன்.

"ஏன், இங்கே பார்க்கமுடியாதோ?" என்றார் என் அத்தான்.

இப்படியாக ஒருவரையொருவர் வாயால் தாக்கிக் கொண்டு நின்றார்களே தவிர, கையாலோ, காலாலோ தாக்கிக்கொண்டு வழக்கம்போல் ஓடுவதாகக்காணோம். —என்ன செய்வேன். எவ்வளவு நேரம்தான் இந்த விபரீதத்தை விளையாட்டாகக் கருதி வேடிக்கைப் பார்ப்பேன்? — அலுத்துப்போன நான் "ஐயோ, போடுகிற சண்டையை வெளியேபோயாவது போடக் கூடாதா?" என்றேன், பெருமூச்சு விட்டுக் கொண்டே

"மன்னிக்க வேண்டும், லலிதா! இதோ இப் பொழுதே இவனை நான் வெளியே அனுப்பி விட்டு வருகிறேன்!" என்று சட்டையின் கைகளை மடக்கி விட்டுக்கொண்டே, ஸ்ரீமான் லங்கேஸ்வரனை விறைத்து நோக்கினார் அத்தான்.

"முதலில் நீதான் வெளியேறவேண்டும்!" என்றார். அவர்.

"இல்லை நீதான்!"

"இல்லவே யில்லை; நீதான்!"

"நான் அவளுடைய அத்தான்; வெளியேற முடியாது"

"அவள் அதை ஒப்புக் கொள்கிறாளா?"

"இதில் ஒப்புக்கொள்ள என்ன இருக்கிறது? எந்தப் பெண்ணும் தன் காதலை வெளியிட மாட்டாள்; பெண்மை அதற்கு இடம் கொடுக்காது—அதனால்தான் அவள் மௌனமாக இருக்கிறாள்; இது ஒன்றே போதும்; எனக்கு!—நான்தான் அவள் காதலன்; நான்தான் அவள் கணவன்; நான்தான் அவள் துணைவன்; நான்தான் அவளுக்கு எல்லாம். வேண்டு மானால் பார், அதற்கு அத்தாட்சி" என்று தன் சட்டைப் பையிலிருந்த என் கணவரின் கடிதத்தை எடுத்துக் காட்டினார் அவர்.

அதைக் கண்டதும் எனக்குப் பகீர் என்றது. அந்தரங்கமாக அவள் கணவனால் காக்கப்படும் கற்பின் பெட்டகம் அன்றோ, பெண்? அவளை அடகுப் பொருளாகவும் கலியாண வீட்டுச் சந்தனப் பேலாவாக வும் ஆக்குவதுதான் சீர்திருத்தமா? அதுதான் புதுமையா? புரட்சியா? அதுதான் அன்பா? அது தான் வாழ்க்கையா? ஐயோ இதுதான் விபரீதம்—இந்த விபரீதத்துக்கு, இந்த வெட்கக் கேட்டிற்கு நேர்மையான சாயப்பூச்சு என்ன வேண்டிக் கிடக் கிறது; அட கடவுளே! அந்தக் கடிதம்தான் அன்பின் சின்னமாமே, ஆசாரத்தின் அடித்தளமாமே?—அன்பு என்பது இன்னதென்று தெரியாதா? உலகம் மாயை என்பதுபோல் அன்பும அவர்களுக்கு மாயையா? மனப் பிரமையா?

உண்மையில் அன்பை அன்பாக மதித்திருந்தால் இப்படியும் ஒரு கடிதம் எழுத அவருடைய மனம் துணிந்திருக்குமா? சீ! என்ன மனிதர்கள், என்ன வாழ்க்கை!

இவ்வாறு என்னை மறந்து எண்ணமிட்டுக் கொண்டிருந்தபோது "அன்புள்ள குழந்தைகளே?" என்று அன்பே உருவாய் ஸ்ரீமான் லங்கேஸ்வரன் அந்தக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தார்.

அவ்வளவுதான்: "போடா வெளியே! நீயுமாச்சு உன் கடிதமுமாச்சு!" என்று அவருடைய கழுத்தில் கையை வைத்துப் புழக்கடை வழியாக ஒரு தள்ளுத் தள்ளிவிட்டார் என் அத்தான். அடித்த பந்தைப போல் திரும்பிவந்து என் அத்தானின் கழுத்தில் கையை வைத்துத் தெருவழியாக ஒரு தள்ளுத் தள்ளி விட்டார் ஸ்ரீமான் லங்கேஸ்வரன். இப்படியாக ஒருவரைப் பிடித்து ஒருவர் தள்ளிக் கொண்டும் வாய்க்கு வந்தபடித் திட்டிக்கொண்டும், கைக்குக் கிடைத்தபடி அடித்துக் கொண்டும் இருந்த அவர்களை அதற்குமேல என்ன செய்வதென்றே எனக்குத் தோன்றவில்லை. நல்லவேளையாக அந்தச் சமயத்தில ஆபத்பாந்தவனாக அனாத ரட்சகனாகச் சாமபு வந்து சேர்நதான்.

"என்னம்மா இது?" என்று ஆச்சரியத்தோடு என்னைக் கேட்டான்.

"முடிந்தால் இந்தப் பெரிய மனிதர்களைச் சின்ன மனிதனான நீயாவது வெளியே தள்ளிக் கதவை மூடித் தொலையேன்?" என்றேன் நான்.

அவ்வளவுதான். இழுத்துப் பறித்துக் கொண்டிருந்த இரு பிரமுகர்களையும சாம்புவின் வலுமிக்கக் கரஙகளை உநதித் தள்ள ஒருவரையொருவர் இறுகப் பிடித்துக் கொண்டிருநதவர்கள் சேர்ந்தாற் போல சாககடையில் விழுந்தார்கள். அதுதான் சமயமென்று கதவை மூடித் தாளிட்டுவிட்டுச் சாம்பு திரும்பினான்.

"எனக்கேற்ற இடமா இது!" என்று கருவினு, ஸ்ரீமான் லங்கேஸ்வரன்.

"என்னையுமா நீ ஏமாற்றி விட்டாய்? இரு இரு!" என்று கருவினுர் என் அத்தான்.

"இருக்கிறேன். இருக்கிறேன்!" என்றேன் நான்.

"அந்த அகம்பாவிகளிடம் உங்களுக்கென்னம்மா பேச்சு. உள்ளே வாங்க, படிச்சவங்களாம், படிச்சவங்க!" என்று காறி உமிழ்ந்தான் சாம்பு.

"இத்துடனுவது அவர்கள் விடுவார்களோ, விடமாட்டார்களோ என்று தெரியவில்லையே எனக்கு" என்று இடுப்பைப் பிடித்துக் கொண்டே நான் மெதுவாக மாடிப்படிகளில் காலை வைத்தேன்.

"ஐயோ!" என்ற சாம்புவின் அலறல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன்.

சாம்புவின் நெற்றியிலிருந்து ரத்தம் ஆருகப் பெருகி ஓடிக்கொண்டிருந்தது.

"ஐயோ, சாம்பு!" என்று கத்திக் கொண்டே நான் அவனை நோக்கி ஓடினேன்.

# 9. குப்பையிலே குருக்கத்தி

"அழுவதைவிடச் சிரிப்பது நல்லது!" —சொன்னவன் சொன்னபடிச் சிரித்தானே என்னமோ அந்தப் புல்லரிவாளரின் கல்லடிக்குள்ளான சாம்பு அன்று சிரிக்கத்தான் சிரித்தான்; சிரித்துக்கொண்டே நெற்றியில் வழிந்த ரத்தத்தைத் துடைத்தான். துடைத்துக் கொண்டே கிணற்றடிக்குச் சென்று கல்லடியால் பட்ட காயத்தைக் கழுவிக் கொண்டான். சுற்றுமுற்றும் பார்த்தபடி அங்கே மண்டிக் கிடந்த ஏதோ ஒரு செடியின் தழையைப் பறித்தான்; அதை உள்ளங்கையில் வைத்துக் கசக்கி அதன் சாற்றை காயத்தின் மேல் பிழிந்தான்; பிழிந்த பின் அந்த இலையை அதன் மீதே வைத்துக் கட்டுப் போட்டுக் கொண்டு எனக்கு முன்னால் வந்து நின்றான்.

"என்னாலல்லவா உனக்கு இந்தக் கஷ்டம்?" என்றேன் நான்.

"உங்களுடைய கஷ்டத்தைப் பார்க்கும்போது என்னுடைய கஷ்டம் எனக்கு அவ்வளவு பெரிதாகத் தோன்றவில்லை, அம்மா!" என்றான் அவன்.

நான் பெருமூச்சு விட்டபடி, "எல்லாம் உன் எஜமானால் வந்த வினை!" என்றேன்.

"ஆமாம், அவர் ஊரிலிருந்து வரும் வரை இந்தப் பயல்களிடம் அகப்பட்டுக் கொண்டு நீங்கள் இப்படித் தான் அவதிப்பட்டுக் கொண்டிருக்க வேண்டுமா?" என்று அவன் கேட்டான்.

"அவர் எங்கே வரப்போகிருர்? அது பெரிய கதை சாம்பு, அப்புறம் சொல்கிறேன்!" என்று கலங்கிய கண்களை அவனுக்குத் தெரியாமல் மறைக்கப் பார்த்தேன்.

"சரி, அம்மா! அடுப்பில் உலை வைத்துவிட்டு வந்தேன்; அது என்ன ஆயிற்ருே என்னமோ?" என்று பரபரத்துக் கொண்டே அவன் சமையலறையை நோக்கி நடந்தான்.

"இதையும் கேட்டுவிட்டுப் போகிருயா?" என்றேன் நான், கொஞ்சம் தயக்கத்துடன்.

"எதை, அம்மா?" என்று அவன் திரும்பிஞன்.

"அறிவுக்கு உணவு படைக்கும் அந்த அறிஞர் களிடமிருந்து வயிற்றுக்கு உணவு படைக்கும் வறிஞ ஞன நீதான் இனி என்னைக் காக்க வேண்டும்!" என்றேன் நான் என்னை மறந்து.

"ஐயா இதை நீங்கள் சொல்லாமலே இருந்திருக்கக் கூடாதா?" என்ருன் அவன் வருத்தத்துடன்.

"ஏன் சாம்பு?" என்று நான் திடுக்கிட்டுக் கேட் டேன்.

"இம்மாதிரி விஷயங்களில் பிறர் சொல்லிச் செய் வதை நான் எப்போதுமே விரும்புவதில்லை, அம்மா!" என்ருன் அவன் கம்பீரமாக.

"ஒருவேளை அவர்களுடைய அந்தஸ்தை உத்தேசித்துப் பேசாமல் இருந்துவிடுவாயோ என்று பயந்தேன்!"

"அவர்களுடைய அந்தஸ்துக்காக என்னுடைய மனிதத் தன்மையை என்னால் இழந்துவிட முடியாது, அம்மா! பயப்படாதீர்கள்: நான் இருக்கிறேன்!" என்று கடைசி வார்த்தையைக் கொஞ்சம் அழுத்தங் கொடுத்துச் சொல்லிவிட்டு அவன் சென்றான்.

நானோ நின்ற இடத்திலேயே நின்றேன். ஆனால், என்னைப்போல் என் மனம் நிற்கவில்லை; தன்பாட்டுக்கு அது ஓட ஆரம்பித்துவிட்டது.

அந்தஸ்து மிக்க அவர்கள் எங்கே, அதைப் பற்றியே தெரியாத இவன் எங்கே?

மனிதத் தன்மை மிக்க இந்த மகா புருஷன் எங்கே, அதைப் பற்றியே தெரியாத அந்தஅற்பப் புழுக்கள் எங்கே?

இத்தனைக்கும் தன்னைப்பற்றிய கவலை தன்னைப் பெற்றவர்களுக்கு இருக்கவேண்டிய காலத்திலேயே, தன்னைப் பற்றிய கவலையைத் தானே ஏற்றுக்கொண்ட தனி மனிதன் அவன்!

எச்சிலிலைச் செல்வர்களோடு சாலையோரங்களில் உண்டு உறங்கி, விழித்து விளையாடி வாழ்ந்த பருவத்தில் தன்னைப் பற்றிய சிந்தனை கூட இல்லாமலிருந்த சித்தன் அவன்!

எனினும் அவனைச் சோறூட்டித் தாலாட்டி வளர்த்த புழுதி அவன் உடலில்தான் ஒட்டிற்று; உள்ளத்தில் ஒட்டவில்லை!

பாழும் உலகம் பதினாறுவது வயதில்தான் அவனைச் சிந்திக்க வைத்ததாம். "நீ மூளையை நம்பி வாழ விரும்புகிறாயா, அல்லது கைகளை நம்பி வாழ விரும்புகிறாயா?" என்று அவனைக் கேட்டுவைத்ததாம். "இதென்ன கேள்வி, இரண்டையும் நம்பித்தான் வாழ விரும்புகிறேன்!" என்று அவன் சொல்லிவைத்தானும். அது சிரித்துவிட்டு, 'அடபைத்தியக்காரா! மூளையை நம்பி வாழ்வதாயிருந்தால் அன்பைப் பற்றியும் பண்பைப் பற்றியும் நீ பேசிப் பேசியே பிழைத்துவிட லாம்; கைகளை நம்பி வாழ்வதாயிருந்தால் அப்படிப் பிழைக்க முடியாதே!' என்று அவனை எச்சரித்ததாம்.

அந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் கடைசியாகச் சொன்னவைகளின்மேல் நம்பிக்கை வைத்த அவனைத் தானுகவே தன்மேல் நம்பிக்கை வைக்க வைத்துவிட்டது உழைப்பு!

அப்புறம் கேட்கவேண்டுமா? — அதிலிருந்து அவன் வாழ்க்கையே உழைப்பாகிவிட்டது.

வண்டி இழுத்தான், மூட்டை சுமந்தான், விறகு பிளந்தான்.

இதில் அதிசயம் என்னவென்றால் இந்த வாழ்க்கை யிலும் அந்தஸ்து மிக்க அறிவுக் களஞ்சியங்களால் அவன் வஞ்சிக்கப்பட்டான்!

ஆயினும் உழைப்பில் அவனுக்கிருந்த உறுதி தளரவில்லை. அந்த உறுதியின் காரணமாக 'பெரிய ஸ்தாபனம்' ஒன்றில், 'பெரிய பதவி' ஒன்று அவ னுக்குக் கிடைத்தது; அதாவது, 'சைவாள் சாப் பாட்டுச் சாலை' ஒன்றிலே நாள் ஒன்றுக்குச் சாப்பாடு போட்டு, இரண்டணு சம்பளமும் வாங்கிக்கொடுத்த

மாவரைக்கும் 'உத்தியோகம்' ஒன்று அவனுக்குக் கிடைத்தது. அதையே 'புருஷ லக்ஷண'மாகக் கருதி ஏற்றுக்கொண்ட அவனுக்கு மன நிறைவும் நிம்மதியுங் கூடக் கிடைத்தது என்றால் பார்த்துக் கொள்ளுங் களேன்!

இந்த உத்தியோகத்தில் படிப்படியாக உயர்ந்து கொண்டே வந்த அவன் இருபதாவது வயதில் 'பிரதம சமையற்காரன்' என்ற பெறற்கரிய பதவியைப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வதற்குரியவனானான்.

அந்த அந்தஸ்தைப் பயன்படுத்திக்கொண்டு, அந்தஸ்து மிக்க எங்கள் ஊர்ப் பெரிய மனிதர்கள் அனைவரும் தங்கள் வீட்டு கலியாணங்களுக்கு அவனையே கைதேர்ந்த சமையற்காரன் என்று தேர்ந் தெடுத்தார்கள். என் கணவரும் என்னுடைய கலியாணத்தின்போது அவனையே தேர்ந்தெடுத்தார்.

இந்தச் சமயத்தில்தான் தன்னையும் அறியாமல் அந்தஸ்து என்னும் மாயை வந்து தன்னைப் பற்று வதையும், அந்த மாயை தன் அன்புக்குகந்த தோழர் களிடமிருந்து தன்னைக் கொஞ்சங் கொஞ்சமாகப் பிரிப்பதையும் அவன் உணர்ந்தானும்; உணர்ந்ததும், 'ஐயோ! கடவுளின் குழந்தையாகப் பிறந்த நான், சைத்தானின் குழந்தையாக மாறிவிடுவேன் போலிருக் கிறதே?' என்று அவன் பயந்தானும். அதற்கேற்றாற் போல் அவனுடைய சமையலில் தமது நாக்கைப் பறி கொடுத்துவிட்ட என் கணவர், அவனை எங்கள் வீட்டு நிரந்தரச் சமையற்காரனாக்கிக்கொள்ள நினைக்கவே, அதுதான் சமயமென்று அவன் 'பிரதம சமையற் காரன்' பதவியை ராஜினாமாச் செய்துவிட்டுச்

'சாதாரண சமையற்கார'ஞக வந்து சேர்ந்து விட்டான்.

இதுவே அந்தஸ்து மிக்கவர்கள் விரும்பாத அவன் வாழ்க்கை வரலாறு!

இந்த வாழ்க்கை வரலாற்றை அன்றெருநாள் அவன் என்னிடம் சொல்லிவிட்டு, "எப்படியாவது வாழவேண்டும் என்ற எண்ணம் எனக்குப் பிடிக்க வில்லே. அம்மா, இப்படித்தான் வாழவேண்டும் என்ற எண்ணமே எனக்குப் பிடிக்கிறது. அதனுல்தான் எதற்கும் நான் அழுவதில்லே; சிரிக்கிறேன்!" என்று தன்னே அறியாமல் 'தத்துவம்' பேசிய போது, எனக்கு அது வேடிக்கையாயிருந்தது—இன்றே? அது எனக்கு வேதோபதேசமாக வல்லவா இருக்கிறது?

இவ்வாறு எண்ணி நான் வியந்துகொண்டிருந்த போது மாலே மயங்கி, இருள் படர்வதை உணர்ந்தேன். அதே சமயத்தில் கூடத்திலிருந்த கடிகாரம் ஏழு முறை ஒலித்தது; திரும்பினேன்.

"சமையல் ஆகிவிட்டது அம்மா. சாப்பிட வருகிறீர்களா?" என்று அழைத்தான் சாம்பு.

"இதோ வந்துவிட்டேன்!" என்று நான் அவனுடன் சாப்பிடச் சென்றேன். நெற்றிக் கட்டின் மேல் ஊறியிருந்த பச்சிலேச் சாறு என் கவனத்தைக் கவர்ந்தது. "ஆமாம், அது என்ன பச்சிலே என்று நீ எனக்குச் சொல்லவே இல்லேயே?" என்றேன் நான்.

"சொன்னுல் அதன் மருந்துக் குணம் போய் விடுமாம்!" என்றுன் அவன்.

"ஓஹோ!" என்று நான் சிரித்துவிட்டு, "நீ பழைய காலத்து ஆசாமி போலிருக்கிறது!" என்று கையலம்ப எழுந்தேன்,

"புதிய காலத்து ஆசாமிகளைப் பார்க்கும் போது பழைய காலத்து ஆசாமியாயிருப்பதுதான் தேவலை என்று தோன்றுகிறது அம்மா!" என்று சொல்லிக் கொண்டே தண்ணீர்ச் சொம்பைத் தூக்கி அவன் என்னிடம் கொடுத்தான்.

கையை அலம்பிக் கொண்டு கூடத்துக்கு வந்தேன்; ரேடியோவை லேசாகத் திருப்பிவிட்டு உட்கார்ந்தேன். சிறிது நேரத்துக்கெல்லாம் சாம்புவும் சமையலறை வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு வெற்றிலைப் பெட்டியை மறக்காமல் எடுத்துக்கொண்டு தூரேணுரமாக வந்து உட்கார்ந்தான்.

ஏதேதோ பேசிக் கொண்டே இருந்தோம். கடைசியாக எங்கள் பேச்சு ஸ்ரீமான் லங்கேஸ்வரனை நோக்கித் திரும்பியது. அவருக்கு என்மேல் 'காதல் பிறந்த கதை'யை எவ்வளவு நாசூக்காகச் சொல்ல முடியுமோ அவ்வளவு நாசூக்காகச் சொன்னேன். அப்படியும் அந்தஸ்தின் அருமை பெருமைகளைப் பற்றி அறியாத அவன் முகம் சுருங்கிவிட்டது. "சீ, இவர்களும் மனிதர்களா!" என்று வெடுக்கென்று சொல்லி அவன் என்னை வெட்கத்துக்குள்ளாக்கி விட்டான்.

"என்ன செய்வது அப்பா? இந்தப் பெரிய மனிதர்களுக்கு மத்தியில்தான் சின்ன மனிதர்களான நாமும் வாழ வேண்டியிருக்கிறது!" என்றேன் நான்.

"அட கடவுளே, ஐயா இதற்குத்தானு உங்களை இங்கே அழைத்துக் கொண்டு வந்தார்?" என்று அவன் நெட்டுயிர்த்தான்.

"வேறெதற்கு என்று நினைத்தாய்? அறிமுகமில்லாத இந்த ஊரில் மற்றவர்களின் ஏச்சுக்கும்

பேச்சுக்கும் இடமில்லாமல் ஸ்ரீமான் லங்கேஸ்வர னிடம் ஒப்படைக்கத்தான் அவர் என்னை இங்கே அழைத்துக் கொண்டு வந்தார்!" என்று கூறிவிட்டு, அதற்குமேல் அங்கிருக்க விரும்பாமல் மடமடவென்று மாடிப்படிகளில் ஏறிவிட்டேன் நான்.

"தூ! போயும் போயும் இந்த மானங்கெட்ட மனிதருக்கு நீங்கள் மாலையிட்டீர்களே, அம்மா!" என்று வாயிலிருந்த புகையிலைச் சாற்றை முற்றத்துச் சாக்கடையில் அவன் காறித் துப்பிய சத்தம் என் காதில் விழுந்தது!

# 10. அன்புப் பணி

மறுநாள் காலை. "போஸ்ட்!" என்ற குரலைக் கேட்டுத்தெருக்கதவைத்திறந்தேன்—அவ்வளவுதான்; தபாற்காரனிடமிருந்த கடிதத்தை வாங்கிக்கொண்டு கதவை மூடுவதற்குள் ஸ்ரீமான் லங்கேஸ்வரன் உள்ளே நுழைந்துவிட்டார்!

எப்படி இருக்கும் எனக்கு?— அவரை நோவதற்குப் பதில் என்னை நானே நொந்து கொண்டு கூடத்துக்கு வந்தேன். கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்— அத்தை எழுதியிருந்தாள். என் கணவர் ஊருக்குப் போனபின் நான் ஏன் கடிதமே எழுதவில்லையென்றும், இன்னும் எவ்வளவு காலம் பட்டணத்திலேயே இருக்கப் போவதாக உத்தேசம் என்றும், அப்படியானால் நாங்கள் எவ்வளவு காலம் இங்கேயே தங்கியிருப்பது என்றும் கேட்டு அவள் எழுதியிருந்தாள்.

படித்து முடிந்ததும் அதை உறையிலிட்டுவிட்டு நான் உட்கார்ந்தேன்.

என்னைத் தொடர்ந்து வந்து நான் நின்றால் நிற்பதும், திரும்பினால் திரும்புவதுமாயிருந்த ஸ்ரீமான் லங்கேஸ்வரன் எனக்கு எதிர்த்தாற்போல் உட்கார்ந்தார். அதே சமயத்தில் கடைக்குப் போயிருந்த சாம்பு ஆபத்பாந்தவன் போல் உள்ளே நுழைந்தான்.

"பாவம்! இவன் மண்டையை வேறு உடைத்துத் தொலைத்தாரே, உன் அத்தான்?" என்று அவனுக்காகப் பரிந்து பேசினார் ஸ்ரீமான் லங்கேஸ்வரன்.

"தேவலையே, ஆண்களுக்காகக்கூட நீங்கள் அனுதாபப்படுகிறீர்களா?" என்று சொல்லிவிட்டு, அவருடைய பதிலை எதிர்பார்க்காமல் அவன் சமையலறைக்குச் சென்றுவிட்டான். நான் மௌனம் சாதித்தேன்.

அதைப் பொருட்படுத்தாமல், "கடிதம் யாரிடமிருந்து வந்திருக்கிறது, லலிதா?" என்று அவர் குழைந்தார்.

அதற்கும் நான் மௌனம் சாதித்தேன்.

"இப்பொழுது நான் எதற்கு வந்திருக்கிறேன் தெரியுமா?"

அடுத்தாற்போல் இந்தக் கேள்வி பிறந்ததும் அவருடைய முகத்தை நான் ஏறிட்டு நோக்கினேன்.

"மன்னிப்புக் கேட்கத்தான் வந்திருக்கிறேன், லலிதா! ஏதாவது தவறு செய்திருந்தால் என்னை நீ மன்னித்துவிடு!"

"சரி, மன்னித்துவிட்டேன்—போய் வருகிறீர்களா?" என்று நமஸ்கரித்த வண்ணம் எழுந்து நின்று நான் அவருக்கு விடை கொடுத்தேன்.

ஆனால், அவரோ என்னை நமஸ்கரிக்கவுமில்லை, எழுந்து நின்று என்னிடம் விடைபெற்றுக் கொள்ளவுமில்லை!

"ம், அவ்வளவு தயவு அவர் எங்கே வைக்கப் போகிறார்?" என்று நானும் பேசாமல் உட்கார்ந்து, மேஜையின்மேல் கிடந்த அவ்வாரப் பத்திரிகையை எடுத்துப் புரட்டினேன்—திடீரென்று ஸ்ரீமான் லங்கேஸ்வரனின் குரல் கரகரத்து ஒலித்தது!

"லலிதா, உண்மையாகவே நீ என்னைக் காதலிக்கவில்லையா?"

"சத்தியமாக உங்களை நான் காதலிக்கவில்லை; காதலித்ததில்லை; காதலிக்கப் போவதுமில்லை போதுமா?" என்று நான் பொறுமை இழந்து கத்தினேன்.

அவரும் பதிலுக்குப் பதிலாக, "நீ பொய் சொல்கிறாய்" என்று கத்தினார்.

"எது பொய்?" என்று நான் அமைதியற்றுக் கேட்டேன்.

"அதைத்தான் நானும் கேட்கிறேன்!" என்று உறுமிவிட்டு, அவர் இப்படியும் அப்படியுமாக உலாவினார். பிறகு, "உன்னுடைய பிறந்த தினத்தன்று என்னை நீ விருந்துக்கு அழைத்திருந்தாயே, நினைவிருக்கிறதா உனக்கு?" என்று குற்றவாளியைக் கூண்டில் ஏற்றிக் குறுக்குக் கேள்வி கேட்கும் வக்கீலைப் போலக் கேட்டார்.

"இருக்கிறது!" என்றேன் நான்.

"அன்று உன்னைக் கண்டு நான் நிலை தடுமாறியதும், என்னைக் கண்டு நீ நிலை தடுமாறியதும் பொய்யா?"

"இல்லை; கலையுள்ளம் கொண்ட நீங்கள் கண்ட படியெல்லாம் கற்பனை செய்து கொண்டதுதான் பொய்!"

"இந்த உலகத்தில் எதுதான் பொய்யில்லை? ஆஹா! அந்தக் காட்சி இன்றும் என் இதய வானில் பளிச்சிடுகிறதே? —அதோ, காற்றில் படபடக்கும் கரு நீலப் புடவை உன்னுடைய பொன்னுடலைத் தழுவி மின்னுகிறது. அதில வாரிச் சொரிந்த நித்தலங்களைப் போலிருக்கும் புள்ளிகள் என்னைக் கண்ணால் வெட்டி அழைக்கின்றன; நீ வந்து நின்ற இடத்தில் உன்னுடைய கூந்தலிலிருந்து உதிர்ந்த மல்லிகை மொட்டு என்னைக் கண்டதும் மலர்ந்து விரியும் உன்னுடைய முகத்தைப்போல் மலர்ந்து விடுகிறது! —அடாடா, அன்று நீ எனக்கு வேண்டி வேண்டி விருந்து படைத்தாய்! 'இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம்' என்று நீ அன்று என் இலையில் பாயசத்தை வார்த்த போது எனக்கு அது பாயசமாகவா தோன்றியது?— இல்லை லலிதா இல்லை—உன்னுடைய அதரத்தில் ஊறித் ததும்பும் மதுரம் மிக்க மதுவாகவே அது எனக்குத் தோன்றிற்று."

"சீசீ, இப்படியெல்லாம் பேசிக்கொண்டிருக்க உங்களுக்கு வெட்கமாயில்லையா?"

"இதில் வெட்கத்திற்கு என்ன இருக்கிறது, லலிதா?—பக்குவமடையாத உள்ளத்தால் உன்னை நீயே பாழாக்கிக் கொண்டுவிடாதே, நீ காதலிக்கவில்லையென்றாலும் உனக்காக உன் கணவர் என்னைக் காதலிக்கவில்லையா?—அன்றுகூட அவர் எனக்கு உன்னைக்காட்டி, 'இன்று லலிதாவின் அலங்காரம் எப்படி இருக்கிறது?' என்று கேட்கவில்லையா?

உன்னைப் பார்க்காமலேயே, 'நன்றாக இருக்கிறது!' என்று நான் சொல்லவில்லையா? அதற்கு அவர் "ஆளைப் பார்க்காமலேயே அபிப்பிராயம் தெரிவிக்கிறீர்களே?' என்று சிரித்துவிட்டு உன்னை எனக்கு முன்னால் நிறுத்தி உன் அழகை வருணிக்கவில்லையா?"

"உண்மைதான்!— ஆனால், நீங்கள் நினைப்பது போல் பெண் என்பவள் உடல் இச்சைக்காக மட்டும் உயிர் வாழ்பவள் அல்ல; அவளுக்கும் உள்ளம் உண்டு; உறுதி உண்டு; மானம் உண்டு; மரியாதையும் உண்டு!"

"உன் கணவனால் உனக்கு எந்த இன்பமும் இல்லாமற் போனபிறகு எது இருந்து என்ன பிரயோசனம், லலிதா?"

"என் கணவனால் எனக்கு எந்த இன்பமும் இல்லையென்று முடிவு செய்ய நீங்கள் யார்?"

"அந்த முடிவை நானும் செய்யவில்லை; உன் கணவரும் செய்யவில்லை. உன் மேல் நாங்கள் கொண்ட அன்பு செய்தது லலிதா அன்பு செய்தது!"

"ஐயோ, என்னை அவமதிப்பதெல்லாம் போதாதென்று அன்பையும் ஏன் அவமதிக்கிறீர்கள்?"

"தமிழ்நாட்டுப் பெண்களின் முன்னேற்றத்துக்காக லலிதா தமிழ்நாட்டுப் பெண்களின் முன்னேற்றத்துக்காக!"

"முன்னேற்றத்தைத் நான் ஏற்கனவே எத்தனையோ வழுக்கி விழுந்தவர்கள் தமிழ்நாட்டில் அடைந்து கொண்டிருக்கிறார்களே, அவர்களை வேண்டுமானால் உங்களால் முன்னேறியவர்கள் என்று நீங்கள்

சொல்லிக் கொள்ளுங்களே!—அதை விட்டுவிட்டு என்னுடைய பெண்மையைப் பலிகொள்ள விரும்பி என்னிடம் ஏன் உங்களுடைய காமவெறி பிடித்த கோரக் கரங்களை நீட்டுகிறீர்கள்?—கணவரிடம் பெறத் தக்க இன்பத்தை நான் பெருவிட்டால் என்ன, அதற் காகக் கடைத் தெருவில் நின்று உங்களிடம் பேரம் பேசவேண்டுமா?—போய் வாருங்கள் ஐயா, போய் வாருங்கள்! என் கணவர் எப்படி எந்தப் பெண்ணுக் கும் கணவராக இருக்க லாயக்கற்றவராகப் போய் விட்டாரோ அதே மாதிரி நானும் எந்த ஆணுக்கும் மனைவியாக இருக்க லாயக்கற்றவளாகி விட்டேன் என்று நினைத்துக்கொண்டு போய் வாருங்கள் ஐயா, போய் வாருங்கள்!''

''அவசரப்படாதே லலிதா, ஆற அமர யோசித்துப் பார்!—இதில் என்ன இழிவு இருக்கிறது?—செய்வதைச் செய்துவிட்டு எல்லாம் அன்பின் விளைவு என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டால் போதும், நம்மைப் போற்றக் கூடிய ஆன்றோர்களும் வாழ்த்தக்கூடிய சான்றோர்களும் இருக்கவே இருக்கிறார்கள்? எதற்காக நாம் அஞ்சவேண்டும்? அஞ்சி ஏன் ஆசையைப் பண் பென்னும் குழிவெட்டிப் புதைக்க வேண்டும்?—அன்று உன் கணவர்கூடச் சொல்லவில்லையா, உள்ளத்தின் எண்ணங்களை இஷ்டப்படியெல்லாம் மாற்றிக்கொள்ள முடியாது என்று; அதனால்தான் இவ்வளவு தூரம் உன்னை நான் வற்புறுத்துகிறேன்!''

''அப்படிப்பட்டவருடைய உள்ளத்தில் நேற்று வரை 'அன்புள்ள மனைவி'யாயிருந்த என்னை அவர் மட்டும் எப்படி 'அன்புள்ள குழந்தை'யாக மாற்றிக் கொண்டாராம்?''

"உன்னால்தானே மாற்றிக்கொள்ள முடியாது என்று சொன்னார். தன்னால் மாற்றிக்கொள்ள முடியாது என்று சொல்லவில்லையே?"

"அதற்காக உங்களை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும். உங்களுக்கும் அவருடைய ஆண்மைக்கு ஏற்பட்ட ஆபத்து ஏற்பட்டுவிட்டால் நீங்களும் என்னை விட்டு விலகி எனக்காக வேறு எவனையாவது நியமிப்பீர்கள்; அவனையும் ஏற்றுக் கொண்டு உங்களுடைய அன்புக் கட்டளையை அடியாள் நிறைவேற்றி வைக்க வேண்டும்—அப்படித்தானே? அட, பாவிகளா! உங்கள் அன்புப் பணியைச் செய்ய உங்களுக்குப் பிறர் மனைவிதானா கிடைத்தாள்? வேறு யாரும் கிடைக்கவில்லையா?"

அவ்வளவுதான்; ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்து விட்டது ஸ்ரீமான் லங்கேஸ்வரனுக்கு. 'அதற்கு வேண்டிய உரிமை பெற்றவன் உன் கணவன். அந்த உரிமையின் சின்னமே உன் கழுத்தை அலங்கரிக்கும தாலி. அந்தத் தாலி இட்ட கட்டளையை நீ தடுகக முடியாது; தடுக்க உனக்கு உரிமை கிடையாது!" என்று அடித்துப் பேசினார்.

நானும் சளைக்கவில்லை; "என் உரிமையை அவர் எனக்குக் கட்டிய தாலி தடுக்குமானால் அந்தத் தாலியே எனக்கு வேண்டாம்!—இதோ உங்களுக்கு முன்னால இப்பொழுதே அதைக் கழற்றி எறிநதுவிடுகிறேன; எடுத்துக் கொண்டு போஙகள்! இனிமேல அந்த மனிதரின் பேரால், எதையும் என்னிடம் கேட்காதீர்கள் —எடுத்துக் கொண்டு போங்கள். உடனே எடுத்துக்

கொண்டு போங்கள்!'' என்று வெறிப் பிடித்தவள் போல் தாலிக் கயிற்றை அவர் முகத்தில் விட்டெறிந்து விட்டு நான் மாடிக்கு ஓடினேன்; அறைக் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு ,என் ஆத்திரம் தீரும் வரை அழுதேன், அழுதேன், அழுதுகொண்டே இருந்தேன்.

# 11. "தேங்க் யூ!"

எவ்வளவு நேரமாயிற்றோ எனக்குத் தெரியாது—கட்டிலை விட்டு எழுந்து கலங்கிக் கலங்கித் தாரை யாய்க் கண்ணீர் பெருக்கிக் கொண்டே மாடியறை ஜன்னல் வழியாக வீதியை வெறித்து நோக்கியவாறு ஜடமாய், சிலையாய் அமர்ந்தேன்.

ஸ்ரீமான் லங்கேஸ்வரன் ரௌத்திராகாரமான தோற்றத்தோடு வீட்டு நடையை விட்டுக் கீழே இறங்கி வீதியில் நடந்துகொண்டிருந்தார். அங்கிருந்து செல்வதற்குமுன் அவர் என்னை ஒருமுறை திரும்பிப் பார்த்தார். வெறி கொண்டு சிவந்த அவரது கண்கள் கனன்றுகொண்டிருந்தன!

'பிறர் மனைவி உங்களுடைய இஷ்டத்துக்குப் பணியாவிட்டால் உங்களுக்கு ஏன் ஐயா, இவ்வளவு கோபம்?' என்று குமைந்தது என் மனம்.

பிறன் மனைவி!

இதை நினைத்ததும் என் இதயத் துடிப்பே ஒரு கணம் நின்றுவிட்டது; என் கை என்னையும் அறியாமல் என்னுடைய கழுத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டது; 'யாருக்கும் நான் மனைவி அல்ல!' என்று ஆத்திரத்தால் என் நேத்திரம் சொன்ன அந்த

வார்த்தை என்னுடைய செவிகளில் புகுந்து குடைந்தது.

'என்னடி லட்சியப் பெண்ணே! விதியின் முடிச்சை அவிழ்த்து எறிந்துவிட்ட நீயா தமிழ்ப் பெண்? அடி, கேடு கெட்டவளே! சிந்திக்கும் திறன் இருந்தால் அந்த நாளைச் சற்றே நினைவு கூர்ந்து பார். மங்கல நாண் உன்னுடைய கழுத்தில் ஏறிய அந்த மணநாளைச் சற்றே நினைவு கூர்ந்து பாரடி பார்? நீயும் உன் கணவனும் உடலால் பிரிந்திருக்கலாம்; அதனால் உண்மை பொய்யாகிவிடுமோ? நீயும் உன் கணவனும் உள்ளத்தால் மாறி இருக்கலாம்; அதனால் உறவு மாறிவிடுமா? மாற்றிவிடத்தான் முடியுமா?'' என்று கேட்டு மனச்சாட்சி என்னை வதைத்தது.

''முடியாது முடியவே முடியாது!'' என்று நான் தலையை அழுத்திப் பிடித்துக்கொண்டு கூவினேன். மறுபடியும் எழுந்து கட்டிலில் விழுந்து அழுதேன்; புரண்டேன்.

கடைசியாகச் சேர்ந்து விழுந்து கிடந்த என் மனக் கண்களுக்கு முன்னால் மங்கிய ஒளி மூட்டத்தின் நடுவே ஏதேதோ நினைவுக் குவியல்கள் உருவம் பெறாமல் கிளம்பி, திரண்டு, சங்கமித்து ஒரு கணம் மாயைபோல் உருவ வரம்பு அமைத்துக் காட்டி, அருவம்போல் அசைந்து அசைந்து, தேய்ந்து தேய்ந்து, கொஞ்சம் கொஞ்சமாய் நினைவின் எல்லைக் கோட்டில் மனக் குகையின் இருட்செறிவில் சரிந்து புதைந்து மறைந்தன.

மண்டியெழும் ஓமத் தீயின் புகை நடுவே அம்மி மேல் பதித்த பாதத்தை அன்போடு வருடும் கரங்கள்

—திடீரென்று அந்தக் கரங்கள் மறைகின்றன; அம்மி கிடுகிடுத்துப் பாதாளத்தை நோக்கி நழுவுகிறது; பாதத்துக்குரிய அந்தப் பெண்ணுரு தடுமாறி நின்று அலறுகிறது.

நான் அலங்காரம் செய்யப்பட்டு நிற்கிறேன், நின்ற இடத்திலேயே நின்று நிமிர்ந்து பார்க்கிறேன்; 'அருந்ததி பார்த்தாயா?'—இது என்ன கேள்வி என்று. நான் யோசிக்கவில்லை.

'பார்த்தேன்' என்று பதில் சொல்லி வைக்கிறேன்.

என் கணவரிடம்—ஏன், என் வாழ்க்கையிலேயே நான் கூறிய முதல் பொய் அதுதான்!

அதோ—என்னவோ சுருண்டு, நெளிகிறதே அது என்ன? பாம்பா?

இல்லை இல்லை; கயிறு!—தூக்குக் கயிறு!—அல்ல, அல்ல; தாலி!

ஆண்டான் ஒருவன் தன் அடிமைக்குக் காட்டும் பட்டா, அது!—அல்ல, அல்லவே அல்ல. ஆண் ஒருவன் தன் இனமில்லாத, தன்னிலிருந்து வேறுமில்லாத ஓர் உயிருக்கு—பிரிவு காட்டிப் பிரிந்த இயற்கை, பரிவு காட்டிச் சேர்க்கும் நியதிக்குப் பணிந்து சூட்டும் அன்புச் சின்னம் அது; பண்புச் சின்னம் அது!

பெண் என்பவள் மலர் என்றும், ஆண் என்பவன் வண்டென்றும் எண்ணித் திரியும் பெண் பித்தர்களுக்குப் புத்தி கற்பிக்கும்—பயந்து மரியாதையோடு ஒதுங்கிச் செல்லச் செய்யும் எச்சரிக்கை! அது!

ஆம்; காமுகரிடமிருந்து பெண்ணைக் காக்கும் சாட்டை அது!

அடுத்த கணம் அந்த மங்கல நாணும் தேய்ந்து மறைகிறது; 'ஐயோ!' என்று என்னுள் ஏதோ ஒன்று அலறுகிறது; கண்களைத் திறக்கிறேன்; எங்கே, என் மங்கல நாண் எங்கே? எதிரிலிருந்த நிலைக்கண்ணாடியில் என் அமங்கலக் கோலம் தெரிகிறது. அதற்கு மேல் மாட்டப்பட்டிருந்த படத்தில்; காட்சியளிக்கும் என் கணவர் என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்.

அவ்வளவுதான்; "என்னை மன்னித்துவிடுங்கள் சுவாமி, என்னை மன்னித்துவிடுங்கள்!" என்று நான் கைகூப்பி நின்று கண்ணீர் வடித்தேன்.

"என்னை நீங்கள் துறந்தாலும் உங்களை நான் துறக்கக்கூடாது; துறக்கவும் முடியாது!" என்ற உறுதி என் உள்ளத்தை மறுபடியும் உறைவிடமாகக் கொண்டது.

ஒருவேளை எனது செயலுக்கு விதிவசமான காரணம் ஏதும் இருக்குமோ?...எங்கோ என் அறிவுக்கும், புலனுக்கும் எட்டாத தூரத்தில் இருக்கும் என் அன்புக் கணவர்தான்! என்னோடு இருந்த காலம் வரை அவர் என்மீது வைத்திருந்த அன்பில் சற்றும் குறை இருந்ததில்லையே?—அவருக்கு ஏதேனும் ஆபத்து—அதாவது, அவர் உயிருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்குமோ?—இல்லாவிட்டால் எனக்கு ஏன் இந்த அமங்கலக் கோலம்? இதுவும் விதியின் செயல்தானா, என்ன?

"போடி, புத்தி கெட்டவளே! எதுவாயிருந்தாலென்ன, பவித்திரமான அந்த மங்கல நாணை எடுத்து மறுபடியும் அணிந்துகொள்" என்று என் அந்தராத்மா எனக்குக் கட்டளையிட்டது.

“கடவுளே! என் கணவருக்கும் எந்தவிதமான ஆபத்தும் நேராமல் காப்பாற்று! எங்கிருந்தாலும் என் கணவர் தீர்க்காயுசோடு இருக்கட்டும். எனக்குப் பின் அவர் மரிக்கட்டும்; அந்த ஒரு பாக்யமாவது எனக்குக் கிடைக்கட்டும்!” என்று என் கணவரின் படத்தையே பார்த்துக் கண்மூடிப் பிரார்த்தித்தேன்.

ஆம்; கணவர்தானே எனக்குக் கடவுள்! மறுபடியும் நிலைக்கண்ணாடியில் என் உருவம் தெரிந்தது.

தாலி...?

ஒருவேளை லங்கேஸ்வரன் அதை எடுத்துக் கொண்டு போய்விட்டாரா, என்ன?

‘படார்’ என்று கதவைத் திறந்து கொண்டு தட தடவெனக் கீழே இறங்கினேன்.

கூடத்தில் தரையில் அந்த மாங்கல்யச் சரடு கிடந்தது! அதைக் கண்டதும் என் கணவரே மீண்டும் வந்து என் எதிரே நின்று என்னை ஏற்றுக்கொள்வது போலவும் இனிமேல் உன்னை எவனுக்கும் நான் தாரை வார்த்துக் கொடுக்க மாட்டேன் என்று உறுதி யளிப்பது போலவும் தோன்றிற்று. ஆனந்தத்தால் ‘விம்மும்’ இதயத்தோடு அதை எடுக்க ஓடினேன்—

‘ஐயோ! என் மேல் காட்ட வேண்டிய கோபத்தை யெல்லாம் ஸ்ரீமான் லங்கேஸ்வரன் அதன்மேல் காட்டி யிருக்கிறாரே? பாவம் படிந்த தன் பாதத்தால் புனித மிக்க அதை மிதித்துத் தேய்த்திருக்கிறாரே?—என்ன செய்வேன் அந்தப் புண்ணியவாளரின் பாதத்தில் மாங்கல்யம் மிதிப்பட்டு நசுங்கித் தேய்ந்துவிடக் கூடாதே!’ என்று மறுபடியும் அணிந்து கொள்வதற்காக அதை எடுக்கக் குனிந்தேன்.

"வேண்டாம் அம்மா வேண்டாம்!" என்று கூவிக் கொண்டே சாம்பு வந்து அதை எடுத்துக்கொண்டான்.

ஒன்றும் புரியாமல் நான் திகைத்து நின்றேன்.

"உமிழ்ந்ததை எடுத்து உண்பதாவது? வேண்டாம் அம்மா வேண்டாம்!" என்றான் அவன்.

"துப்பியதா இது?—இல்லை சாம்பு, இல்லை. கக்கிய மாணிக்கத்தை மீண்டும் எடுத்து விழுங்கிவிடுமாமே, நாகப்பாம்பு அதைப்போல இது கக்கக் கூடாத மாணிக்கம்! கொடுத்துவிடு அதை, கொடுத்துவிடு அதை!" என்றேன் நான்.

சாம்புவின் முகத்தில் லேசான ஒரு புன்னகை ஓடி மறைந்தது.

"அம்மா, உங்களைப் போன்ற பெண்கள் துன்பப் படத்தான் பிறந்தவர்கள் என்று இப்போதுதான் எனக்குத் தெரிகிறது!" என்றான் அவன்.

"அந்தத் துன்பத்தில்தான் பெண்களுக்கு இன்பம் இருக்கிறது, சாமபு!—கொடுத்துவிடு அதை, தயவு செய்து கொடுத்துவிடு அதை!" என்று நான் கெஞ்சினேன்.

"வெட்கங் கெட்ட அந்த மனிதனின் மேல் உங்களுக்கு இன்னும் வெறுப்பு ஏற்படவில்லையா அம்மா!..."

"வெறுப்பு ஏற்படலாம்; ஏற்படாமற்போனாலும் போகலாம். அதற்காக விலக்கிவிடக் கூடாது; விலக்கி விடவும் முடியாது?"

"எனக்குத் தெரிந்தவரை நீங்கள் தாலியை வைத்துக் கொண்டு உரிமை பாராட்டுவதும்

லங்கேஸ்வரன் கடிதத்தை வைத்துக்கொண்டு உரிமை பாராட்டுவதும் ஒன்றுதான்; வித்தியாசமே இல்லை. இந்த லக்ஷணத்தில் நீங்கள் ஒருவரை ஏன் வெறுக்க வேண்டும். இன்னொருவரை ஏன் துதிக்க வேண்டும்?—தாலியா இது! உங்கள் மானத்தைக் கட்டி இழுத்துக் கொண்டு வந்து தெருவில் நிறுத்தும் பாவக் கயிறு, பாசக்கயிறு...!''

அதற்குமேல் என்னால் பொறுக்க முடியவில்லை. ''சாம்பு'' என்று ஆத்திரத்துடன் கத்திக் கொண்டே பாய்ந்து அவன் கையிலிருந்த தாலிச் சரட்டைப் பறித்தேன்.

அதே சமயம் 'கிளிக்' என்ற சத்தத்துடன் 'பளிச்' சென்ற ஒளி வீச்சு மின்னல் போல வெட்டித் தெறித்து மறைந்தது; திரும்பினேன்.

வாயிற்படியில் பிளாஷ் லைட் பொறுத்தப்பட்ட காமிராவோடு நின்றுகொண்டிருந்த என் அத்தான், ''தேங்க் யூ!'' என்று சிரித்துக் கொண்டே மறைந்தார்.

''அட, பாவி'' வாயைப் பிளந்தேன்.

''அவர் கிடக்கிறார்!—இன்னும் நீங்கள் ஏன் அம்மா, இங்கே இருக்கவேண்டும்?—பேசாமல் ஊருக்குப் போய் விடலாமே!'' என்றான் சாம்பு.

''அதுதான் சரி!'' என்று நானும் அவன் சொன்னதை ஆமோதித்தேன்.

# 12. பெண்மையில் கண்ட உண்மை!

ரயில் நிலையம் உயிர்பெற்று, உணர்வு பெற்று ஜீவகளையோடு விம்மிக் கொண்டிருந்தது.

மணி ஒன்பது முப்பத்தைந்து.

இரண்டாம் வகுப்பு வண்டியில் ஓர் உத்தியோகஸ்தரின் குடும்பமும் நானும் தவிர வேறு யாருமில்லை.

வண்டி புறப்படுவதற்கு முதல் மணி அடித்தது; பிளாட்பாரத்தில் ஜன்னலருகே நின்று கொண்டிருந்த சாம்பு என்னிடம் விடை பெற்றுக் கொண்டு மூன்றும் வகுப்புப் பெட்டிக்குச் சென்றுவிட்டான்.

நான் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்.

இரண்டாவது மணியும் அடித்தது. 'கூக்கூ...' என்று குரலெடுத்துக் கூவியது என்ஜின். அதைத் தொடர்ந்து கார்டின் விசில் 'விர்ர்...விர்ர்...' என்று அலறிற்று. பச்சை விளக்கின் பசுமையான ஒளி லாகவமாக ஆடி ஆடிப் படர்ந்தது.

உள்ளத்தில் விவரிக்க முடியாத மகிழ்ச்சி! சொந்த ஊருக்குப் போகிறேன் என்பதனாலா? இல்லை; இல்லை.

ரயில் பிரயாணம் என்ருலே எனக்கு ரொம்ப சந்தோஷம்தான்!—அத்தகைய குழந்தை உள்ளம் என்னுடைய உள்ளம்; அதை எண்ணி எனக்கு நானே சிரித்துக் கொண்டேன்.

'புஸ்!' என்ற பெருமூச்சுடன் ரயில் நகர ஆரம்பித்தது. அவ்வளவுதான்; என் சந்தோஷமெல்லாம் க்ஷணமே குலைந்து குடியோடிப் போய்விட்டது. காரணம் ஸ்ரீமான் லங்கேஸ்வரன் தலை தெறிக்க ஓடி வந்து என் பெட்டியில் வந்து ஏறிக்கொண்டதுதான்.

'அட கடவுளே! கால் தவறிக் கீழே விழுந்து ரயில் சக்கரத்தில் அரைபட்டுச் சாகக் கூடாதா, இந்தப் பாவி?' என்று எண்ணியது என் மனம்.

'சீ, இதென்ன ராக்ஷஸத்தனம்' என்று என்னை நானே கடிந்துகொண்டேன்.

பெட்டிக்குள் வந்து நின்ற லங்கேஸ்வரனே கைக் குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே எனக்கு அருகே இருந்த இடத்தில் ஏதும் அறியாதவர் போல் அமர்ந்தார். நானே ஜன்னல் பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

கொஞ்சங் கொஞ்சமாக நான் வசித்த ஊர் என்னிடமிருந்து விடை பெற்றுக் கொண்டிருந்தது.

இருள் கவிழ்ந்த வாழ்வுப் பாதையில் எதிர்ப்படப் போகும் அபாயங்களை அறிவுறுத்துவது போல் சிவப்பு விளக்குகள் அடிக்கடி மின்னிக்கொண்டிருந்தன.

'லொடக், லொடக்' என்ற தாள லயத்தோடு இருளைக் கிழித்து வழியமைத்து முன்னேறிக்கொண்டிருந்தது ரயில்,

எனக்கு அருகே இருந்த ஸ்ரீமான் லங்கேஸ்வரன் என் கவனத்தைத் தன் பக்கம் திருப்புவதற்காகத் தொண்டையைச் செருமிக் கனைத்தார்; நான் திரும்ப வில்லை.

"அப்பப்பா, என்ன புழுக்கம்!" என்று சொல்லிக் கொண்டே மின்சார விசிறியைச் சுழலவிட்டார். அதையும் நான் கவனிக்கவில்லை.

"சக பிரயாணிகள் ஆட்சேபித்தால் புகை பிடிக்காமல் இருக்கும்படி ரயில்வே நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது. நான் புகை பிடிப்பதில் உனக்கு ஆட்சேபணை யில்லையே" என்றார் அவர். அதற்கும் நான் பதில் சொல்லாமல் தோல் பெட்டியை எடுத்து எனக்கும் அவருக்கும் இடையே வைத்துவிட்டு இன்னும் கொஞ்சம் நகர்ந்து உட்கார்ந்தேன்.

அடுத்து நிற்கும் ரயில்வே ஸ்டேஷனில் ரயில் நின்றது; சாம்பு வந்தான்.

"ஓஹோ! இவர் வந்துவிட்டாரா? நினைத்தேன் அம்மா, நினைத்தேன்!" என்று அவன் சிரித்தான்.

"நினைத்த மாத்திரத்தில சைத்தான் அல்லவா வந்து நமக்கு எதிரில் நிற்கிறது!" என்றேன் நான்.

அதற்குள் ரயில் கிளம்பவே சாம்பு போய் விட்டான்.

"கழற்றி எறிந்த தாலி மீண்டும் கழுத்துக்கு வந்து விட்டது போலிருக்கிறதே, இதுதான் உன் உறுதியா?" என்றார் அவர்.

"உங்களைப் போன்றவர்களிடமிருந்து என்னைக் காப்பாற்றும் திறமையை அவர் இழந்துவிட்டாலும்,

அவர் கட்டிய தாலி இழந்துவிடவில்லை என்ற நம்பிக் கையில்தான் அதை எடுத்து மறுபடியும் அணிந்து கொண்டேன்!'' என்றேன் நான் குமுறும் குரலில்.

''இதிலிருந்து ஒரு மனோதத்துவம் எனக்குப் புரிகிறது''

''உங்கள் நடத்தையிலிருந்தே அந்த மனோ தத்துவம் எனக்குத் தெரிகிறது!''

''நூற்றில் ஒரு வார்த்தை! —உன்னை அறியாம லேயே, உனக்குத் தெரியாமலேயே, உன் மனத்திற்கு உள்ளே இருக்கும் உள் மனம் என்னைக் காதலிக்கிறது என்ற உண்மையை நான் மட்டும் ஒரு மனோதத்துவ நிபுணனுயில்லாவிட்டால் கண்டுகொள்ள முடியுமா? இன்னும் சொல்லப்போனுல் உன் கணவரின்மேல் உனக்குக் கொஞ்சங்கூடக் காதல் கிடையாது. ஆயினும் சமூகத்திற்கும் சம்பிரதாயங்களுக்கும் அஞ்சி, நீ அவரைக் காதலிக்க முயல்கிருய்!—என்ன சரிதானே?''

''சந்தேகமென்ன, இதுதான் மனோதத்துவத்தின் அடிவாரம் போலிருக்கிறது!''

''ஆஹா! இப்போது வழிக்கு வந்தாயே?—இரண் டாவதாக நீ என்னை உள்ளூரக் காதலித்தாலும் சமூகத்துக்கும் சம்பிரதாயங்களுக்கும் பயந்து விலகு கிருய்! என்ன சரிதானே?''

''சந்தேகமென்ன, இதுதான் மனோதத்துவத்தின் சிகரம் போலிருக்கிறது!''

''ஆமாம் லலிதா, ஆமாம், அதற்காகச் சமூகத்தை எதிர்த்து நாம் போராடவேண்டும்; சம்பிரதாயங்களை எதிர்த்து நாம் போராடவேண்டும்.''

"அதற்குத் தியாகம் செய்யத் தீரம் வேண்டுமே, அது ஏது உங்களுக்கு?"

"வேண்டாமே!—நான் சொல்லும் போர் கத்தியில்லாத போர்; சத்தமில்லாத போர்! நான் சொல்லும் புரட்சி அன்புப் புரட்சி; இன்பப் புரட்சி!—அதைச் செய்ய நீ மட்டும் என் தோளோடு தோள் சேர்ந்து நின்றால் போதும்; அப்புறம் பார்! இந்த உலகத்தில் நாம் எத்தனை பேருக்கு வழிகாட்டிகளாய் மாறிவிடுகிறோம் என்று?"

"ஐயோ! இந்த அழகான உலகத்துக்கு இன்னுமா வழிகாட்டிகள் வேண்டும்? இருப்பவர்கள் போதாதா?"

"போதாது என்றுதான் ஓடோடியும் வந்தேன். ஏனென்று தெரியுமா, எதற்கு என்று தெரியுமா?"

"ஏனென்றும் நான் உங்களைக் கேட்கவில்லை; எதற்கு என்றும நான் உங்களைக் கேட்கவில்லை!"

"கேட்காவிட்டால் என்ன?—சொல்வது என் கடமை; சொலகிறேன். வாழ்ந்தால் உன்னுடன் வாழ வேண்டும்; இல்லாவிட்டால் சாகவேண்டும். இதுவே என் முடிவு; நீ என்ன சொல்கிறாய்?—என்னைக் காப்பாற்றப் போகிறாயா? கைவிடப் போகிறாயா?"

நான் மௌனமாயிருந்தேன்.

"சொல் லலிதா? உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன்?—உனது சோகமயமான வாழ்வைக் கண்டு அனுதாபமுற்றேன்; அனுதாபம் காதலாய் மாறியது —அவ்வளவுதான்! அதற்காக என்னைக் கொன்று விடாதே லலிதா, கொன்றுவிடாதே! கடைசி முறையாகக் கேட்கிறேன். 'உங்களை நான் காதலிக்கிறேன்!'

என்ற உண்மையை ஒரு தடவை. ஒரே ஒரு தடவை சொல். அதைக் கேட்டு என் கண்கள் மலரட்டும்; காதுகள் குளிரட்டும்—சொல் லலிதா சொல்!" என்று கண் கலங்க பல்லெல்லாம் தெரியக் கெஞ்சு கெஞ் சென்று கெஞ்சினார் அவர்.

அவமானம் தாங்காமல் முகம் சிவந்துதான் அவரை நோக்கினேன்.

"சொல் லலிதா, சொல்! — காதல்கொண்ட நெஞ்சத்தை உடைத்தெறிந்த பாவம் உன்னைச் சேரப் போகிறது! இதோ இன்றே இப்பொழுதே ஓடும் ரயிலி லிருந்து கீழே குதித்து நான் உயிர்விடப் போகிறேன். என்னை நீ தடுக்காவிட்டால நான் சாவது நிச்சயம் லலிதா, சாவது நிச்சயம்!" என்று அவர் எழுந்தார்.

நான் தடுக்கவில்லை!

அவரோ கதவைத் திறந்துகொண்டு, "இதோ, இன்றே, இப்பொழுதே..." என்று என்னைப் பார்த்துப் பார்த்துப் பயமுறுத்திக்கொண்டிருந்தார்.

அந்தப் பெட்டியின் மூலையிலிருந்து ஓர் உருவம் திடீரென்று எழுந்து வந்து அவருடைய கழுத்தில் கை வைத்தது.

நான் திகைத்தேன்; பயந்து கூவ முயன்றேன்— தொண்டை அடைத்தது.

வந்தது யார்? ஸ்ரீமான் லங்கேஸ்வரனைத் தள்ள வந்தவனா? தடுத்தாட்கொள்ள வந்தவனா?

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

# 13. தீ, தீ!

"கோழைகள்தான் தற்கொலை செய்துகொள் வார்கள்!" என்று சில தைரியசாலிகள் சொல்வதுண்டு. ஆனால், உண்மை அதுவல்ல—தன்னை உயர்ந்தோனாக, ஒளிபடைத்த கண்ணனாக, உறுதிகொண்ட நெஞ்சனாக, சிறுமை கண்டு சீறும் பொய்மை கண்டு பொங்கும் ஒழுக்கமிக்கவனாகத் தன்னை வாழவைக்காத வறுமைக்காக, அந்த வறுமையை வர்க்க ரீதியாக, வாழவைக்கும் உலகத்துக்காகத் தன்னைத் தானே தனக்காகத் தியாகம் செய்து கொள்ளத் தைரியம் வேண்டும்.

அந்தத் தைரியம் இல்லாதவர்கள் "இதோ தற்கொலை செய்துகொள்கிறேன், இதோ தற்கொலை செய்துகொள்கிறேன்!" என்று தாம் வாழப் பிறரைப் பயமுறுத்துவார்களே தவிர, ஒருநாளும் தற்கொலை செய்து கொள்ளமாட்டார்கள். அதற்கு வேண்டிய தைரியமும் அவர்களுக்கு இருக்காது.

தன்னலக்காரர்களான அந்தக் கோழைகளுக்குத் தலை வணங்குவதைவிட, அவர்களைத் தற்கொலை செய்துகொள்ள விட்டுவிடுவதே மேல் என்பதை நான் அறிவேன். அதனாலேயே ஸ்ரீமான் லங்கேஸ்வரனை

நான் தடுக்கவில்லை. அப்படித் தடுப்பது எனக்கும் தீமை பயப்பதாகுமல்லவா?

அந்தத் தீமையைத் தைரியத்தனமாகச் செய்ய வந்திருக்கும் இவர் யாராயிருக்கும்?

ஒருவேளை 'அவ'ராயிருக்குமோ? பிரத்தியட்ச உண்மைகளுக்குப் பரிகாரம் தேடுவதற்காக அவர் என்னைப் பின்பற்றி வந்திருப்பாரோ?

அப்படி வந்திருந்தால் அவர் இப்போது என்ன செய்வார்?

ஸ்ரீமான் லங்கேஸ்வரனுக்குத் துணைவியாக இருக்க விரும்பாத என்னை வேறு எவனுக்காவது மூன்றாவது துணைவியாக்கி விட்டுவிட்டுப் போய்விடுவாரா?

அப்படி ஏதாவது நடந்துவிட்டால் என்ன செய்வது? அவரிடமிருந்தும் அவருடைய 'அன்புப் பணி' யிலிருந்தும் எப்படித் தப்பிப் பிழைப்பது!

இந்த வேதனையுடன் நான் அவர்களை மாறி மாறிப் பார்த்தேன்.

"என்னைத் தடுக்காதே!" என்று ஸ்ரீமான் லங்கேஸ்வரன் என்னைக் கடைக் கண்ணால் கவனித்துக் கொண்டே கத்தினார்.

"தடுக்க வரவில்லை; தள்ள வந்திருக்கிறேன்!" என்றது அந்த உருவம்.

அதன் குரல் அவருடைய குரலாயிருக்கவில்லை; சாட்சாத் சாம்புவின் குரலாயிருக்கிறது.

“நல்ல வேளை, பிழைத்தேன்!” என்று பெருமூச்சு விட்டேன்.

ஆனால், ‘தள்ள வந்திருக்கிறேன்!’ என்று அவன் சொன்னதும், ‘நன்றி!’ என்று அவர் சொல்லவில்லை; சொல்வார் என்று நானும் எதிர்பார்க்கவில்லை.

எப்படி எதிர்பார்க்க முடியும்? தன் விருப்பம்போல் தான் வாழ முடியாதபோது தற்கொலை செய்துகொள்ள விரும்பும் ஒருவன்—தனக்காகத் தன்னைத் தானே தியாகம் செய்துகொள்ள விரும்பும் ஒருவன்—பிறர் தன்னைத் தடுத்தாட்கொள்ள வேண்டுமென்றோ, தனக்காகத் தங்களையும் தங்கள் லட்சியத்தையும் பலி கொடுக்க வேண்டுமென்றோ விரும்புவானா? விரும்பத் தகாத அந்த விருப்பத்தை வெட்கமில்லாமல் வெளியே சொல்லிக்கொண்டுதான் நிற்பானா?

நடப்பதற்குமுன் தெரியாமல் நடந்தபின் தெரிவதுதானே தற்கொலை? தன்னிகரில்லாத தன்னலத் தியாகம்?

அந்தத் தியாகத்தைச் செய்ய இந்தக் கோழைக்குத் தைரியம் ஏது? தன்மானந்தான் ஏது?

எனவே, அவன் வந்து கழுத்தில் கைவைத்ததும் அவர் பாடு தர்ம சங்கடமாகப் போய்விட்டது. தடுமாறினார்; தன்னைத் தானே தடுத்தாட்கொள்ள முயன்றார். அவன் விடவில்லை; விடவேயில்லை.

எனக்கு வேடிக்கை ஒரு பக்கம்; வேதனை இன்னொரு பக்கம். இந்த இரண்டுக்கும் நடுவே, ‘இவன் எப்படி இங்கே வந்தான்?’ என்ற கேள்வியை வேறு என் உள்ளம் எழுப்பி விட்டுப் பதிலையும் தானே தேடிக்

கொண்டிருந்தது!...இந்த நிலையில், "என்ன சொல்கிறீர்கள், சொல்லுங்கள்?" என்று உறுமினான் சாம்பு.

"என்னைத் தள்ளத்தான் போகிறாயா, எதற்கு?" என்று அழாக் குறையாகக் கேட்டார் ஸ்ரீமான் லங்கேஸ்வரன்.

"தமிழ்ப் பெண்ணின் மானத்தையும் தமிழ் நாட்டின் மானத்தையும் காப்பதற்காக உங்களைத் தள்ளிவிட்டு நான் போலீஸாரிடம் சரணடையப் போகிறேன்!" என்றான் அவன் கம்பீரமாக.

அவ்வளவுதான்; "ஐயோ! வேண்டாம், வேண்டவே வேண்டாம்!" என்று அவர் அலறினார்.

"அப்படியானால் தற்கொலை செய்து கொள்ள முயன்ற குற்றத்துக்காக உங்களை நான் போலீஸார் வசம் ஒப்புவிக்கப் போகிறேன்!" என்றான் அவன் அழுத்தந் திருத்தமாக.

ஸ்ரீமான் லங்கேஸ்வரன், என்ன செய்வார், பாவம்!

அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றதும் "தப்பினேன்; பிழைத்தேன்!" என்று தலைதெறிக்கப் பிடித்தார் ஓட்டம்!

'இடியிடி' என்று சிரித்துகொண்டே என்னை நோக்கித் திரும்பினான் சாம்பு.

"நீ எப்படி இங்கே வந்தாய்?" என்றேன் நான் வியப்புடன்.

"அந்தப் புண்ணியவானைப் பார்த்த பிறகு என்னால் எப்படி அம்மா மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்ய முடியும்? சட்டத்துக்கு விரோதமாயிருந்தாலும்

பரவாயில்லை என்று இரண்டாம் வகுப்பிலேயே பிரயாணம் செய்ய ஆரம்பித்துவிட்டேன், அம்மா!'' என்றான் அவன்.

மறுநாள் காலை; என் கணவரின் திருக்கரத்தைப் பற்றியவாறு நுழைந்த அந்த வீட்டிற்குள் அவரும் இல்லாமல் அவருடைய திருக்கரமும் இல்லாமல் உள்ளே நுழைந்தேன்.

அன்று...

என்னென்ன பெருமைகளோடு இந்த வீட்டில் நுழைந்தேன்?

இன்று...

என்னென்ன சிறுமைகளோடு இந்த வீட்டில் நுழைகிறேன்?

அன்று...

ஆரத்தி எடுத்து அரவணைத்து வாழ்த்துக் கூறி என்னை வரவேற்றாள் அத்தை!

'வாம்மா, வா!' என்று வாய் நிறைய அழைத்து மனம் நிறைய வாழ்த்தினார் மாமா!

'அக்கா!' என்று ஆர்வத்தோடு வந்து என் கால்களைக் கட்டிக் கொண்டாள் குழந்தை லக்ஷ்மி.

இன்று...

கணவனைப் பிரியாமல் பிரிந்து, கால்களின் பிடியில் சிக்காமல் சிக்கி, சீரழியாமல் சீரழிந்து வரும் என்னை வாழ்த்த வேண்டாம் அத்தை; வரவேற்க வேண்டாம் அத்தை! முகத்தைச் சுளிக்காமல் இருந்

திருக்கக் கூடாதா? வசைபாடாமல் இருந்திருக்கக் கூடாதா?

'வாம்மா, வா!' என்று வாய் நிறைய அழைக்க வேண்டாம் மாமா; மனம் நிறைய வாழ்த்த வேண்டாம் மாமா; 'கர்மம், கர்மம்!' எனக் காறித் துப்பாமல் இருந்திருக்கக் கூடாதா? 'விதிவிதி' என்று தலையில் அடித்துக் கொள்ளாமல் இருந்திருக்கக் கூடாதா?

இவர்கள் தான் பெரியவர்கள்; என்ன காரணத் தாலோ என்னை வெறுக்கிறார்கள். அந்தக் குழந்தை லக்ஷ்மியாவது என்னைக் கண்டதும் 'அக்கா!' என்று ஓடி வரலாமல்லவா? ஆர்வத்தோடு என் கைகளைப் பற்றி, 'ஏன் அக்கா, எனக்கு என்ன வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாய்?' என்று குதிக்கலாமல்லவா? என் கையிலிருக்கும் பையிலுள்ள பழங்களையும், பண்டங் களையும் எடுத்துத் தின்னலாமல்லவா?

உஹூம். அதுவும் முகத்தை 'உம்' என்று வைத்துக்கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தது.

அதையும் பொருட்படுத்தாமல், "இங்கே வா, லக்ஷ்மி!" என்று துக்கம தொண்டையை அடைகக நான் அவளை அழைத்தேன்.

"வயமாட்டேன், போ!" என்று தன் மழலைச் சொற்களால் அவள் மனத்தைக் குத்தினாள்.

"உன் அக்கா உனக்குமா வேண்டாதவளாகி விட்டாள்!" என்றேன் நான் கண்களில் நீர் துளிக்க.

"ஹூக்கும்; அக்காளாம் அக்கா! அம்மாவுக்குப் பிடிக்காத அக்கா எனக்கு மட்டும்" பிடிக்குமாக்கும் என்றாள் அவள்.

அவ்வளவுதான், "எவன் எப்படிப் போனால் உனக்கு என்னடி?" என்று அவள் முதுகில் 'பளார்' என்று அறைந்து அவளை இழுத்துக் கொண்டு அப்பால் சென்றாள் அத்தை!

எனக்கு ஒன்றும் புரியவில்லை. "என்னைக் கண்டதும் ஏன் இப்படி எரிந்து விழுகிறீர்கள்? அப்படி என்ன தான் செய்துவிட்டேன்? வந்தவளை 'வா!' என்று கூட அழைக்க மாட்டேன் என்கிறீர்கள்?" என்று மனம் உடைந்து கேட்டு விட்டேன்.

"நாங்கள் யாரம்மா உன்னை 'வா!' என்று அழைக்க 'போ!' என்று விரட்ட? இனிமேல் நீதானே இந்த வீட்டுக்கு எஜமானி? உன்னை யார் என்ன கேட்க முடியும்?" என்றாள் அத்தை.

அவளுடைய பேச்சை அதற்குமேல் என்னால் கேட்க முடியவில்லை; கேட்கப் பொறுமையும் என்னிடம் இல்லை.

"இதென்ன பேச்சு? தயவுசெய்து இப்படியெல்லாம் இனிமேல் பேசாதீர்கள்?" என்று மட்டும் சொல்லிவிட்டு மாடிக்குச் சென்றேன். பெட்டிப் படுக்கையை எடுத்துக் கொண்டு என்னைத் தொடர்ந்து வந்தான் சாம்பு.

"பாவி எங்கிருந்தோ வந்தான். இந்தக் குடும்பத்தைக் குலைக்க!" என்று அவனுக்குப் பின்னால் அத்தை கடுகடுத்தது என் காதில் விழுந்தது.

யார் அந்தப் பாவி? சாம்புவா அந்தப் பாவி?

ஆம்; அவன்தான் அந்தப் பாவி என்று அடுத்த நிமிஷமே எனக்குத் தெரிந்துவிட்டது. குளிப்பதற்

காகச் சோப்பை எடுத்துக்கொண்டு கீழே இறங்கிய நான், "இதோ பாருங்கள். நான் பொய் சொன்னாலும் என் காமிரா பொய் சொல்லுமா!" என்று ஏதோ ஒரு 'போட்டோ'வைத் தன்னைச் சுற்றி இருந்தவர்களிடம் காட்டி, என் அத்தான் ஏதோ சொல்லிக் கேலி செய்து கொண்டிருந்ததைக் கேட்டுத் திடுக்கிட்டு நின்றேன்.

"போயும் போயும் சமையற்காரன் தொடர்புதானா கிடைக்கணும் இவளுக்கு" என்று பொன்மொழி புகன்றான் என் அத்தான்.

அவ்வளவுதான்; அந்தப் 'புண்ணியாத்'மாவைச் சுற்றி இருந்தவர்களெல்லாம் 'கொல்' என்று சிரித்தார்கள்.

# 14. "போச்சு, போச்சு!"

என் கணவரின் 'அன்பும் பணி'க்கு முன்னால் என்னை யாராவது பார்த்துச் சிரித்தால் அவர்களைப் பார்த்து நானும் சிரித்துவிடுவது வழக்கம். அந்த வழக்கத்தையொட்டி இன்று என்னால் சிரிக்க முடிய வில்லை; செயலற்று நின்றேன். இந்தச் சமயத்தில் எங்கிருந்தோ கத்தி ஒன்று என் அத்தானை நோக்கி விர்ரென்று பறந்து வந்தது!

திடுக்கிட்ட நான் அதைத் தாவிப் பிடித்துத் தடுத்துத் திரும்பினேன். சீதாதேவிக்கு முன்னால் விசுவ ரூபம் எடுத்து நின்ற ஆஞ்சநேயன் போல் சாம்பு நின்றான்.

"உன்னுடைய கத்தி அவரைக் கொல்லலாம்; உன்மேல் அவர் சுமத்திவிட்ட பழியைக் கொல்லுமா?" என்றேன் நான்.

"அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை; அவன் சாகத்தான் வேண்டும்!" என்னையும் மீறி அவர்மேல் பாய்ந்தான் சாம்பு.

அதற்குமேல் அவர் அங்கே நிற்கவில்லை. எடுத்தார் ஓட்டம்! அன்றிலிருந்து நெருப்புக் கோழி

பூமியில் தலையைப் புதைத்துக் கொள்ளுமாமே, அப்படித்தான் ஆகிவிட்டது என்னுடைய நிலையும்!

அசூயை மிக்க உறவினரின் பார்வையிலிருந்தும், அபவாதம் மிக்க ஊராரின் பேச்சிலிருந்தும் தப்புவதற்காக என்னை நானே சிறைப்படுத்திக் கொண்டேன்—எங்கள் வீட்டு மாடி அறையில்தான்!

என்னைக் கண்டால் என்ன, காணவிட்டால்தான் என்ன? கதை கட்டிவிடுபவர்கள் அவர்கள் பாட்டுக்குக் கதை கட்டி விட்டுக்கொண்டே இருந்தார்கள்.

அவர்களுக்கு என்மேல் அனுதாபம் இல்லாவிட்டாலும் அதைக் கேட்பவர்களுக்கு அறிவாவது இருந்திருக்கலாம்—அதுவும் இல்லை!

இந்த நிலையில் இருந்த என்னை ஒரு நாள் பார்க்க வந்தாள் காந்தா.

வந்தவளைப் பார்த்து 'வா!' என்று சொல்லக்கூட வாயில்லாமல் நான் தலை குனிந்து நின்றேன்.

"என்ன லலிதா! அதற்குள் அவ்வளவு தூரம் மாறி விட்டாயா என்ன? நினைத்தவுடன் வேண்டாம் என்று ஒதுக்கி வைத்துவிட நான் என்ன உன் கணவனா?" என்று குத்தலாகக் கேட்டாள் அவள்.

நான் தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தேன். என் கண்களில் கனல் பிறக்கவில்லை; கண்ணீர்தான் பெருக்கெடுத்தது.

"கண்ணீரால் எல்லாவற்றையும் கழுவிவிட முடியாது லலிதா!" என்றாள் காந்தா.

"ஐயோ, காந்தா! நீயுமா என்னைச் சந்தேகிக்கிறாய்? ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க மனிதர்களாகிய

நமக்குக் கண்கள் இருக்கின்றன பார்க்கிறோம். ஒரு விஷயத்தைக் கேட்க மனிதர்களாகிய நமக்குக் காதுகள் இருக்கின்றன கேட்கிறோம். அதுபோலவே ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கவும் கேட்கவும் கண்களும் காதுகளும ஐந்தறிவே படைத்த மிருகங்களுக்கும் இருக்கத்தான் இருக்கின்றன. அவைகளும் அவற்றைக் கொண்டு பார்க்கத்தான் பார்க்கின்றன; கேட்கத்தான் கேட்கின்றன. ஆனால், காந்தா மனிதர்களாகிய நாம் தான் அவற்றைப்பற்றிச் சிந்திக்கிறோம்; சீர் தூக்கிப் பார்க்கிறோம்; இல்லையா! அந்தச் சீர் தூக்கிப் பார்க்கும் திறனை நீயுமா இழந்து விட்டாய்?" என்று கத்தினேன்.

அதைப் பொருட்படுத்தாமல் எங்கள் இருவருக்கும் காபி கொண்டு வந்து வைத்து விட்டுச் சென்ற சாம்புவையே அவள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு, "அட கடவுளே!" என்று என் பக்கம் திரும்பி, "இப்பொழுது மட்டுமல்ல, அப்பொழுதே நான் உன்னைப் பற்றிச் சந்தேகித்த துண்டு. ஆனால், என் சந்தேகத்துக்கு ஆளானவன் சாம்பு அல்ல; ஒரு காலத்தில் என் காதலுக்கு உரியவராயிருந்த ஸ்ரீமான் லங்கேஸ்வரன்தான்!" என்றாள்.

"உன்னுடைய காதலுக்கு மட்டுமா, வேறு எத்தனையோ பேருடைய காதலுக்கு அவர் உரியவரா யிருந்திருக்கிறார். ஆனால், அவருடைய காதலுக்குத் தான் எவளும் உரியவளாயிருக்கவில்லை!" என்றேன் நான் ஆத்திரத்துடன்.

"உனக்குத் தெரியாது; உன்னைச் சந்திப்பதற்கு முன்னால் அவருடைய காதலுக்கு நான் உரியவளாகத் தான் இருந்தேன்!" என்று அடித்துச் சொன்னாள்.

"யோசித்துப் பார் காந்தா! நீ சொல்வது உண்மையாயிருந்தால் உன்னை இன்னொருவனுக்கு அவரால் மனைவியாக்கியிருக்க முடியுமா? உன்னை மறந்துவிட்டு என்னைத்தான் அவரால் காதலித்திருக்க முடியுமா?" என்றேன் நான்.

"முடியாது தான்!" என்றாள் அவள்.

"சரி, உன்னை ஒன்று கேட்கிறேன், பதில் சொல்லுகிறாயா?"

"என்ன கேட்கப் போகிறாய்?"

"ஒன்றுமில்லை; என்னுடைய நிலை உனக்கு ஏற்பட்டால் நீ என்ன செய்வாய்?"

"எனக்கா? உன்னுடைய நிலையா? அப்படியென்றால்?"

"இல்லையில்லை; என் கணவருக்கு ஏற்பட்ட நிலை உன் கணவருக்கு ஏற்பட்டால் நீ என்ன செய்வாய்?"

"அதை எப்படி நான் இப்பொழுது சொல்ல முடியும்? நானும் மனிதப் பிறவிதானே? தவற மாட்டேன் என்று சாதிக்க முடியுமா?"

"சபாஷ்! என்னைப்பற்றி நீ என்ன நினைத்தாலும் சரி, இனி எனக்குக் கவலையில்லை. உன்னையே நம்ப முடியாத நீ என்னை நம்ப முடியுமா?" என்றேன் நான்.

"இப்படியெல்லாம் பேசி நீ செய்த தவறுக்குத் திரைபோட முயலாதே. என்னிடமாவது உண்மையைச் சொல்?" என்றாள் அவள்.

"சொல்லி என்ன பிரயோசனம்? உன்னைப் போன்றவர்களுக்கு உண்மை புரியாது காந்தா! நீ

உணர்ச்சியின் அடிமை; நானே உணர்ச்சியின் அரசி. என்னால் உணர்ச்சியை ஆளமுடியும்; உன்னால் உணர்ச்சிக்கு அடிமையாய்த்தான் இருக்க முடியும். போய் வா காந்தா, போய் வா!'' என்று நான் எழுந்தேன்.

மாடிப் படியில் தடதட வென்ற காலடி யோசை கேட்டது. அதைத் தொடர்ந்து, "போச்சு, போச்சு. என் மானம் மரியாதை எல்லாமே போச்சு!'' என்ற அலறலும் கேட்டது.

அந்த அலறலுக்குரியவர் ஸ்ரீமான் லங்கேஸ்வரன் தான் என்பதைத் தெரிந்துகொண்ட காந்தா, என் அறைக்குள் ஓடி ஒளிந்து கொண்டாள்—எதற்கோ?

நான் நின்ற இடத்திலேயே நின்றேன். அவர் வந்தார். "இதோ பார் லலிதா!'' என்று அத்தானின் 'அழகுப் பத்திரிகை' யொன்றை எடுத்து எனக்கு முன்னால் வீசி எறிந்தார். என்னையும் ஸ்ரீமான் லங்கேஸ்வரனையும் சம்பந்தப்படுத்தி அதில் ஏதாவது எழுதப்பட்டிருக்கும் என்பதை ஊகித்துக் கொண்ட நான், "என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள் அதற்கு?'' என்றேன்.

"ஒன்றும் செய்ய வேண்டாம். எனக்கும் உனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று நீ எனக்காக நீதி மன்றத்திற்கு வந்து சாட்சி சொன்னால் போதும்—அந்த யோக்கியனின் மேல் மான நஷ்ட வழக்குப் போட்டு ரூபாய் ஐம்பதினாயிரம் வாங்கி விடுவேன்!'' என்றார் அவர்.

"ஏன், நீங்கள் என்னுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ள விரும்பவில்லையா?''

"விரும்பாமலென்ன, நான் உயிர் வாழ்வதே அதற்காகத்தானே? ஆனால், உனக்கும் எனக்கும் மட்டுமே அது தெரிய வேண்டும். உலகத்துக்குத் தெரியக் கூடாது. இதில்தான் கௌரவத்தின் ரகசியம், காதலின் ரகசியம், அன்பின் ரகசியம், பண்பின் ரகசியம் எல்லாம் அடங்கியிருக்கிறது?"

"ஓஹோ!"—என்று நான் உள்ளே சென்றேன்; ரூபாய் ஐம்பதாயிரத்தைக் கொண்டுவந்து அவருக்கு எதிர்த்தாறபோல் வைத்தேன்.

"இது எதற்கு?" என்று அவர் வாயைப் பிளந்தார்.

"உங்களுடைய மான நஷ்டத்திற்கு?"

"என்னுடைய மான நஷ்டத்திற்கு நீ ஏன் பணம் கொடுககவேண்டும்?"

"உங்களுடைய மான நஷ்டத்திற்கு நான் தானே காரணம்? அதனால்தான் கொடுக்கிறேன்; எடுத்துக் கொள்ளுங்கள்!"

அவர் எடுத்துக்கொண்டார்.

"இப்பொழுது சொல்லுங்கள் — உங்களுடைய மானத்தில் உங்களுக்கு நஷ்டமா, லாபமா?" என்றேன் நான்.

"லாபந்தான்!" என்றார் அவர்.

"சரி, போய்வாருங்கள்—இத்துடனாவது என்னை மறந்துவிடுங்கள்!"

"இனிமேல் நானாவது, உன்னை நினைப்பதாவது!" என்று சொல்லிக்கொண்டே அவர் திரும்பினார்.

"நில்லடா, மானங்கெட்டவனே" என்று அவருக்கு எதிர்த்தாற்போல் வந்து நின்றாள் காந்தா.

"அவரைத் தடுக்காதே! அவருக்கு எது வேண்டுமோ அது கிடைத்துவிட்டது; அவர் போகட்டும்!" என்றேன் நான்.

"முடியாது! என் கணவரை அயோக்கியன் என்று சொல்லிக்கொண்டு திரிந்த இவன் என்னிடம் மன்னிப்புக் கோரவேண்டும், அப்பொழுதுதான் இவனை நான் வெளியே விடுவேன்!" என்றாள் அவள்.

"இவ்வளவுதானே? என்னை மன்னித்துவிடு, காந்தா!" என்று சொல்லிவிட்டு அவர் எடுத்தார் ஓட்டம்!

"காந்தா, நீ ஒரு காரியம் செய்யவேண்டும்" என்றேன் நான்.

"என்ன காரியம்" என்றாள் அவள்.

"அன்புப் பணி புரிபவர்களெல்லாம் தாங்கள் செய்யும் அருந்தொண்டை நிறுத்திக்கொண்டால் தலைக்கு ரூபாய் ஐயாயிரம் பரிசு அளிப்பதாக நீ அறிவிக்க வேண்டும். அதற்கு வேண்டிய தொகையை உனக்கு நான் அளிக்கிறேன்!"

"இது என்ன பரிசு? இதுவரை நான் கேள்விப் படாத பரிசாயிருக்கிறதே!"

"அதனாலென்ன, எனக்காக நீ இதைச் செய்யத் தான் வேண்டும். என்ன சொல்கிறாய்?"

"அப்படியே செய்கிறேன்!" என்றாள் அவள். இந்தச் சமயத்தில் சாம்பு ஓடோடியும் வந்து,

"அம்மம்மா, உங்கள் மாமா, அத்தையையும் லக்ஷ்மியையும அழைத்துக்கொண்டு காசி யாத்திரை கிளம்பிவிட்டார்?" என்று பரபரத்தான்.

"எப்போது போனுர்கள், எப்படிப் போனுர்கள்?" என்று துடிதுடித்தாள் காந்தா.

"இப்போதுதான்; இப்படித்தான்!" என்று அவர்கள் போன திசையைக் காட்டினுள் சாம்பு.

காந்தா பறந்தாள்!

என்னைப் பொறுத்தவரை எந்தவிதமான சலனத்தையும காட்டிக்கொள்ளாமல் நான் அணிந்திருந்த நகைகள் எல்லாவற்றையும் கழற்றிச் சாம்புவுக்கு எதிர்த்தார்ப்போல் வைத்தேன்.

"இதெல்லாம ஏதற்கு?" என்று பிரமித்தான் அவன்.

"உனக்குத்தான், என்னுல அபவாதத்துக்குள்ளான உனக்குத்தான்!" என்றேன் நான்.

"ஐயோ, வேண்டாம்! இந்தச் சைத்தான்கள் என்னைக் கெடுத்துவிடும். நான் மனிதனுகப் பிறந்தேன்; மனிதனுகவே சாகிறேன்! என்னை மன்னித்து விடுங்களம்மா, தயவு செய்து மன்னித்து விடுங்கள!" என்று அவன் அலறினுன்.

அதே சமயத்தில் எங்கிருந்தோ கத்தி ஒன்று பறந்துவந்து அவன் முதுகைத்துளைத்தது. "அம்மா" என்று அலறிக் கொண்டே அவன் கீழே சாய்ந்தான்.

அவனுடைய அலறல் அன்பே அலறுவது போல் இருந்தது எனக்கு!

அதற்கேற்றாற்போல, "பார் லலிதா, பார்! அன்பு அலறுகிறது! பார் லலிதா பார்!" என்று கொக்கரித்துக்கொண்டே என்னை நோக்கி வந்தான் என் அத்தான்.

"எவ்வளவோ கோழையாயிருந்த உனக்கு என்னாலல்லவோ இவ்வளவு தைரியம் வந்திருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே அவன் வீசிய கத்தியை எடுத்து நான் அவனை நோக்கி வீசினேன்.

குறி தப்பவில்லை; சாய்ந்தான் கீழே!

அதற்குமேல் நான் தாமதிக்கவில்லை. ரத்தக்கறை படிந்த கையால் ஒரு கடிதம் எழுதினேன்—அந்தக் கடிதம் இதுதான்:

"வாழ்கின்ற — வாழப்போகிற ஜீவன்களையெல்லாம் அணைகின்ற—அணையப் போகின்ற ஒரு ஜீவன் அன்போடு வேண்டிக்கொள்வது என்னவென்றால், உலகத்தின் நன்மைக்காக ஒழுக்கத்தின் வளர்ச்சிக்காக அன்பின் பெருக்குக்காக பண்பின் சிகரத்துக்காக —நீங்கள் அன்புப் பணிபுரிய முன் வரவேண்டாம்!

ஏனெனில், அன்புக்குப் பிரசாரம் தேவை இல்லை!

பார்க்கப்போனால் அன்பின் எல்லை மிகக் குறுகியது. மிக நுண்ணியது. மற்றதெல்லாம் நட்பு; அதற்கும் எல்லை உண்டு. அந்த எல்லையை மீறினால் இன்பமில்லை; துன்பமே!

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே உள்ள இதயப்பிணைப்பாயிருந்தாலும் சரி, தாய்க்கும் மகனுக்கும் இடையே உள்ள பாசப் பிணைப்பாயிருந்தாலும் சரி—கைம்மாறு கோராமல், கைம்மாறு எதிர்பார்க்காமல் இன்ப துன்பங்களில் பங்கேற்று வாழும் முறை இயற்கையானது; எந்தப் பிரசாரத்தின் விளைவாலும் ஏற்பட்டதல்ல.

அது மனித இயல்பு; நியதி! ஆம்; அதுதான் அன்பு!

கொடிய மிருகங்கள் கூட விளையாடுகின்றன; காதல் புரிகின்றன, பெற்று வளர்த்துப் பேணிக் காக்கின்றன.

அவற்றின் நடுவே ·சென்று அன்புப் பணி செய்தது யார்?

நானும் இல்லை; நீங்களும் இல்லை! எனவே கணவனுக்காக மனைவியும்—மனைவிக்காக கணவனும் மக்களுக்காகப் பெற்றோரும், பெற்றோருக்காக மக்களும்—எந்த நிலையிலும் தியாக உணர்வோடு, சகிப்புத் தன்மையோடு வாழ்பவர்களை அப்படியே வாழவிடுங்கள். அவர்களுக்கு இடையே சென்று தயவு செய்து அன்புப்பணி செய்யாதீர்கள்.

தனக்குக் குறை நேர்ந்துவிட்டது என்று உணர்ந்த ஆண் மகன் அந்தக் குறை தனக்கு மட்டும் நேர்ந்த குறையாக ஏன் உணரவேண்டும்? இன்பம், துன்பம் எதிலும், பங்கு பெற வந்தவள் அல்லவா அவன் மனைவி? அவளுக்கும் அந்தக் குறை நேர்ந்துவிட்டதாக உணரக்கூடாதா? உணர்ந்து, அதற்குத் தக்கபடி நடந்து கொள்ளக் கூடாதா?

இயற்கையாக, எதிர்பாராது நேர்ந்துவிட்ட ஒரு குறைக்காக நம் கற்பு, கடமை, கண்ணியம், கலாசாரம் ஆகியவற்றையெல்லாம் குறைபடுத்திக் கொள்ள வேண்டுமா?

நடைமுறைக்கு இதுவா பரிகாரம்? நாகரிகத்துக்கு இதுவா திறவுகோல்? இல்லை; இல்லவே இல்லை!

எந்தத் தத்துவமாயிருந்தாலும் சரி, எந்தச் சித்தாந்தமாயிருந்தாலும் சரி—வாழ்க்கையை அது உருவாக்க வேண்டும்; உருக் குலைக்கக் கூடாது.

கடமைகளை வற்புறுத்த வேண்டும்; மடமைகளை வற்புறுத்தக் கூடாது. வளர்ந்து வரும் தியாக உணர்வை வளர்க்க வேண்டும்; வெறும் சபலங்களால் நப்பாசைகளால் அதை நாசமாக்கக்கூடாது.

இதுவே என் வேண்டுகோள்; இதற்காக நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் 'அன்புப் பணி' செய்யாமலிருப்பதே!

அதற்குப் பரிசாக ரூபாய் ஐயாயிரம் ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொருவரைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பதற்காக எனக்குச் சொந்தமான சொத்துக்கள் பூராவையும் என் தோழி காந்தா பயன்படுத்த வேண்டும்! அந்தக் கடமையிலிருந்து அவள் தவறினால் அரசாங்கமே பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். கடைசியாகச் சொல்லுகிறேன்: என் வாழ்க்கை உங்களுக்கோர் எச்சரிக்கை!

புதிது புதிதாகக் கிளம்பும் தத்துவங்களையும் சித்தாந்தங்களையும் நாம் வளர்க்கவேண்டாம். அவை தாமாகவே வளர்ந்தன. வளர்ந்து வருகின்றன; வளர்ந்து வரப்போகின்றன. அவற்றைப் புரிந்து கொண்டு அவற்றுக்கு ஏற்றபடி வாழும் சக்தியை மட்டும் நமக்கு நாமே வளர்த்துக்கொண்டால் போதும்!

அதற்கு என்னைவிட்டுவைக்க விரும்பாததால் தான் என் அத்தானை நான் கொன்றேன். அவனைக் கொன்றதற்காக நான் வருந்தவில்லை; மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்த மகிழ்ச்சியை நீதி மன்றத்தில் பலியிட நான் விரும்பவில்லை. அதற்குப் பதிலாக என்னை நானே எனக்கு என்னையே பலியிட்டுக் கொள்கிறேன்—ஓம், சாந்தி!''

கடிதத்தை எழுதி முடித்ததும் என் கண்ணில் பட்டது விஷம்!

ஆம்; என் கணவர் ஒருநாள் ஆஸ்பத்திரியில் அருந்த நினைத்தாரே அது விஷம்தான். அன்று வெறுத்த அதை இன்று விரும்பிக் கையில் எடுத்தேன்; குடித்தேன்.

"ஐயோ லலிதா, இதெல்லாம் என்ன?" என்று அலறிக் கொண்டே ஓடிவந்தாள் காந்தா.

அவளுடைய அலறலும் அன்பே அலறுவது போல் இருந்தது எனக்கு!

கடிதத்தை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டுக் கண்களை மூடினேன்; அவ்வளவுதான்; அதற்குப் பின் திறக்கவேயில்லை.

* * *

கதையைச் சொல்லி முடித்ததும், "நீங்களாவது எனக்காக என்னைப்போன்ற உங்கள் மனைவிக்காக 'அன்புப்பணி' புரியாமல் இருப்பீர்களா?" என்று சோகமே உருவாய்க் கேட்டாள் என் கனவிலே வந்த கட்டழகி.

"புரியமாட்டேன் அம்மா, நிச்சயம் புரிய மாட்டேன்" என்று கைகூப்பி விடை கொடுத்தேன்.

"தோட்டத்தில் படுத்தது போதும்; எழுந்து வாருங்கள் உள்ளே!" என்று என்னைத் தட்டி எழுப்பினாள் மனைவி.

கையிலிருந்த புத்தகத்தை வீசி எறிந்துவிட்டு நான் அவளைத் தொடர்ந்தேன்.

---

# ஆசிரியரின் பிற நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கண் திறக்குமா? (நாவல்) | ரூ. 11 | 50 |
| 2. | எம். கே. டி. பாகவதர் கதை (வாழ்க்கை வரலாறு) | 12 | 00 |
| 3. | பசி கோவிந்தம் (விமரிசனம்) | 4 | 50 |
| 4. | குட்டிக் கதைகள் (சிறுகதைத் தொகுப்பு) | 5 | 50 |
| 5. | விந்தன் கதைகள் ,, | 15 | 00 |
| 6. | ஒரே உரிமை ,, | 14 | 00 |
| 7. | ஓ. மனிதா (விமரிசனம்) | 12 | 00 |
| 8. | இதோ ஒரு மக்கள் பிரதிநிதி (சிறுகதைத் தொகுப்பு) | 12 | 00 |

விற்பனை உரிமை :

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.**

**41-பி, சிட்கோ தொழிற்பேட்டை,**
**அம்பத்தூர், சென்னை-600 098.**

மூவேந்தர் அச்சகம், சென்னை-14.